# பெரியாழ்வார் பிள்ளைத் தமிழ்

ஆசிரியை

ஸ்ரீமதி T. பதுமாவதியம்மாள்

*( Sister of Pandit S. Krishnaveniammal )*

புத்தக நிலையம்

இராயவரம்

புதுக்கோட்டை ஸ்டேட்

முதற் பதிப்பு
பதிப்புரிமை

Printed at KABEER PRINTING WORKS, Triplicane, Madras

# முன்னுரை

உலகில் அறம் குறைந்து மறம் மிகுங்கால் திருமால் மக்களிடையே தோன்றுகின்றான்; தன்னை அவர்களுள் ஒருவனாகவே பாவிக்கின்றான். அவ்வமயம் அவனுக்கு அருள் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. பலருக்கு அறிவுச்சுடர் கொளுத்துகிறான்; தூயவரைக் காத்து தீயவரைத் தண்டிக்கின்றான். எங்கும் புதிய மாற்றங்கள் காணப்படுகின்றன. மேலிருந்து கீழிறங்குவதாகிய அவன் அவதார இரகசியத்தைச் சான்றோர் அறிந்து ஆனந்தமுறு கின்றனர். இத்துணைச் சீர்மைகள் பல வாய்ந்த திருமால் அவதாரங்களுள் கண்ணன் அவதாரமும் ஒன்று.

நமது சீரிய நாட்டில் தோன்றிய கண்ணன் விளை யாட்டையும் தெய்வத்தன்மையையும் விரும்பாதார் ஒரு வருமிலர். சிறியவர் பெரியவர் என்னும் வேறுபாடின்றி, யாவர் மனத்தையும் மகிழ்வினால் மலரவைப்பவை இவன் விநோதச் செயல்களேயாகும். இச்செயல்களில் எம்பெரு மானுக்குப் பல்லாண்டு பாடியவரும் பக்தியிற் சிறந்தவரு மாகிய பெரியாழ்வார் ஈடுபடுகிறார்; கண்ணன் இளமை இன்னலங்களைப் பலவிதமாகத் தொடுத்துப் பிள்ளைத் தமிழாக வெளியிடுகிறார். அந்நூலில் தெய்வநலம், இலக் கிய இனிப்பு, பதிதிச்சுவை, விளையாட்டுத்திறம் பலவும் பொருந்தியுள்ளன. ஆதலின் முதன்முதலில் உருக்கொண் டெழுந்த இப்பிள்ளைத் தமிழின் பெட்பையும், பெரியாழ் வார் நீர்மையையும், கண்ணன் களியாடல்களையும் யாவ ரும் எளிதில் தெரிந்துகொள்ளும் முறையில் வெளியிட வேண்டுமென்னும் என் பன்னாட்களின் அவா இறைவனரு ளால் இன்று முற்றுப் பெற்றது.

அடியாள் இயற்றிய இப்பிள்ளைத் தமிழின் முதற் பகுதியில் ஆழ்வாரின் அன்பு நிலையும், பிள்ளைத் தமிழின் நீர்மையும், இஃது ஒரு வாழ்த்து நூல் என்பதற்குத் தக்க காரணங்களும், இரண்டாம் பிரிவில் கண்ணன் விளையாட்டுகள் இருபத்தைந்தும் இடங்கொண்டுள்ளன.

இதைச் சிறு ஆராய்ச்சி நூலாகவும் புதிய முறையில் அமைந்த கட்டுரையும் கதையும் கலந்த நூலாகவும் கொள்ளலாம். ஆதலின் இது மாணவருக்கும் பொது மக்களுக்கும் பயன்படுமென நினைக்கிறேன்.

இதை அன்புடன் வெளியிட முன்வந்த செ. மெ. பழனியப்ப செட்டியாரவர்களுக்கும் அச்சேற்றுங்கால் உண்டாகும் பிழைகளைப் போக்கித் தந்த வித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளையவர்களுக்கும் என் நன்றி உரித்தாகுக.

ஆசிரியை.

# பொருளடக்கம்


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| | **I பிரிவு** | | |
| | தோற்றுவாய் | ... | 1 |
| 1. | பெரியாழ்வார் பெட்பு | ... | 2 |
| 2. | பிள்ளைத் தமிழின் பெருமை | ... | 6 |
| 3. | பெரியாழ்வாரின் புண்ணியப் பேறு | ... | 14 |
| 4. | பெரியாழ்வார் மனப்பான்மை | ... | 17 |
| 5. | பிள்ளைத் தமிழும் வாழ்த்து நூலே | ... | 22 |
| | **II பிரிவு** | | |
| 1. | கண்ணன் தோற்றம் | ... | 42 |
| 2. | கண்ணன் அவயவங்களின் அழகு | ... | 43 |
| 3. | கண்ணனைத் தொட்டிலிலிடுதல் | ... | 44 |
| 4. | அம்புலியை அழைத்தல் | ... | 48 |
| 5. | செங்கீரை ஆடுதல் | ... | 50 |
| 6. | சப்பாணி கொட்டுதல் | ... | 51 |
| 7. | தளர்நடை நடத்தல் | ... | 51 |
| 8. | தாயார் தம்மைத் தழுவிக்கொள்ள அழைத்தல் | ... | 53 |
| 9. | முதுகைத் தழுவல் (புறம் புல்கல்) | ... | 56 |
| 10. | பூச்சி காட்டுதல் | ... | 59 |
| 11. | பாலுண்ணல் | ... | 61 |
| 12. | காது குத்தல் | ... | 63 |

| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 13. | நீராட்டல் | ... | 67 |
| 14. | கண்ணன் குழலை அழகுபடுத்தக் காக்கையை அழைத்தல் | ... | 69 |
| 15. | கோல் கொணரக் காக்கைக்குக் கட்டளையிடல் | ... | 73 |
| 16. | பூச்சூட்டல் | ... | 75 |
| 17. | காப்பிடல் | ... | 77 |
| 18. | இளமைத் தீம்புகள் | ... | 79 |
| 19. | ஆற்று விளையாட்டு | ... | 85 |
| 20. | யசோதை கண்ணனுக்குத் தன் பாலை யூட்ட அஞ்சுதல் | ... | 86 |
| 21. | கண்ணனைக் கன்று மேய்க்க அனுப்பியதைக் குறித்து யசோதை வருந்துதல் | ... | 89 |
| 22. | கண்ணன் வரவு கண்டு யசோதை மகிழ்தல் | | 91 |
| 23. | காலிப்பின் வரும் கண்ணனைக் கண்டு கன்னியர் காதல் கொள்ளுதல் | ... | 93 |
| 24. | கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்தல் | ... | 97 |
| 25. | குழலூதும் இனிமை | ... | 100 |

# பெரியாழ்வார் பிள்ளைத் தமிழ்

## I

**தோற்றுவாய் :** 'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே' என்பர் ஆன்றோர். ஆயினும், சில போது உலகில் அறம் குறைந்து மறம் வளர்கிறது. தீயவர் பெருகுகின்றனர். இறைவர் கொடியவரைத் தண்டித்து நல்லவர்க்கு அருள் புரியத் தம் உயர்நிலையிலிருந்து கீழிறங்குவனவாகிய அவதாரங்களை மேற்கொள்ளுகிறார். ஓரிரவிலேயே ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஒருத்தி மகனாய் வளரும் அகதி நிலை அவருக்கேற்படுகிறது. தேவகி பிரிவாற்றாமையால் பேதுறுகின்றாள்! யசோதையின் நெஞ்சம் ஆனந்தத்தில் ஆழ்கின்றது. பெற்ற மகனைத் தானே கொணர்ந்து, அயலார் அகத்தில் விடும் கொடுந்தீவினை வசுதேவனைச் சார்கிறது. பெறலரிய மகவைப் பார்த்து நந்தகோபன் பூரிக்கின்றான். ஆயர் பாடியில் பெரிய கொண்டாட்டம் நடக்கின்றது. மன்னன் மகனைக் காண மங்கையர் பலர் மங்கலப் பொருள்களைத் தாங்கி, யசோதை இல்லத்திற்கு வருகின்றனர். பாலும், தயிரும், வெண்ணெயும் வாரி வாரி இறைக்கப்படுகின்றன. ஏழையர் உண்டு களிக்கின்றனர். நெருங்கிய கூட்டத்தில் தோரணங்கள், மங்கல வாத்தியங்கள், சுமங்கலிகளின் பாடல், பெரியார் வாழ்த்து, இவற்றின் நாப்பண் அழகே திரண்டதெனப் பச்சைப் பசுங்குழவி ஒன்று சேவை சாதிக்கிறது.

அக்குழவியின் சாயலால் சுற்றுப்புறமெங்கும் நீல நிறம் மிளிர்கிறது. நீல மேகத்தில் ஒளிரும் சந்திரனன்ன

முகம், கண்டார் மனத்தைக் கவர்கிறது. கால்கரங்களின் உற்சாக அசைவு சகடாசுரனையும், கஞ்சனையும் வதைப் பதன் முற்குறியாகக் காணப்படுகிறது. 'இம்மகவு, வெண்ணெயையும், நெய்யையும் கருவிலேயே உண்டு வளர்ந்ததோ!' எனக் கருதுமாறு வழுவழுப்பும், திண்மை யும் அமைந்த குழவியின் உடலில் தெய்விக ஒளி வீசு கிறது. "யான் பத்தர்களுக்குப் பரதந்திரன்; அவர்கள் காரியம் முற்றுவித்தற்பொருட்டே இவண் தோன்றி னேன்," என்னும் குறியை, வாத்ஸல்யமே வழிந்தோடும் அச்சிசுவின் கண்கள் தெள்ளிதிற்புலப்படுத்துகின்றன.

இத்தெய்வக் குழந்தையாகிய கண்ணன் எங்குத் தோன்றினன்? எங்கு வளர்ந்தான்? ஆயர் பாடியில் நந்த கோபன் இல்லத்தில், அன்பே உருவெனத் திகழ்ந்த ஆயர் மங்கையர் நடுவண் அல்லவா! இஃதொருவராலும் மறுக்க இயலாதே!

கண்ணன் பிறப்பு வளர்ப்பு இதனோடே நின்று விட்டனவா! இல்லை இல்லை. இன்றும் அவன் பல பேர் இல்லங்களில் பல பத்தர் நெஞ்சில் தோன்றுகிறான்; வளர் கிறான். அவனுடைய கருணைக் கயிற்றால் பிணிக்கப்பட்ட தம் கருமாய நெஞ்சப் பலகையில் அவனைக் கிடத்தித் தாலாட்டிப் பாராட்டி வளர்க்கும் அன்பர் பலருளர். அவர்களுள் சிறந்தவர்கள் ஆழ்வார்கள்.

## 1. பெரியாழ்வார் பெட்பு

ஆழ்வார் பன்னிருவர். ஆயினும், பெரியாழ்வார் மகள் கோதையாரையும், சடகோபர் சிஷ்யர் மதுரகவி யாழ்வாரையும் நீக்கி, ஆழ்வார் பதின்மர் என இயம்பும் வழக்கும் உண்டு. இஃதெங்ஙனமாயினும் பெரியாழ்வார், பதின்மருள் ஒருவரே. ஆழ்வார் அனைவரும் பெரியவரே

ஆயினும், இவருக்கு மட்டும் 'பெரிய' என்னும் அடை மொழி சிறப்பாக அமைந்ததற்குக் காரணம் இல்லாமற் போகவில்லை. ஒருவருக்குப் பல்லாண்டு பாடுபவர் அவரைக்காட்டிலும் பெரியாராய் இருப்பரல்லரோ! அங்ஙனமாயின், உலகைத் தோற்றுவித்துக் காத்து அழிக்கும் இறைவனுக்கே பல்லாண்டு செப்புபவர் எத்துணைப்பெரியவராய் இருத்தல் வேண்டும்! நிலமகளை மகவாய்ப் பெற்றுப் பாராட்டிச் சீராட்டிப் பெரிய பெருமாளுக்கு உரியவராக்கியவர் எங்ஙிலை வாய்ந்தவராவார்! தன்பால் அன்புடையாரை ஆதரித்து, எளியார்க்கும் எளியனாய் இருந்த கண்ணனை இளங்குழவியாய்ப் பாவித்து வளர்த்தவர் எவ்வியல்பு பொருந்தியவராய் இருப்பார்! இவர் இறைக்கு ஒரு போது பேரியல் வாழ்வு தேடினார்; மற்றொரு போது அவ்விறையை இளங்குழவி யாக்கி வளர்த்தார்; இன்னொருகால் தாம் வளர்த்த அருமருந்தன்ன மகளை அவனுக்கு மணஞ் செய்வித்தார். இப்பெரும் பேறுகளை மற்றெந்த ஆழ்வாரேனும் பெற்றுளரோ? இதனாலன்றோ காலத்தினாலோ, வயதினாலோ மற்ற ஆழ்வார்களைக்காட்டிலும் முற்படாத இவர், 'பெரியாழ்வார்' எனப் பெயர் பெற்றார்? இச்சீரியரைப் பெருமை வாய்ந்தவர் எனக் கூறாது, வேறென்ன இயம்புவது?

இவை மட்டுமா! மற்றவர் நா எம்பெருமானை வழுத்துகிறது போன்றா இவர் நா வழுத்துகின்றது? இவர் பண்பமைந்த சொற்களுக்கு மற்றவர் சொற்கள் ஒப்பாமா? இவருக்கு இறைவனிடம் ஏற்பட்ட இன்னலம் வேறெவருக்கேனும் ஏற்பட்டதாக நாம் அறிதல் கூடுமோ? இவர் கனிந்த அன்பு, இவர் தம்மைத்தாம் மறந்த பத்தி, வேறு எவ்வாழ்வாருக்கேனும் உதித்ததோ? இதனாலன்றோ பெரியவர்ச்சான் பிள்ளை மற்ற ஆழ்வார்களின் பத்தியை அணு

வளவில் நிறுத்தி, இவர் பத்தியை மலையளவில் நிறுத்துகிருர்? இது நிற்க.

மற்ற ஆழ்வார்களின் பிரபந்தத்திற்கு வெவ்வேறு பெயர்கள் அமைந்திருக்க, இவர் பிரபந்தத்திற்கு மட்டும் 'பெரியாழ்வார் திருமொழி' என இவர் பெயரே பொருந்தியது எதன்பொருட்டோ!

பெரியாழ்வாரும், இவர் மொழியும், இறைவனும் வெவ்வேறல்லர். இம்முப்பொருளும் ஒன்று என்னுமாறு கலந்துள்ளன. அன்றியும், இவரைப் போன்று இத்துணை அன்பு கனிய, கற்போர் மனம் நெகிழப் பாடுதற்கு மற்றவர்க்கு இயலுமோ? இவர் அன்பு அரிய அன்பென்றன்ருே கூறப்படுகிறது! ஏன்? உலகில் எவ்வன்பு சிறந்தது? எஃது ஈடில்லாதது? யாது மதிப்புற்றது? தாயன்பே அன்ருே! தாயன்பு தானே இறை அன்பை ஒருவாறு அளந்தறிதற்கு அளவுகோலாயுள்ளது? "தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை." அத்தாயன்பன்ருே நம் பெரியாழ்வார் அன்பு! இவர் நூல் முற்றும் எவ்வாறு செல்கிறது? இவர் எம்பெருமானை எம்முறையில் கொள்கிருர்? மகன் முறையில் அல்லவா? மகனுக்குப் பெற்ருர் பெரியாரல்லரா? அத்தந்தையார் மகனைப் பற்றிப் பேசுகிற நூலிற்குப் பெரியாழ்வார் திருமொழி எனப் பெயர் அமைதல்தானே பொருத்தமானது! அன்றியும், ஆழ்வார் ஆண்டாளை அரங்கநாதனிடம் கொண்டு போன போது திடீரென அவர் மறைந்துபோகத் தம் மகளாரைக் காணுது ஆழ்வார் வருந்த, எம்பெருமான், "உம்மகளை யாம் அங்கீகரித்துக்கொண்டோம். நீர் எமக்கு மாமனுர் ஆவீர்," என அசரீரியாய்ச் செப்பினுர். இம்முறையிலும் இவர் பெரியவரல்லரோ!

இப்பெரியார் நூலில் முதல் திருமொழியில் உள்ளது ஏது? பல்லாண்டன்ருே? ஒருவருக்குப் பல்லாண்டு கூறு

பவர் யார்? பெற்றவரும், அவருக்கு ஒப்பான பெரியவரும் அல்லரா? அப்பெற்றவருள்ளும் கெழுமிய பரிவு பொருந்தியவர் யார்? முன் கூறியவாறு தாயாரே அல்லரா? இம்முறையில் ஆழ்வார் திருவாய் மலர்ந்த பல்லாண்டு அன்னையின் கனிவே உருவெனத் திகழ்வதைக் காண்க!

இவர் பாடிய பல்லாண்டைப் பற்றிச் சிறிது ஆராய்வோம்: மற்ற ஆழ்வார்களும் எம்பெருமானுக்குப் பல்லாண்டு கூறி இருப்பினும், அவை ஆங்காங்கே அரிதிற் காணுமாறு மறைந்துள்ளன. இவர் திருமொழியிலோ, தொடக்கம் முதல் இறுதி வரையும் பல்லாண்டே பரவியுள்ளது. எம்பெருமானுக்கு மட்டுமா இவர் வாய் பல்லாண்டு பாடுகிறது? அவர் மார்பில் உறையும் மங்கை, வலத்துறையும் ஆழி, இடக்கைச் சங்கம் யாவும் பலகோடி நூறுயிரம் ஆண்டுகள் வாழ ஆசி பெறுகின்றன. இவர் பத்தி, இவரை எந்நிலையில் கொண்டுபோய் விடுகிறது! எம்பெருமான் ரக்ஷகன் (காப்பவன்)தாம் ரக்ஷயப் பொருள் (காக்கப்படும் பொருள்) என்னும் எண்ணத்தை முற்றும் மாற்றிவிடுகிறது. எம்பெருமான் ஸ்வரூப ரூப குணங்கள் இவர் மனத்தை முற்றும் கவர்ந்துவிடுகின்றன! அக்கவர்ச்சி அப்பொருளுக்கு யாரால் என்ன கெடுதி நேரிடுமோ என்னும் கலக்கத்தை உண்டாக்குகிறது! அங்ஙனம் நேராவண்ணம் காப்பிட நெஞ்சம் விரைகிறது. அது தம் நிலையையும், இறைவன் நிலையையும் முற்றும் மறக்கச் செய்கிறது! பின்பு நடைபெறுங் காரியம் எவ்வாறு இருக்கும்! உலக நடைக்கு மாறுபட்டதாகத்தானே காணப்படும்! இத்துணைத் தடுமாறிய போக்குத்தான் சிறந்ததென்றும், இப்போக்கு மற்றவருக்கு அமைதல் அருமை என்றும், இந்நிலையைப் பெறுதற்கு ஆர்வம் கொள்ளும் ஆன்றோர் பலர் என்றும், இஃதே ஓர் அடி ஒரு கழஞ்சு பொன் பெறும் நிலத்தைப் போன்றதென்றும்

நூல்கள் அறையாநிற்கின்றன. இந்நிலை யாவருக்கும் அமைதல் அருமையினும் அருமையே! இங்ஙனம் இவரும், இவர் நூலும், நூலின் பொருளும் இத்துணைச் சீர்மைகள் பெற்றிருப்பதுதான், இப்பெரியார் பெரியாழ்வார் என்றும், இவர் திருமொழி பெரியாழ்வார் திருமொழி என்றும் பெயர் பெற்றமைக்குக் காரணம் எனக்கொள்க. இவற்றைப் பற்றி இங்ஙனமே விவரித்துச் செல்லின் மிக நீளும். இத்தூயோர் நிலமங்கையை மகளாகப் பெற்று வளர்த்த பண்பு இந்நூலில் ஆங்காங்கே பகரப்படுகின்றமையின், அதைத் தனித்துக் கூருது விடுத்தோம்.

## 2: பிள்ளைத் தமிழின் பெருமை

இனி எடுத்துக்கொண்ட விஷயத்திற்குச் செல்வோம்: 'பிள்ளைத் தமிழ்' என்பது ஒரு பிரபந்தம். தமிழ் நூல்களுள் இஃது ஓர் உயரிய இடத்தைப் பெற்றுள்ளது. 'பிள்ளை' என்பது, 'மகவு, குழந்தை' என்பன போன்று இருபாலாரையும் குறிக்கும் ஒரு பொதுச் சொல். பிறந்த நாள் தொடங்கிச் சில ஆண்டுகள் வரையும் குழந்தைகளுக்கு இப்பெயர் வழங்கி வருகிறது. இப்பருவத்தில் நிகழும் செயல்களை வெளிப்படுத்தும் நூலைப் 'பிள்ளைத் தமிழ்' என வழங்குகின்றனர். இதைச் சிறிது சிந்தித்தல் வேண்டும். பச்சைப் பசுங்குழவிக்குப் பிள்ளை எனப் பெயரமைந்தது பொருந்தும். ஆனல், அப்பிள்ளையின் நிகழ்ச்சிகளைத் தமிழ் எனப் பகருதல் யாங்ஙனம்? சிலர் இந்நூல் தமிழ் மொழியில் இருத்தலின் இதற்கு இப்பெயர் வாய்ந்தது எனச் செப்புவர். இக்கருத்து அத்துணைச் சுவையுடையதன்று. குழந்தைப் பருவத்தில் நிகழும் அசைவு, நகைப்பு, நடை, ஓடல், ஆடல், பேச்சு யாவும் இனிமையுடையன அல்லவா? அவ்வினிய செயல்களை இனிமை பொருந்திய சொற்களி

ஞற்றுனே வெளியிடுதல் வேண்டும்! அவ்வினிய சொற்கள் எம்மொழியில் அமைந்துள்ளன? தமிழிலா, வேறு மொழிகளிலா? இங்குச் "செந்திறத்த தமிழோசை", "பாலேய் தமிழர் இசைகாரர்" என்னும் ஆழ்வார்கள் திருவாக்குகளை நோக்குக! தமிழ் வேறு, இனிமை வேறு எனப் பிரித்தற்கியலுமோ? தமிழே இனிமை, இனிமையே தமிழன்றோ? ஆதலின், பிள்ளையின் இன்செயல்களைத் தெரிவிக்கும் நூலை இனிய மொழியிலேயே வெளியிட்டு அக்குறிப்பு யாவருக்கும் வெளிப்படையாகப் புலப்படுதற்பொருட்டு அதற்குப் பிள்ளைத் தமிழ் எனப் பெயரிட்டனர் போலும்!

இது மட்டுமன்று; பிள்ளைச் செயல்கள் யாவும் இயற்கையையே வடிவெனக் கொண்டுள்ளன. அவற்றுள் பொய்ம்மையும், செயற்கையும் ஒரு சிறிதும் கலத்தல் இல்லை. இதனுற்றுன் குழந்தை, தெய்வம் எனக் கொண்டாடப்படுகிறது. அறிஞர் குழந்தைக்கும், தெய்வத்திற்கும் வேறுபாடு காணுதல் இல்லை. "குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்தில் உண்டு," என்னும் பழமொழியும் வழங்கி வருகிறது. ஏசு கிறிஸ்து, "இளங் குழந்தைகளை என்னிடம் வர விட்டுவிடுங்கள்; பரலோக ராஜ்யம் அவர்களுடையது," எனக் கூறிஞர். கண்ணன் நாள் முழுவதும் இடைச் சிருரோடும் இடைச் சிறுமியரோடுமே இன்பமாகப் பொழுது போக்கிஞன். இவை யாவும் எவற்றைத் தெரிவிக்கின்றன? இறையும் குழந்தைகளும் ஒன்றென்பதை அல்லவா? இத்துணைத் தெய்வத்தன்மை பொருந்திய பிள்ளைகளின் நிகழ்ச்சிகளைத் தெரிவிப்பதற்குத் தெய்வத்தன்மை வாய்ந்த மொழிதானே பொருத்தமுடையதாகும்? தொன்றுதொட்டு வழங்கி வரும் ஒரு மொழி, பத்தியையே உருவெனக் கொண்ட அன்புடையார் இறைவனை ஏத்தப் பயன்பட்ட மொழி;

சிவபிரானும் தமிழ்ப் புலவர் வேடந்தாங்கி ஆய்ந்த மொழி; நீதிகளை வற்புறுத்திய பொற்புடைய மொழி; நாகரிகத்தின் நயத்தைப் புகன்ற மொழி; மக்கள் மனப் பான்மையை அளந்து அளந்து கூறும் மொழி; மக்கள் உயிருக்கு உரமளிக்கும் வீரம், காதல் இவற்றை விரித் துரைக்கும் மொழி; மணமக்களின் உயரிய ஒழுக்கத்தை ஒழுங்குபட உரைக்கும் அகப்பொருள் தத்துவத்தை அமைவுடன் புகலும் மொழி; இத்தகைச் சிறப்புகள் பல அமைந்த இதைத் தெய்வ மொழி என்னுது வேறென் பகர்வது! ஆகவே, தெய்வத்தன்மை பொருந்திய இளம் பிள்ளைகளின் போக்கை இயம்பும் நூலிற்குத் தெய்வத் தன்மை வாய்ந்த தமிழ் என்னும் சொல்லையும் சேர்த்துப் பிள்ளைத் தமிழ் எனப் பெயரிடுதல் தகுதியெனக் கருதியே இதற்கு இப்பெயர் இட்டிருத்தல் வேண்டும்.

நூல்களுக்கு, அளவு, நூற்றலைவர் பெயர், நூற் பொருள் இவற்றுள் ஏதாவது ஒன்றைப் பற்றிப் பெய ரமைதல் வழக்கு. இவற்றுள் ஒரு நூலுக்கு அதன் உட் பொருளைக் காட்டக்கூடிய பெயர் அமைவதே சிறப்பு எனக் கற்றவர் கூறுவர். அஃதும் எப்போது சிறப்புடை யதாகும்? அப்பொருளைக் கற்போர் மனத்தைக் கவர்தல், இன்பம் ஊற்றெடுத்துப் பாய்தல், கற்கக் கற்க இனிமை தோன்றல், அரிய கருத்துகள் அமைந்திருத்தல், இம்மை மறுமைப் பயன்களை ஈதல் முதலியன அந்நூலில் திகழும் போதேயல்லவா? இவை யாவும் இந்நூலில் உண்டு. இவற்றுள் பிள்ளைத் தமிழ் என்னும் சொற்றெடருக்குப் பொருள் கூறிய இடத்தில் சில பகரப்பட்டுள்ளன. மற்ற வற்றைப் பெரியாழ்வார் பிள்ளைத் தமிழைக் குறித்துப் பேசுங்கால் வெளியிடுவதே பொருத்தமாகும்.

இப்பிள்ளைத் தமிழ் ஓர் அகநூலாகும். 'அகம்' என்பது 'உள்ளம், நெஞ்சம்' எனப் பொருள்படும். அக

நூல்கள் எப்பொருளை இடமாகக் கொண்டுள்ளன? மக்களின் மன நிலையையன்றோ? இதனால், மற்றவரால் காணவும், அறியவும் முடியாது அவரவர் நெஞ்சில் நிகழும் செயல்களுக்கு அகப் பொருள் எனப் பெயரமைந்தது என அறிகின்றோம். அன்றியும், ஒன்றின் இன்பத்தைத் துய்த்த ஒருவரே, பின்பு அஃது எத்தன்மையது எனப் பிறருக்கு விளக்கிச் சொல்லுதற்கும், தாமே அதை உய்த்துணர்தற்கும் இயலாதிருப்பது எஃதோ, அஃதே அகப் பொருளாகும். இஃதோர் இன்பச்சுவை நிறைந்தது! அகத்திலே தோன்றி அகத்திலே அடங்குவது; ஆனந்த மயமானது! ஒப்பற்றது! உயர்வுற்றது! யாவற்றையும் மறக்கச் செய்வது! இன்ன சீர்மைகள் பலவும் நிறைந்த நூல்களைத்தாம் அறிஞர் அகப்பொருள் நூல்கள் என இயம்புகின்றனர். இதற்கு, இறையனாரகப் பொருள், நம்பி அகப்பொருள் முதலிய இலக்கணங்களும், மாறன் கோவை, தஞ்சைவாணன் கோவை முதலிய இலக்கியங் களும், மாணிக்கவாசகர், திருமங்கையாழ்வார், நம்மாழ் வார், கோதையார் போன்ற பெரியார்களது அனுபவப் பாசுரங்களுமே சான்றாய் நிற்கின்றன. இந்நூல்கள், ஒத்த வயது, ஒத்த குலம், ஒத்த கல்வி, ஒத்த அறிவு, ஒத்த உணர்ச்சி வாய்ந்த ஒரு தலைவனும், ஒரு தலைவியும் கூடித் துய்க்கும் இன்பச் சுவைகளைத் தெள்ளத் தெளித்துக் கூறுநிற்கின்றன. இந்நூலில் உள்ளது இவ்வின்பச் சுவை மட்டுமன்று. காதலர் இருவர் இடையில் நிகழும் செயல்களும், அவ்வக்காலங்களில் அவர்கட்கு ஏற்படும் மனநிலைகளும், இருவருக்கும் பிரிவு நேருங்கால் ஏற்படும் துன்பப்பெருக்குகளும், பெண்மகளின் இயல்பும், கலங்கா நிலையும், ஆண் மகனின் மனப்போக்கும், ஆண்மையும், இவை போன்ற இருபாலார் மனப்பான்மைகள் பலவும் இதில் இடம் பெற்றுள்ளன. இங்ஙனம் மக்கள்

அகத்தைத் துருவித் துருவி வெளியிடுவதனாற்றான் இதற்கு அகப்பொருள் நூல் எனப் பெயரமைந்தது. இன்னும் இருபாலாரும் துய்க்கும் இன்பப்போக்கைப் பகர்வதனால் இதற்கு இன்ப நூல் என்று வேறொரு பெயருமுண்டு. திருவள்ளுவர் செப்பிய இன்பப்பாலை (காமத்துப்பால்) நோக்குக!

இங்ஙனம் பல உயர்வுகள் பொருந்திய அகநூலுக்கு இப்பிள்ளைத் தமிழை ஒப்புக்கூறல் யாங்ஙனம்? அக நூலைத் துளைத்துத் துளைத்து நோக்கினும் தோன்றுவது யாது? இன்பமேயன்றோ? பிள்ளைத் தமிழ் எவற்றை அங்கமாகக் கொண்டுள்ளது? குழந்தைப் பருவத்தில் நடைபெறும் இன்பச் செயல்களையே அல்லவா? தம் இளங்குழந்தை மண்ணில், சேற்றில் அளைந்து அளைந்து விளையாடுகிறது. அதன் உடம்பெல்லாம் மண்; கைகள் அழுக்கு நிறைந்திருக்கின்றன. இந்நிலையில் அக்குழந்தை பெற்றோர் உண்ணும் உணவில் கையை வைத்து அளாவு கிறது. வேறொருவர் கையால் சிறிது தொட்டுத் தரும் பண்டத்தையும் விரும்பாத அவரே, அவ்வுணவை அமுதென இன்பத்துடன் உண்ணக் காண்கின்றோம். தம் மகவு தம் உடலைத் தீண்டும் பரிசத்தினால் பெற்றோருக்கு உண்டாகும் இன்பம் வேறெந்தச் செயலாலும் உண்டா தல் இல்லை. தம்மக்கள் தத்தித் தத்தி, பொருள் நிரம் பாத சொற்களைப் பேசுகின்றார்கள். பெற்றோருக்கோ பொருள் முற்றுப்பெறாத அம்மழலைச் சொற்கள் குழ லோசையினும் யாழோசையினும் இனிமையைத் தரு கின்றன. இத்தன்மையைப் பற்றிப் பேசுகின்றவர் யார்? மனத்துறவு கொண்ட திருவள்ளுவர் என்பதை அறி யாதாருண்டோ?

“அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ்.”

"மக்கள்மெய் தீண்ட லுடற்கின்பம் ; மற்றவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு."

"குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்."

முற்கூறிய அகநூலில் உள்ளது, யாவற்றிலும் ஒத்திருக்கும் இருவர் கலந்து நுகரும் இன்பம். பிள்ளைத் தமிழில் சொல்லப்படுவதோ, இளங்குழவியும் பெற்றோரும் இருந்து பெறும் இன்பம். முன்னதில் இருவரில் ஒருவருக்கு இன்னொருவரைக் காணுந்தோறும் காணுந்தோறும் இன்பம் பெருகாநிற்கும். பின்னதில் பெற்றோரைக் காணுங்கால் பிள்ளைக்கும், பிள்ளையை நோக்குங்கால் பெற்றோருக்கும் இன்பம் ஊற்றெடுத்துப் பாயாநிற்கும். இவ்விருதிறத்தினரும், தாம் பெற்ற இவ்வின்பத்தைக்காட்டிலும் சிறந்த இன்பம் வேறொன்று இருப்பதாகக் கருதார் ; இஃதே உயர்ந்த பேறு என்றும், இதனினும் வீட்டின்பம் வேறு இல்லை என்றும், இஃது என்றும் அழியாததென்றும், தம் வாழ்க்கையே இன்ப வாழ்க்கை என்றும், இவ்வின்ப வாழ்க்கையை அடையப் பெறாதவர் பயனற்றவரே என்றும் மணமக்களும் பெற்றோரும் நினைத்தலை உலக வழக்கில் காணலாம். அவரவர்கள் நலம் அவரவர்களுக்கு மேம்பட்டதாகத் தோன்றல் உலக இயல்புதானே !

இங்ஙனம் பல தன்மைகளில் அகநூற்கும் பிள்ளைத் தமிழிற்கும் ஒப்புக் காணப்படினும், அகநூலைக்காட்டிலும், பிள்ளைத் தமிழ் சிறந்தது என்பது அறிஞர் கருத்து. இதற்குக் காரணங்கள் இல்லாமற்போகவில்லை. சின்னஞ்சிறு குழவியினிடத்தில் படிப்படியாக நிகழும் செயல்கள் இயற்கையிலிருந்து எழுவன ; தம்மை அறியாமலே உண்டாவன; பிள்ளைகள் முயன்று பெறுவன அல்ல; பெற்

றோருக்கு மட்டுமேயன்றி, மற்றோருக்கும் இன்பந்தருவன; துன்பங் கலவாதன ; வஞ்சனையற்றன ; ஒவ்வொரு குழந்தையினிடத்தும் நிகழப்பெறுவன ; தன்னலமற்றன ; பிறர் இன்பத்திற்கே கருவியாய் உள்ளன. இது புனைந்துரைத்தலுமன்று. பொய்கலந்ததுமன்று. காலம், தேசம், மொழி, குலம் முதலியன இளம் பிள்ளைகளிடம் காணப்படும் பருவச் செயல்களை வேறுபடுத்தல் இல்லை. இதனாலேயே இவை இயற்கை எனத் தோன்றவில்லையா? காகத்தின் இளங்குஞ்சினிடமும் அழகு அமைந்துள்ளது. காகத்திற்குத் தன் குஞ்சு பொன் குஞ்சன்றோ? அங்ஙனமாயின், நம்முடைய இளங்குழந்தைகளைப் பற்றிக் கூறவும் வேண்டுமோ! இளங்குழவியினிடத்து ஒரு தனி அழகு காணப்படுகிறது. அதன் செயல்களிலோ, அளப்பரிய அழகும் இன்பமும் தோன்றுகின்றன.

இன்ன தன்மை வாய்ந்த பிள்ளைச் செயலில் ஈடுபட்டு இன்பந்துய்க்குங்கால், பழி கூறுவார் இல்லை; வேண்டாமென அறிவு கற்பிப்பார் இல்லை; மேன்மேலும் செய்யத் தூண்டுவாரே உளர். அச்சமில்லை; நாணமில்லை; மறைத்தல் இல்லை; ஆற்றாமை இல்லை; அலர் தூற்றல் இல்லை; உறக்கமின்மை இல்லை; ஊணொழித்தல் இல்லை; உடல் மெலிதலோ வெளுத்தலோ இல்லை. இங்ஙனமாயின், இவ்விரு நூல்களுள், இன்பச் சுவையில் தலைசிறந்த நூல் எஃது என்பதை விளக்கிச் சொல்லுதலும் வேண்டுமோ!

இவை மட்டுமே அல்லாமல், அகநூலில் உரைக்கப்படும் நிகழ்ச்சிகள் கற்பனை என்றும், அஃதோர் இலக்கணயேயன்றி, இலக்கியமாகச் சான்று காட்டுதற்கு இம்முறையில் ஒருவர் வாழ்க்கையேனும் நடைபெறவில்லை என்றும், கோவையாவும் கோத்துக் கூறியனவே என்றும், பேரின்பத்தை நாடி நின்ற ஆன்றோர்க்கும் இறைவனுக்

குமே இச்செயல்கள் நிகழ்ந்திருக்கின்றன என்றும், அந்நிலையை விளக்குதற்பொருட்டே சிற்றின்பத்தைப் போன்று காணப்படும் இந்நூல்கள் எழுந்தன என்றும் சாற்றப்படுகின்றன.

ஆகவே, உலகியலில் நடைபெறாத ஓர் அனுபவத்தில் இன்பம் இருப்பதாகக் கருதும் காதலரின் போக்கிற்கும் எளியவர் செல்வர் என்னும் வேறுபாடின்றி ஒவ்வோர் இல்லத்திலும் பலருங்காண நாடோறும் நடைபெறும் பிள்ளைகளின் இன்பப் போக்கிற்கும் எத்துணை ஏற்றத் தாழ்வுள்ளன! இம்முறையில் அகப்பொருள் நூலைவிடப் பிள்ளைத்தமிழ்நூல் பல வகையிலும் மேன்மையுற்ற தெனக் கூறவும் வேண்டுமோ! இது நிற்க.

பிள்ளைத்தமிழ், ஆண்பாற்பிள்ளைத்தமிழ் பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இரு வகைப்படும்.

ஆண்பாற்பிள்ளைத்தமிழ், காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி, சிறு பறை, சிற்றில் சிதைத்தல், சிறுதேருருட்டல் என்னும் பத்துப் பருவங்களை உடையது.

பெண்பாற்பிள்ளைத்தமிழ், ஆண்பாற் பிள்ளைத் தமிழில் முதலிற்குறித்த ஏழுடன் சிற்றில் செய்தல், கழங் காடல் (அம்மானை), ஊசலாடல் ஆகிய மூன்றும் பெறும்.

இனிப் பெரியாழ்வார் பிள்ளைத் தமிழைப்பற்றியும் இவர் புண்ணியப் பேற்றைப் பற்றியும் ஆராய்வோம்.

## 3. பெரியாழ்வாரின் புண்ணியப்பேறு

புறநானூறு, திருக்குறள் என்னும் சங்க நூல்களில் பிள்ளை இயல்புகளைப் பற்றிச் சிற்சில பாடல்கள் உள்ளன. அவை பிள்ளைத் தமிழல்ல. அம்முறையைத் தழுவியும் அவை பாடப்படவில்லை. ஏழாம் நூற்றாண்டிற்குப் பின்பு, முருகன் பிள்ளைத்தமிழ், பாலசுப்பிரமணியன் பிள்ளைத்தமிழ், மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், அழகர் பிள்ளைத்தமிழ், ஆண்டாள் பிள்ளைத்தமிழ் எனச் சில நூல்கள் உருக்கொண்டெழுந்தன. ஆயினும், இவற்றிற்கும் பெரியாழ்வார் பிள்ளைத்தமிழிற்கும் பல வேறுபாடுகளுண்டு.

மற்றப் பிள்ளைத்தமிழ் நூல்களைப் பாடியவர்க்கும் ஆழ்வாருக்கும் மாறுபாடுள்ளது. அவர்கள் பத்தி ஒரு வரம்பிற்குள் அடங்கியது. அவர்கள் அன்பு வெள்ளம் அணை கடந்தோடிற்றில்லை. அவர்கள் தங்களை மறந்தார்கள் இல்லை; அப்பிள்ளைமையிலேயே ஒன்றி விடவும் இல்லை. இக்குறிப்பை அவர்கள் மகுடம் முதலியவற்றை வகுத்துக்கொண்டு ஓர் அளவில் நின்று பாடியதிலிருந்தே அறியலாம்.

பெரியாழ்வார் பிள்ளைத் தமிழோ, மற்றவற்றைக் காட்டிலும் காலத்தால் முந்தியது; எளிமையும் இனிமையும் வாய்ந்தது; குழவியின் இயற்கைச் செயல்கள் நிறைந்த தடாகத்தில் மூழ்கி மூழ்கி எடுத்த முத்துக் குவியல் போன்றது. ஆழ்வார், ஒருகால் தம்மைக் கண்ணனாகிய இளங்குழவியாகவே மதிக்கிறார்; அக்குழவி நிலையில் தம்மை இருத்துகிறார்; அப்பிள்ளைமையிலேயே ஒன்றிவிடுகிறார். ஞானமும் பத்தியும் கலந்து மிளிரும் பெரியாழ்வார் மனக்கண்ணிற்குக் கண்ணன் காட்சி அளிக்கிறான். அக்காட்சியைக் கண்டு கண்டு மகிழ்கிறார் ஆழ்வார். அம்மகிழ்வு உள்ளடங்காமல் வழிந்து வெளியிற்

பாய்கிறது; அதுவே பாசுரமாக உருக்கொண்டெழு கிறது. இவர் அக்குழவியின் உடலழகு, ஆன்ம அழகு, குண அழகுகளில் ஆழ்கிருர். ஒவ்வொன்றுமே இவரைக் கரையேருதவாறு அழுத்துகின்றது. இப்பிள்ளைத் தமிழை இயம்பும்போது இவர் பெரியாழ்வாராகவா இருக்கிருர்? இல்லை இல்லை. ஒரு சமயம் இவர் யசோதையே ஆய்விடுகிருர். அவள் தாயன்பு முற்றும் இவரிடம் அமைந்துவிடுகிறது. ஒரு மன்னன் மனைவி, பன்னுட்கள் பிள்ளைப்பேறின்றி வருந்தியவள், இனித் தனக்குக் குழந்தை பிறவாது என்னும் நினைப்புக்கொண்டவள், 'என் அழகிய அரண்மனையில் மகவு விளையாடும் புண்ணியத்தைப் பெற்றிலேன்!' எனப் பேதுற்றவள், வெண்ணெய், பால், தயிரை அள்ளி அள்ளியுண்ணும் அருஞ்சிசுவைக் காணும் புண்ணியக் கண்ணற்றவள் தான் ஒருத்தியே என விம்முற்றவள், நாளும் தன் வினையை நினைத்து நினைத்து அரற்றியவள், இம்மை மறுமைப் பயன்களை இழந்ததாகக் கருதியவள். இத்தகையாள் அருமருந்தன்ன மகவை அடைந்தால், என்ன பேரானந்தம் எய்துவள்! எத்தகைய வியப்பு அடைவள்! என்ன பெருமை பாராட்டுவள்! மகவின் ஒவ்வோர் அவயவமாக நோக்கி மகிழும் அவள் மகிழ்வு எத்தகையது! அவள் அதற்குச் செய்யும் சிறப்புகள் அளவிலடங்குவனவோ! தான் மட்டும் பார்த்துக் களிக்க அவள் மனம் அமையுமோ! தன் உறவினரையும், நட்பினரையும் அழைத்து அழைத்துக் காட்ட அவள் நெஞ்சம் முந்துருதோ! பாலனுக்குத் தான் செய்யவேண்டிய பணிகளை அவள் பிறருக்குப் பணிப்பளோ! தானே செய்து செய்தன்றே மகிழ்வாள்! நனவில் மட்டுமா? துயிலிலும் பிள்ளையைப் பற்றித்தானே கனவு காண்பாள்! இத்துணை அன்பு வாய்ந்த அன்னையசோதையாகவே மாறிய பெரியாழ்வார் நிலையைக் குறித்து

யாரால் எங்ஙனம் பகரக்கூடும்! இந்நிலையில் ஆழ்வார் இப்பிள்ளைத் தமிழை முறையோடு பாடுதல் யாங்ஙனம்? இவர் சொல்லும் போக்கே முறையாகும். அளவு கடந்த அன்பும் ஆர்வமும் வரையுள் நிறுத்துமோ? இத்தகையார் கொண்டதெல்லாம் கோட்பாடே! ஆனால், மற்றவரும் இங்ஙனம் செல்லலாமா? இவ்வாறு செல்ல மற்றவருக்கும் அந்நிலை அமைதல் வேண்டுமே! அமைந்தால் தாமே செல்லாரோ! இஃது ஒருவர் சொல்லுவதாலும், புகட்டுவதாலும் வருவதன்றே!

அன்றியும், பிள்ளைத்தமிழைப் பாடிய பெரியாழ்வாரிடம் வேறுபாடுள்ளது எனச் செப்புதல் மட்டும் சாலாது. பிள்ளையாக அமைந்த கண்ணனிடத்திலும் மாறுபாடு உண்டு. என்ன? மற்றப் பிள்ளைத்தமிழிற்குத் தலைவர்கள், என்னே சிற்சில செயல்களைச் செய்தற்பொருட்டு உலகில் தோன்றி மறைந்தார்கள் கண்ணனே, அங்ஙனந் தோன்றியவனல்லன். இளமைப் பருவத்திலேயே அவன் புரிந்த தெய்வச் செயல்களும், தன்னலங் கருதாத் தகைமைகளும், வீரச் செயல்களும், போர்த்திறங்களும், அவன் போதித்த ஞானச்செல்வமும், பத்தரைப் பாராட்டிய பண்பும், பெரியாரிடம் காட்டிய கருணையும், அன்பரிடம் அடிதொழுது நின்ற ஆண்மையும், அவரவர்களுக்கு ஏற்றவாறு நடந்துகொண்ட சாதுரியமும், தீயாரையும் தீமையையும் அழிக்கும்போதும் அவன் மேற்கொண்ட அறநிலையும், பெண்களின் பத்தி வலையில் அவன் கட்டுப்பட்டிருந்த நட்பும், மங்கையருக்கு அவன் தந்த மாண்பும், தக்க இடத்தில் தான் முழுமுதற்கடவுள் எனக்காட்டிய சீர்மையும் அளவிடற்பாலனவோ!

இத்துணைச் செயல்களைத் தொகுத்துச் செப்பப் பெரியாழ்வார் தவிர வேறொருவருக்கு இயலுமோ?

அன்புக் கடவுள் தன்மைகளை அன்பு கெழுமிய பெரியா ரல்லரோ அறிவர் !

மற்ற ஆழ்வார் சிலரும் இராமனையும் கண்ணனையும் பிள்ளை நிலையில் வைத்துச் சில சொற்களைச் செப்பியுள் ளனர். ஆனால், அவை பிள்ளைத்தமிழ் எனக் கூறுதற்கு இடந்தந்தில. இத்தகைய அன்பு வெள்ளமும் அவற்றில் பாய்ந்திலது. காரணம் யாது? அவ்வாழ்வார்களுட்சிலர் பெரும்பான்மையும் தம்மை இறைவனுக்கு நாயகியாகவும் சிலர் தொண்டராகவும் பாவித்தனரே அல்லாமல், பெரி யாழ்வாரைப் போன்று தாயாகக் கருதினர் அல்லர்.

## 4. பெரியாழ்வார் மனப்பான்மை

கண்ணனை ஈன்றவளோ, தேவகி. அவன் பிறந்த இடமோ, வடமதுரை. ஆயினும், யசோதையே அவனைப் பெற்றவளாகக் கருதப்படுகிருள். ஆயர் பாடியே அவன் தோன்றிய இடமாக எண்ணப்படுகிறது. அங்ஙனமிருப் பினும், அந்த யசோதை அவனை வளர்த்த முறை நமக்குத் தெரிந்திலது. பெரியாழ்வார் வளர்த்த தன்மையைத்தான் நாம் அறிகிருேம். இவர் முதலில் கண்ணன் பிறந்த காலத்தில் நடந்த கோலாகலத்தையும், ஆனந்தப் பெருக் கையும் அலங்கரித்துக் காட்டுகிருர். இடையில் பல செய்திகள் நிகழ்கின்றன. இறுதியில் குழலூதும் இன்ப வாரி ஊற்றெடுத்துப் பாய்வதாக முடிக்கின்ருர்.

இவருக்கு இன்னுமொரு சிறப்புமுண்டு. இவர் கண்ணனைமட்டுமா வளர்க்கிருர்? கண்ணனைக் காத லித்து, அவனையே நாயகனுகப் பெற்று இன்புற்ற ஆண்டாளையும் வளர்க்கின்ருர் அல்லரோ? ஆனால், கண்ணனை மனத்தால் வளர்த்தார்; ஆண்டாளைக் கையால் வளர்த்தார். ஆண்டாள் சின்னஞ்சிறுமி, அவள்

மேன்மை,இயல்பு, ஒல்கிய நடை, இனிய சொற்கள், உயரிய ஒழுக்கம், பரந்த நோக்கம், விரிந்த எண்ணம், பெருந்தகைப் போக்கு இவைகளைக் கண்ட பெரியாழ்வாருக்கு அவளுக்கு வரும் மணவாளனைப் பற்றிய கவலை ஏற்படாதோ? தம் மகளைத் தக்க நாயகனிடம் சேர்ப்பிக்க வேண்டும் என விரும்பும் செல்வந்தர், நற்குலமும் நற்குணமும் வாய்ந்த ஏழைச் சிறுவன் ஒருவனை வளர்த்துத் தம் மகளைக் கன்னிகாதானம் செய்து தருதல் இல்லையா? அங்ஙனமே ஆன்ம குணங்களிற்சிறந்த இச்செல்வர், தூய வைணவக் குலத்தில் பிறந்து, தெய்வத்தன்மைகள் பலவும் பொருந்தி, அறிவில் ஏழையரான இடையர் குலத்தில் தோன்றிய கண்ணனை வளர்த்து, மேற்கூறிய நலங்கள் யாவும் அமைந்து, அழகே உருவெனத் திரண்ட தம் மகளாரை அவனிடம் ஒப்புவிக்கிறார். இங்ஙனேவோடுங் கூடி வளர்க்கும் வளர்ப்பு எத்துணைச் சீர்மையுடையதாயிருக்கும்! மானிடருக்கு, மகளைக்காட்டிலும் மருமகனிடம் அன்பு மிகுதியன்றோ? அம்மருமகன் பெருமையை உலகறியப் பறை சாற்றி மகிழ்வரல்லரோ? எங்கெந்த வகையில் அவனைப் புகழ வேண்டுமோ, அந்தந்த வகைகளிலெல்லாம் புகழ் மாலையை அவனுக்குச் சூட்டுவரல்லரோ? - மருமகனின் மதிப்புத்தானே பெரிதும் அவர்கள் கண்களுக்குக் காட்சி அளிக்கும்! வீரம், நுட்பமதி, சாதுரியம், நிறை, கடைப்பிடி முதலியன மணமகனுக்கு உண்டா எனக் கூர்ந்து நோக்குவரல்லரோ? அவற்றைத்தாம் பெரியாழ்வார் தம் பிள்ளைத் தமிழில் தொகுத்துத் தொகுத்துப் பேசுகிறார். இவற்றை நூலில் நுழையுங்கால் ஆங்காங்கே காணலாம். தம் மாப்பிள்ளையின் சீரிய இயல்புகளை யாவரும் அறிந்து கொள்ள வேண்டுமென்பது பெரிவாழ்வார் விருப்பம் போலும்! அதன்பொருட்டன்றே கண்ணனுக்குப்

பிள்ளைத்தமிழ் கூறத் தொடங்குகின்றார்? அதனினும் நம் ஆழ்வார், அதை விரித்து விரித்து, எதில் அவனை உயர்த்தவேண்டுமோ, எதில் அவனைப் போற்ற வேண்டுமோ, எதில் அவனைப் புகழ வேண்டுமோ அம்முறைகளை நன்குணர்ந்தல்லவா இப்பிள்ளைத் தமிழைச் செய்துள்ளார்? மற்றையார் இவரைப்போன்று, ஞானமும், பூமகளை மகளாகப் பெறும் புண்ணியமும் பெற்றிருந்தாலல்லவா, அவரும் இத்துணைச் சீர்மை வாய்ந்த பிள்ளைத் தமிழைப் பாட முடியும்!

கண்ணன் தோன்றிய காலத்திலேயே இவர் தோன்றிற்றிலர்; அவன் விளையாடல்களையோ, அவன் வீரச் செயல்களையோ, தெய்வத்தன்மைகளையோ கண்ணால் பார்த்தவருமல்லர்; அதே காலத்திலிருந்தவர் செப்பக் கேட்டவருமல்லர் நாம் இப்போது கண்ணனைப் பற்றி நூல்களின் வாயிலாக என்ன அறிகிறோமோ, அவ்வளவு தான் இவரும் அவனைப் பற்றித் தெரிந்துகொண்டிருந்தார். இன்னும் ஊன்றிச் சிந்திக்கின், நம்மைக்காட்டிலும் இவர் இன்னும் சிறிது குறைவாகத்தான் அறிந்திருக்கக் கூடும்! ஏன்? நமக்கேனும் பெரியாழ்வார் பிள்ளைத் தமிழ் ஒன்று வழி காட்டியாய் உள்ளது. அதைக்கொண்டு, மற்றவற்றால் தெரிந்துகொள்ள முடியாத பல பொருள்களை நாம் அறிகிறோம். இவ்வாய்ப்புப் பெரியாழ்வாருக்கு ஏது? அங்ஙனமிருந்தும், அவன் இயற்றிய ஒவ்வொரு செயலையும், அவ்வமயம் நடந்த ஒவ்வொரு செய்தியையும் நேரே இருந்து கண்டவர் போன்று கழறுகிறார். இவ்வியல்பு இவருக்கு யாங்ஙனம் அமைந்தது? பரம்பொருளின் பான்மையைப் பகுத்துப் பகுத்து உணரும் பெரியாழ்வாருக்கு நம்மைப்போன்று புறக்கண்கள் மட்டுமா உள்ளன? இவர், மனக் கண்ணாகிய ஞானக்கண்ணையும், பரமனை உணரும் பத்திக் கண்ணையும் பெற்றவரல்லரோ?

இவருடைய ஞானக்கண் பன்னாட்களுக்குமுன் நிகழ்ந்த கண்ணன் செயல்களைக் காண்கின்றது. பத்திக்கண் அவற்றினுடைய நுண் பொருளின் தத்துவத்தை நோக்கு கின்றது. அவ்வமயத்தில் அங்கு அருகில் இருந்து பார்த் தவர்தாம், இத்துணைச் சூக்குமப் பொருள்களை எடுத் துரைக்க முடியுமோ? அகப்பொருள்கள் புறக்கண்க ளுக்குப் புலப்படுதல் யாங்ஙனம்? அகக்கண் வாய்ந்த ஒருவருக்குத்தானே அகப்பொருள் புலனாகும்? இது நிற்க.

இவற்றிற்கு முன்செப்பிய பெரியாழ்வாரின் ஞான மும் பத்தியுமட்டுமோ காரணம்? அன்றன்று! இங்ஙனம் கூறச் சான்றோர் ஒருப்படார். இவருக்கு எம்பெரு மானே தன்னைக் காட்டுகிறான்; மயர்வறு மதி நலத்தைத் தருகிறான். அவ்வுதவியால் இவர் கண்ணன் இயல்புகளை நன்கு காண்கிறார்; உள்ளவற்றை உள்ளபடியே உரைக் கிறார். இது மட்டுமா? பெரிய பிராட்டியாருக்கு ஒப்பானவர், செல்வம் விளையும் நிலம் போன்றவர், நல்லா ரைப் போன்றே தீயாரையும் தாங்கி நிற்பவர், தம்மை அகழ்வாரையும் தாங்கும் சான்றாண்மை வாய்ந்தவர், உலகில் தோன்றியும் உலக மயக்கில் சிக்குண்ணாதவர், சொல்லிலும் செயலிலும் எம்பெருமானையே ஒன்றி நிற்பவர், தந்தையாரின் அடியொற்றி நடப்பவர், ஞான பத்தி வைராக்கியங்களில் தலைநின்றவர், தாம் சூடிய மாலைகளினால் வடபத்திர சாயியை அழகுபெறச் செய்த வர், கண்ணனையே கருத்திலிருத்தியவர், எண்ணிய காரி யத்தில் வெற்றி பெற்றவர், "வல்ல பரிசு வருவிப்பரேல், அது காண்டும்," எனப் பெரியாழ்வாரே தம் பேற்றிற் குக் காரணம் என உன்னியவர், இங்ஙனம் பல பெருமை கள் வாய்ந்தவராகிய நிலமகளாரை மகவாகக் கொண்டு வளர்க்கும் புண்ணியமும், அன்பினால் அவரை என்றும்

மனத்திலிருத்தி மகிழும் தவமும் வாய்ந்த பெரியாழ்வாருக்குக் கண்ணன் செயலில் காணும் பண்புகளும், அவன் கருத்தில் அமைந்த நுட்பங்களும் மட்டுமா புலனாகும்! கண்ணன் ஆன்ம ஸ்வரூபத்தில் ஆழ்ந்திருக்கும் அரும் பொருள்களும் விளக்கமுறுவோ? இத்தன்மையில் பெரியாழ்வார் பிள்ளைத் தமிழுக்கு மற்றையார் பிள்ளைத் தமிழ் ஒப்பாதல் யாங்ஙனம்?

பெரியாழ்வார் இயற்றியவை, திருப்பல்லாண்டும் பெரியாழ்வார் திருமொழியுமாகும். பல்லாண்டு பன்னிரண்டு பாசுரங்களையுடையது. திருமொழி நானூற்றறுபத்தொரு பாசுரங்களையுடையது இவற்றுள் கண்ணன் இளமை லீலைகளை இயம்புவன இருநூற்றெழுபத்து மூன்று. இந்நூலில் பாதிக்கு மேல் கண்ணன் குழவிச் செயல்களே பகரப்படுகின்றன. இங்ஙனம் இவர் கண்ணன் செயல்களையும், மன நிலைகளையும் செப்பியதுடன் நில்லாமல், அதற்கு அடுத்த இரண்டு திருமொழிகளிலும் (21 பாசுரங்கள்) மணப்பருவமடைந்த தம் மகளின் மனப்போக்கையும் எடுத்துப் பகருகிறார். இதனால், இவர் ஆண்பாற்பிள்ளைக் கவி, பெண்பாற் பிள்ளைக்கவி இரண்டையும் பகர்ந்துள்ளார் என்பதை அறிகிறோம். இத்தன்மையிலும் பிள்ளைத் தமிழ் பாடிய மற்றையார் இவருக்கு எவ்வாறு ஒப்பாவார்?

இனி, இவர் பிள்ளைத் தமிழில் அமைந்துள்ள நுட்பங்களை நோக்குவோம்: மற்றவர் செய்த பிள்ளைத் தமிழைப் போன்றும், அதன் இலக்கணத்தை ஒட்டியும் இப்பிள்ளைத் தமிழ் அமையவில்லை என்பதை முன்னரே வெளியிட்டுள்ளோம். இலக்கணத்தைக் கற்று அன்றி இலக்கணத்தை முன் வைத்துக்கொண்டு இவ்விலக்கியம் செய்யப்படவில்லை. இவ்விலக்கியத்திற்குக் கண்ணன் செயல்களின் தொகுதியே பொருளாயிற்று. அவனே இதற்கு வழிகோலித் தந்தான். பிள்ளைத் தமிழில் காணப்

படாத பல உறுப்புகள் இதில் காணப்படுதற்கு இவை போன்ற காரணங்கள் பல உண்டு. முன் செப்பியவாறு அவன் விளையாட்டுகளை அகக்கண்ணால் நோக்கி நோக்கிப் பாடப்படும் இப்பிரபந்தம் முறைப்படி அமைதல் யாங்ஙனம்? இதில் இயம்பும் ஒவ்வொரு செயலும், அச்செயலைப் பற்றிக் கூறும் ஒவ்வொரு சொல்லும் மதிப்புமிக்கது; மக்கள் மனத்தை ஊடுருவிச் செல்வது; உள்ளத்தை உருக்குவது; உயர்பொருள் சுரக்கத்தக்கது; அறிஞரும் விரும்புவது; அன்பு மயமாக்க வல்லது; இறையருளில் பதியச் செய்வது. பிள்ளைப் பருவத்தில் இயற்கையாக நடைபெறும் ஒவ்வொரு காரியத்தையும் வெளியிடும் இதுவே, சரியான பிள்ளைத் தமிழாகும். உலகம் இதைப் பின்பற்றின், பிள்ளைத் தமிழ் என்னும் பிரபந்தம் மாண்புறும் என்பது திண்ணம். இது நிற்க.

## 5. பிள்ளைத் தமிழும் வாழ்த்து நூலே

பட்டர்பிரான் திருவாய் மலர்ந்த நூல்கள் பல்லாண்டு பெரிய திருமொழி ஆகிய இரண்டு என்பதை முன்னரே கூறியுள்ளோம். இவ்விரண்டும் வாழ்த்து நூல்களேயாகும். இவற்றுள் முதலது எம்பெருமானை வாழ்த்திய நூல் என்பதை யாவரும் அறிவர். பல்லாண்டு என்னும் அதன் பெயரே அதை அறிவியாநிற்கும். 'ஆனால், பெரியாழ்வார் திருமொழியில் பாதிக்குமேல் கண்ணன் பிள்ளைப் பருவச் செயல்களும், மற்றப் பிரிவில் தாய்க் கூற்று முதலியனவும் காணப்படுகின்றமையின், இஃதெங்ஙனம் வாழ்த்து நூலாகும்?' என்னும் ஐயப்பாடு தோன்றலாம்.

இதை ஆராய்வோம்: பட்டர்பிரான் சர்வ ரக்ஷகனை எம்பெருமானை ரக்ஷயப் பொருளாகவும், தம்மை ரக்ஷக

ராகவும் வைத்து வாழ்த்துகிறார். அதில் காட்சி நிலை மாறவில்லை. ரக்ஷக ரக்ஷய நிலை மாறிற்று. இது பொருத்தமற்றதேயாயினும், அத்துணை வியப்பை யுடையதன்று. ஏன்? ஒரு பொருளினிடத்து உண்டாகும் எல்லைகடந்த அன்பு ஓரோவொருகால் ஒருவரைத் தடு மாறிய இந்நிலைக்குக் கொணரினும் கொணரலாம். ஆனால், இரண்டாம் நூலில் அமைந்திருக்கும் வாழ்த்தொலிதான் பொருத்தமானதும் வியப்பிற்கிடமானதுமாகும்:

நித்திய சூரிகளுக்குத் தலைவனாய்த் தன் ஸ்வாமித்து வம் தோன்றக் கம்பீரமாய் ஆனந்த மயமான பரமபதத் தில் வீற்றிருக்கும் இறைவன், தன் ஆஸ்ரிதர்பொருட்டு மண்ணுலகில் எளியனாய் உலகக் குழவியாய்த் தோன்று கிறான். அரசனாகிய கஞ்சன் முதல், ஏவலாளர் இறுதி யாகக் குழவியைக் கண்டு அழிக்க வழி தேடுகின்றனர்; புல்லிலும், பூண்டிலும், பறவையிலும், சகடத்திலும் பகைவர் கிளர்ந்தெழுகின்றனர்; உடலழகோ, கண்டார் கண்களைக் கவரக்கூடியது! செய்யும் காரியங்களோ, தெய்வச் செயல்கள்! ஆயர்பாடியிலுள்ள மக்களோ, இடக்கை வலக்கை அறியாத மக்கள்; பாலகனின் உயர் பண்புகளையும், உத்தமச் செயல்களையும் ஊன்றி நோக்கும் ஞானமுடையவர்களல்ல. நந்தகோபனோ, சாந்த குண சீலன். யசோதையோ, தன் மகனை உலகக் குழவி யெனவே கருதும் கபடமற்றவள். ஆயினும், அவ்விளை ஞன் இயற்றும் இங்கிதச் செயல்களைப் புகழாதாரும், கண்ணெச்சில் வீழ்த்தாதாரும் இல்லை. ஆனால், இஃ தொரு கடவுட்குழவி என்பதை எண்ணுவாரும், பல் லாண்டு பாடுவாரும் ஒருவருமிலர். இந்நிலையில் பல் லாண்டு பாடுவதற்கு ஒருவர் வேண்டாவா? இங்கு வாழ்த்துப் பாடவேண்டுவது பொருத்தமுடையதன்றோ? ஆதலாற்றான் பிற்காலத்தில் தோன்றிய பட்டர்பிரான்,

கண்ணனாகிய கருங்குட்டனுக்கு மங்களாசாஸனம் செய்ய முற்பட்டார். கிருஷ்ணவதாரத்தில் அக்குழவி செய்த ஒவ்வொரு செயலையும் ஆழ நினைக்கிறார் ஆழ்வார். ஒவ்வொன்றும் அவர் முன்னிலையில் வந்து காட்சியளிக்கிறது. அவன் வீரச் செயல்கள், அற்புதக் காரியங்கள், அருட்டன்மைகள், எளிய போக்குகள், பெருந்தன்மைகள் இவைகளின் பாகுபாடுகளை ஆழ்வார் நன்கு உணர்கிறார்; "இத்துணைப் பெரியானை வாழ்த்தினார் ஒருவருமிலரே! இவனைப் புகழாத நாவென்ன நா!" என எண்ணினார். உடனே இவர் திருவாயிலிருந்து வாழ்த்தொலிகள் ஒன்றன் பின் ஒன்றாக வெளிப்போதருகின்றன. நாம் இங்குக் கூறப் புகுந்தது பிள்ளைத் தமிழாதலால், இதைப் பற்றிப் புகன்றிருக்கும் ஏறக்குறைய இருபத்தாறு திருமொழிகளிலும் பல்லாண்டு நிரம்பி இருப்பதையும், இவை பல்லாண்டு பாசுரங்களே என்பதையும் தெள்ளிதின் காட்டுவாம். பெரியாழ்வார் காலத்துக்கு எவ்வளவோ முற்பட்ட காலத்தில் நிகழ்ந்த கண்ணன் திருவிளையாடல்கள் அப்போதுதான் நடந்தவை போன்று இவர்முன் காணப்படலும், இவர் அவற்றின் பண்புகளைத் தெள்ளிதின் உணர்தலும் வியப்பல்லவா?

கண்ணன் பிறந்ததும் ஊர் அலங்கரிக்கப்படுகின்றது. யாவரும் அதைக்கண்டு ஆனந்தத்தினால் தம்மைத்தாம் மறந்து, பாடியும் பல் பறை கொட்ட நின்றாடியும், 'திருவோணத்தான் உலகாளும்,' எனக்குழவியை வாழ்த்துகின்றனர்.

கண்ணனுடைய கமலபாதங்கள் தொடங்கிக் கேசம் மட்டும் ஒவ்வோர் அவயவத்தின் அழகு, சிறப்பு, அமைப்பு முதலியவற்றைத் தனித்தனியே பாராட்டுகிறார் பெரியாழ்வார். இவர் இதற்கு யாரைத் துணையாகக் கொள்கின்றார்? அம்மகவை யாருக்குக் காட்டி மகிழ்கின்றார்?

தேர்ந்தெடுத்த ஆபரணங்களையும் வளைகளையும் அணிந்தவர்களும் அழகிய நெற்றியையுடையவர்களுமாகிய பெண்களையே அல்லவா? பல்லாண்டு பாடும் பண்புடையார் யாவர்? நற்குடி மகளிரே அல்லரோ? இத்திரு மொழியின் இறுதியில், "இதைச் சொல்லுபவர் ஸ்ரீவைகுண்டத்தில் சென்று என்றும் அவனை நீங்காமல் சூழ்ந்து பல்லாண்டு பாடிக்கொண்டிருப்பார்," என்கிறார் ஆழ்வார். இப்பேறு யாருக்குக் கிடைக்கும்? இவ்வுலகில் எம்பெருமானுக்குப் பல்லாண்டு பாடுபவருக்கே அன்றோ?

யசோதை கண்ணனைத் தொட்டிலில் வளர்த்தி, அவன் வீரச்செயல்களையும் அழகையுமே சொல்லித் தாலாட்டுகிறாள். பொதுவாகத் தாய்மார் தாலாட்டில் எதை இயம்புவார்? 'குழவி, யாதோர் இடுக்கணும் இன்றி நீடூழி வாழ வேண்டும்!' என்பதையேயன்றோ? அன்றியும், இங்கு நம் பெரியார், நான்முகன் முதல் துர்க்கை ஈறாக உள்ள எல்லாத் தேவதைகளும் கண்ணனுக்கு அரிய பொருள்கள் பலவற்றைப் பரிசாக அனுப்புவதாகச் சொல்லுகிறார். மணக்காலத்திலும், விசேஷக் காலத்திலும் பிறர் அன்புடன் ஈயும் பொருள்களுக்குப் பொதுவாக ஆசீர்வாதம் என்றுதானே கூறுகின்றோம்? அதன் பொருள் என்ன? பல்லாண்டே அன்றோ?

தவழும் பருவத்தை அடைந்து கண்ணன் நிலா முற்றம் சென்று தன் பிறப்பின் மெய்ப்பாடு தோன்ற மன உருக்கத்துடன் சந்திரனை அழைக்கிறான். 'இச் செயலை நாம் தடுப்பின் இவனுக்குத் துன்பமுண்டாகும். இவன் இன்பமுடன் வாழ முயலலே நம் கடமை,' என எண்ணிய ஆழ்வார், விண்ணில் பொருந்திய மாமதியை அழைத்தல் போன்று சிறந்த ஞானமுடையவரை எம்பெருமானுக்குப் பல்லாண்டு பாட அழைக்கிறார்.

எம்பெருமான் ஆஸ்ரித பரதந்திரனாதலால், தன் அன்பர்கள் சொற்படி அவர்களுக்குப் பகைவரான காளிங்கன் முதலிய கொடியர் தலைகள்மேல் பரதநாட்டியமாடாநிற்பன். அதைக்கண்ட பெரியாழ்வார், 'ஆயர்களுக்கு ஆண் சிங்கத்தைப் போன்றவனே, வாழ்க வாழ்க!' என்கிறார். 'ஆடுக ஆடுக!' என்பது எதைக் குறிக்கிறது? 'நீ என்றும் தளர்ச்சி அடைதல் கூடாது. உன் ஆனந்த நடனம் இன்று போன்றே என்றும் பல்லாண்டாக நடைபெறுதல் வேண்டும்,' என்பதையன்றோ? இன்னும், 'இப்பத்தும் வல்லார் இவ்வுடலுடன் இவ்வுலகில் இருப்பினும், துயரம் நீங்கி இன்பமெய்துவர்,' என்கிறார். துன்பம் கலவாத இன்பம் பெறுபவர் யார்? எம்பெருமானுக்குப் பல்லாண்டு பாடும் கைங்கரியத்தை மேற்கொள்பவரே அல்லரோ?

இரு கரங்களும் ஒலிக்குமாறு கொட்டுதல் 'சப்பாணி' எனப்படும். கைகளைத் தட்டுங்கால், இரு கைகளையும் கூப்புதல் அஞ்சலியைக் குறிக்கவில்லையா? இவ்வஞ்சலியின் கருத்தென்ன? 'என்னிடம் ஒரு கைம்முதலும் இல்லை. நீயே என்னை ஆதரிக்க வேண்டும்,' என்பது அன்றோ? இஃது ஆகிஞ்சந்ய அநந்யகதித்துவங்களைக் காட்டுவதாகும். உபாய நிலையிலும், உபேய நிலையிலும் இவை வேண்டும் என்பதை வற்புறுத்தற்பொருட்டே ஆழ்வார் இரு முறை 'சப்பாணி சப்பாணி' என்கிறார்; உலகத்தை மங்களாசாஸனத்தில் ஈடுபடுத்தக் கருதிய ஆழ்வார், இத்திருமொழியில் கூறாமல் கூறி யாவரையும் பல்லாண்டு பாடப் பண்படுத்துகிறார். யாங்ஙனம்? எல்லாப் பொருளையும் பெற்றவன், ஒருவரிடமும் ஒன்றையும் விரும்பாதவன் இங்ஙனம் அன்பர் சொல்லுமாறு அஞ்சலி செய்யுங்கால் அச்செயலிற்குப் பல்லாண்டு கூறுவதைவிட வேறெதை அறிஞர் சொல்வர்?

இளங்குழந்தைகள் நின்று நின்று மிக்க சிரமத்துடனும், அச்சத்துடனும் அடிகளை மெல்லென எடுத்துவைத்தலைத் 'தளர் நடை' என்கிறோம். ஒரே செயலில் இரு வேறு உணர்ச்சிகள் ஊட்டக்கூடியன சில உண்டு: அவற்றுள் இஃதும் ஒன்று. இத்தளர் நடையை அன்பர் காண்கின்றார். மற்றச் செயலினும், இச்செயலில் கண்ணனுடைய எல்லா அவயவங்களின் சேர்க்கை அழகும், ஆபரணங்களின் ஒளியும், இரு காலிலும் உள்ள சங்க சக்கர ரேகைகள் நிலத்தில் பதியும் தன்மையும் இவர் மனத்தைத் தளிர்ப்பிக்கின்றன. இக்குதுகுலத்தினால் ஆழ்வார் பல்லாண்டு பாடுகிறார். அன்றியும், இந்நடை தம் அன்பர்களின் பகைவர் தலையை ஊன்றி மிதித்தல் போன்றுள்ளது. 'மாற்றலர் தலைகள் மீதே தளர்நடை நடவானோ!' என இவர் பகர்கிறார்; உடனே இவ்வழகிய நடைக்குப் பல்லாண்டு பாட முற்படுகின்றார். ஆகவே, ஒரு செயலே அன்பர்க்கு ஆனந்தத்தையும், பகைவருக்கு அச்சத்தையும் விளைவித்துப் பல்லாண்டைப் பெறுகிறது.

'அச்சோ' என்பது, கண்ணன், அவன் கைகளாலும் தோள்களாலும் தன்னை வந்து தழுவிக்கொள்ளுமாறு விரும்புவதைத் தெரிவிக்கும். "இவன் இந்திரன் நன்மையின்பொருட்டுக் குறள் வடிவெடுத்தவன். இவன் கைகளின் பரிசமன்றோ, சந்தனம் தந்த பெண்ணின் கூனை நிமிர்த்தது?" எனக்கருதின், இத்துணை ஸௌசீல்யம் வாய்ந்த கரங்களைப் பெற்ற கண்ணனுக்குப் பல்லாண்டு கூற அறிஞர் முற்படுவரல்லரோ! வேதப்பயன் கொள்ளவல்ல இவர் அதி சூக்குமமானதும், பரம இரகசியமானதுமான பல்லாண்டை இங்கு 'அருமறை' என்கிறார். 'அருமறை தந்தான்' என்பதை நோக்குக.

'புறம் புல்குதல்' என்பது, எம்பெருமான் எல்லா அவ்யவங்களும் தம்மேல் பதியுமாறு தழுவிக்கொள்ளல். ஒரு

போது பல கண்களையுடைய மயிற்பீலியைச் சூடிக் கொண்டு, நிலவறையிலுள்ள இளமகளிர் வெளிப் போதரக்குடக் கூத்தாடிக் குழலூதி நிற்கிருன். மற்ெருரு போது பெற்ருேர் மகிழ அவர்கள் முதுகின்மேல் சாய்ந்து அவர்கள் கழுத்தைக் கட்டிக்கொள்ளுகிருன். இதைக் கண்ட தேவரும், இவ்வுலகினரும் பல்லாண்டு பாடி நிற்கின்றனர்.

"கண்பல செய்த கருந்தழைக் காவின்கீழ்ப்
பண்பல பாடிப் பல்லாண் டிசைப்ப"

— பெரியாழ்வார் திருமொழி, 1-9-5

"கூத்துவந் தாடிக் குழலா விசைபாடி
வாய்த்த மறையோர் வணங்கஇமை யவர்ஏத்த"

— பெரியாழ்வார் திருமொழி, 1-9-8

இளைஞர் இரு கைகளினுல் இரு கண்களையும் மூடி மூடித் திறந்து பிறரை அச்சுறுத்துவதாக நினைக்கும் ஒரு விளையாட்டைப் 'பூச்சி காட்டுதல்' எனக் கூறுகிருேம். இதைக் 'கண்ணன் இரு தோள்களிலும் உள்ள சங்க சக்கரங்களை மறைத்துப் பூச்சி காட்டுகிருன்,' என்கிருர் எம்பார்.

போர்க்களத்தில் நூற்றுவரும் பாண்டவரும் கலந்தே இருந்தனர். ஆனுல், மறத்தை மேற்கொண்ட நூற்றுவர் வீந்தனர். அறச்செல்வர் ஐவரும் வாழ்ந்தனர். காளிங்கன் நஞ்சால் காய்ந்து சருகென நின்ற கடம்ப மரம், இவன் அருட்பார்வையால் பூத்து நின்றது. இவற்றைத் தெரிவிக்கும் இத்திருமொழியை அநுசந்திப்பார் வைகுந்தமேறிப் பரமனைச் சூழ்ந்திருந்து பல்லாண்டு பாடப்பெறுவர் எனப் பகர்கிருர் ஆழ்வார்.

தூண்டா விளக்கனைய கண்ணன் செய்யும் தெய்வச் செயல்களைக் கண்டார், 'இவனைப் பெற்ற வயிறுடை

யாள் என்ன தவம் செய்தனளோ!' என வாழ்த்துகின்றனர். மங்களாஸாஸனத்தில் 'பெரியார்' என உலகத்தார் யாவராலும் புகழ்பெற்ற பட்டர்பிரான், இறைவனை விட்டு நீங்காது பல்லாண்டுபாடும் அறிஞருக்குச் செங்கழுநீர் மலரையும், அவர்தம் புகழிற்கு அதன் மணத்தையும் ஒப்புப்படுத்துகிறார்.

"நீரணிந்த குவளை வாசம் நிகழ நாறும்
வில்லிபுத்தூர்"

— பெரியாழ்வார் திருமொழி, 2-2-11

உடலை வளர்க்கும் உணவை உட்கொள்ள வாய் எங்ஙனம் இன்றியமையாததோ, அங்ஙனமே ஆன்மாவை வளர்க்கும் கேள்வி உணவை உள்ளேற்கச் செவி அவசியம் வேண்டற்பாலதாகும். இதுவே மக்களுக்கு அழியாததும் உயரியதுமான செல்வம்.

"செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம் ; அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை."

நற்கேள்விகளினால் செவி தொளைக்கப்பட வேண்டும். இன்றேல், பிறந்ததன் பயனைப் பெறுதல் இயலாது. இஃது ஒவ்வொரு மனிதருக்கும் இன்றியமையாததாகும். இவ்வுயரிய தத்துவத்தைத்தான் கண்ணனிடம் வைத்துக் காட்டுகிறார் ஆழ்வார். தன் மகன் காதைப் பெருக்க வேண்டுமென்பதன் கருத்து, நற்கேள்விகளினால் காதைத் தொளைக்க வேண்டுமென்பதே! இத்திருமொழியில் ஆழ்வார் திருமாலின் பன்னிரண்டு திருநாமங்களைப் பகர்ந்து அவற்றிற்குப் பல்லாண்டு கூறுகிறார்.

ஈஸ்வரனுடைய சரீரத்தில் அமைந்திருக்கும் முமுக்ஷுக்கள், சமுசாரிகள் இவர்களை முறையே, கண்ணன் திருமேனியில் படிந்திருக்கும் வெண்ணெய், மண் இவற்றிற்கு ஒப்பிடுகிறார் ஆழ்வார். வெண்ணெய் உயர்ந்ததும், மண்

தாழ்ந்ததுமாய் இருப்பினும், இரண்டும் உடலின் தூய்மையைப் போக்கி, கண்டார்க்கு அழுக்கெனக் காணப்படுவனவே அல்லவா? அங்ஙனமே இந்திரியங்கட்கு வசப்பட்டுத் தமக்குத் தாமே சுதந்தரர் என்னும் கருத்துடன் வாழ்க்கை நடத்தும் சமுசாரிகளைக்காட்டிலும், முமுக்ஷுக்கள் உயர்ந்தவர்களே ஆயினும், அவர்கள் பத்தியிலும், பிரபத்தியிலும் நிஷ்டையுடையாராய் மோட்சத்திலேயே சுவையுள்ளாராய் இருத்தலினால், இவ்வுலகில் யாவருக்கும் எப்போதும் சேவை அளித்துக்கொண்டு கலியாண குணங்கள் நிறைந்தவனாய்க் காணும் அர்ச்சாவதாரப் பெருமாளுக்குப் பல்லாண்டு பாடுவதாகிய கைங்கரியத்தை மேற்கொள்ளாமல் நிற்கின்றனர். இம்முறையில் அவர்களும் தாழ் நிலையையுடையவர்களே ஆவார்கள். ஆதலின், அவர்களையும் ஞான நீரால் கழுவக் கருதுகிறார் மங்களாசாஸனத்தில் மன்னி நிற்கும் பெரியாழ்வார்.

மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்கள், பறவைகளை ஆசாரிய நிலையில் வைத்து ஈஸ்வரனிடம் தூது அனுப்புதல் மரபு. அங்ஙனமே விஷ்ணுசித்தரும் கண்ணன் குழலைத் திருத்துதற்குக் காக்கையை விளிக்கிறார். அசுத்தப்பொருள்களையும், பிதிர்க்களுக்கு இட்ட பிண்டத் திரளையும், பேய்க்கிட்ட நீர்ச் சோற்றையும் உண்டு வாழ்தலினாலும், இனத்தோடு சேர்ந்து வாழ வேண்டுமென்னும் பற்றுதலினாலும், இன்னும் பலவற்றாலும் காக்கை இனம் தமோ, ரஜோ குணங்களுடையது என்பதை அறியலாம். எங்ஙனம் மேற்கூறிய இரு குணங்களுமுடைய மக்களை இறைவனுக்கு மங்களாசாஸனம் செய்ய, 'எத்திறத்தும் உய்வதோர் உபாயமில்லை. மாலை வாழ்த்தி உய்மினோ,' என அழைக்கிறாரோ, அங்ஙனமே, இவ்விரு குணங்களையுமுடைய காக்கையையும், கண்ணன் கைங்கரியத்திற்கென அழைக்கிறார்.

எத்தகையாரையும் எம்பெருமான் கைங்கரியத்தில் ஈடுபடுத்த வேண்டுமெனக் கருதும் பெரியாழ்வார், மங்களாசாஸனம் செய்யத் தகுதியற்றவர்களையும் அகல விடாமல், அவர்களிடம் உள்ள இரண்டொரு நற்குணங் களைக்கொண்டு அவர்களையும் பல்லாண்டு பாடத் தம்முடன் சேர்த்துக்கொள்ளுதல் போன்று, காகம் செய்த பிரபத்தியில் விஷய தோஷங்கள் இருப்பினும், அவற்றை அறவே நீக்கி அதன் சரணாகதியையே பயனாகக் கொண்டு கண்ணனுக்குக் கைங்கரியம் செய்ய அழைக் கிறார். உண்மை உள்ளத்துடன் காரியம் செய்யப் புகுவார் மற்றவரையும் தம்முடன் சேர்த்துக்கொள்வது இயல்புதானே? அங்ஙனமே இவர் காகத்தையும் கண்ண னுக்குக் குழல் முடிக்கும் கைங்கரியத்தைப் புரியுமாறு செய்து, அதனைப் பல்லாண்டு பாடுமாறு ஏவுகிறார்.

முன் திருமொழியில் ஆழ்வார் காகத்தைப் போன்று ரஜோ தமோ குணமுடையவர் சிலரைக் கண்ணனுக்குக் கைங்கரியம் செய்யுமாறு அழைத்தார்; அதிலும் சேராத சிலரை இத்திருமொழியில் விளித்து எம்பெருமானுக்குப் பல்லாண்டு பாடுவதாகிய தொண்டு புரிய ஏவுகிறார். யாவரையும் நல்வழிப்படுத்த வேண்டுமென்பது பெரி யாரின் பரந்த எண்ணமன்றோ? கண்ணன் பசு மேய்த்தல் என்பது ஆன்மாக்களைக் காத்தலைக் குறியாநிற்கும். இவன் சொல்லும் 'கோல்' என்பது எது? ஆன்மாக்கள் பிறப்பிறப்பிலிருந்து விடுபட்டு வீட்டின் பேற்றை அடைந்து, எம்பெருமான் அருகிலிருந்து அவனுக்குக் கைங்கரியம் செய்வதாகிய பேற்றை அடைவதற்கு ஊன்றுகோலாயுள்ள மங்களாசாஸனமேயாகும். இக் கோலாகிய பல்லாண்டைப் பாடுமாறுதான் காகத்தைப் போன்ற குணக்கேடரையும் இத்திருமொழியில் அழைக் கிறார் பெரியாழ்வார்.

கீழ்த்திருமொழியில், 'கூழாட்பட்டு நின்றீர்களை எங்கள் குழுவினில் புகுதலொட்டோம்,' எனத் தள்ளி வைத்த காகத்திற்கு ஒப்பானவர்களையும் தம்முடன் கூட்டிக்கொண்டு பல்லாண்டு பாடினார் ஆழ்வார்; இத் திருமொழியில் கண்ணனுக்குப் பலவித மலர்களைச் சூட்டி அவனை மகிழ்விக்கும் தொண்டை மேற்கொள்ளுவதாகப் பாவிக்கிறார். இத்தொண்டு பெரியாழ்வாருக்கு மிக்க பொருத்தமுடையதாகும். ஏன்? இவர் வாழ்நாட்கள் முற்றும் புரிந்தது எம்பெருமானுக்கு மலர்மாலை தொடுத்துத் தரும் தொண்டுதானே? ஆனால், ஆழ்வார் கண்ணனுக்கு இத்திருமொழியில் செய்யும் பணி, அவன் திவ்விய மங்கள விக்கிரகத்தை அழகுபடுத்தி அதற்குப் பரிமளத்தை ஊட்டும் கேவலம் செடியிலும் கொடியிலும் இதழ்களை விரித்து அலரும் மலர்களினாலானதன்று. ஆயினும், 'மலர்களைச் சூட்டி உன்னை அழகுபடுத்திப் பார்க்க விரும்புகிறேன்,' என மலரைப் போக்குக்காட்டிக் கூறுதற்கும் இவண் பொருள் இல்லாமற்போகவில்லை.

மலர்களிலிருந்து உண்டாவது யாது? கலப்பு மணம். அஃதென்ன செய்யும்? அஃது எங்கும் வீசித் தொலைவிலுள்ள பலரையும் தன் வசப்படுத்தும்! மலர்களுக்கு ஒப்பாவன இறைவன் திவ்வியாத்தும சொருபத்தில் பதிந்திருக்கும் கலியாண குணங்கள். அவற்றிலிருந்து தோன்றுவது புகழாகிற மணம். அஃது எங்கும் பரவுகிறது. அதில் ஈடுபட்ட அண்டத்தமரரும் அவனுக்கு மங்களாசாஸனம் செய்கின்றனர்.

'அண்டத் தமரர்கள் சூழ அத்தாணி யுள்ளங் கிருந்தாய்'

— பெரியாழ்வார் திருமொழி, 2-7-9

ஆழ்வாரும் கலியாண குணங்களால் அலங்கரிக்கப் பட்ட கண்ணனை மனக்கண்ணால் கண்டு கண்டு

பல்லாண்டு பாடுகிறார். அக்கருத்தைத்தான் இத்திரு மொழியில் தெரிவிக்கிறார் ஆழ்வார்.

ஒருவருக்குக் கண்ணெச்சில் (திருஷ்டி தோஷம்) உண்டாகாதவாறு மஞ்சளும் சுண்ணும்பும் கலந்த ஆரதிநீர் சுற்றுவது காப்பிடுதல் எனப்படும். பெரியாழ்வார் கீழ்த் திருமொழிகள் சிலவற்றில், கண்ணனுக்குப் பல வித அலங்காரங்களைச் செய்து இதற்கு முந்திய திருமொழியில் பல வகை மலர்களைச் சூட்டுதல் போன்று, அவன் உயர் கலியாண குணங்களால் கண்ணனை அழகுபடுத்தினார். அங்ஙனம் செய்த இவரே, தம் மனக்கண்ணால் அவனை நோக்கினார். தம் கண்ணெச்சிலே அவனுக்கு ஊறு விளைக்கும்போல இருந்தது. அவ்வாறாயின், பிறரைப் பற்றி என் செப்புவது! ஆழ்வாருக்கு அச்சம் மேலிட்டது; எவர் திருஷ்டி தோஷத்தால் இப்பரம்பொருளுக்கு என்ன இன்னல் நேருமோ!' என நடுங்கினார்; ரக்ஷக ரக்ஷய பாவத்தில் மாறாடி நின்றார்; பரமனின் பண்பையும், வன்மையையும் முற்றும் மறந்தார். இந்நிலை பெரியாழ்வாருக்கு அடிக்கடி உண்டாதல் இயல்புதானே! இதில் வியப்பேனும், அருமையேனும் தோன்றுதல் ஏது?

இக்காப்பிடுதலின் உட்பொருளென்னை? பிறர் கண்ணெச்சிலினால் அப்பொருள் தீமையடையாமல் என்றும் பல்லாண்டாக வாழவேண்டுமென மங்களாசாஸனம் செய்வதே அன்றோ? இங்கு இவர், 'பல்லாண்டு பல்லாண்டு எனப் பொருள் பொதிய வாழ்த்தி ஏத்தி நன்றாகக் காப்பிட வாராய்,' என்கிறார்.

"சொல்லார வாழ்த்தி நின்றேத்திச்
சொப்படக் காப்பிட வாராய்!"

— பெரியாழ்வார் திருமொழி, 2-8-5.

இவர் முன்பு இயம்பியதும் 'சேவடி செவ்வி திருக் காப்பு,' என்பதன்றோ?

ஆழ்வார் இத்திருமொழியின் இறுதியில் "வேதப் பயன் கொள்ளவல்ல விட்டுசித்தன் சொன்ன மாலை பாதப் பயன் கொள்ள வல்ல பத்தருள்ளார் வினை போமே," என்கிருர். —பெரியாழ்வார் திருமொழி, 2-8-10.

வேதத்தின் பயன் எது? எம்பெருமானுக்கு மங்களா சாஸனம் செய்வதே ஆகும். இவர் திருவாய் மலர்ந்த மாலையினுல் அடையும் பயன், திருப்பல்லாண்டின் முதற் பாசுரத்தின் முதலடியின் பயனே எனப் பெரியார் பகர்வர். "பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு," என்பது அது.

பெரியாழ்வார் கண்ணனைக் கலியாண குணங்களால் அழகு செய்து காப்பிட்டு வெளியே விளையாட விட்டார். உடனே அவன், தன்மாட்டு அன்பு வாய்ந்த இடைப் பெண்களை எல்லாம் மங்களாசாஸனம் செய்து வாழ்விக்க எண்ணினுன். வாழச் செய்தலாவது, அவரிடம் கிஞ்சித் காரத்தைப் பெற்று மனமகிழ்தலன்ருே? ஆதலின், அவர்களுக்குத் தெரிந்தோ தெரியாமலோ அவர்கள் இல்லங்களில் புகுந்து, அங்குள்ள வெண்ணெய், தயிர், பால், பட்சணங்களை உண்டு உவக்கின்ருன். அதைக் கண்ட ஆழ்வாருக்கு வியப்புத் தோன்றுகிறது. 'பல நாட்கள் உணவு இன்றிக் காட்டில் தவஞ்செய்து நிற்கும் மனன சீலருக்கும் அரியவனுன இவன், ஒன்றும் உணராத இவ்விடை மங்கையரை மங்களாசாஸனம் செய்து திரிகின்ருனே! இவன் வாத்ஸல்யம் என்னே!' எனச் சிந்தித்து, 'இவன் பெருந்தகையும், நிர்ஹேதுக கடாட்சமும் வாழக்கடவன!' எனத் தம் பாடலால் அவனுக் குப் பல்லாண்டு பாடுகிருர்.

கீழ்த்திருமொழியில் கண்ணன் மங்கையர் செய்து வைத்த பட்சணங்களைப் பாகவத சேஷத்துவமென்று உண்டு உண்டு களித்தான். இத்திருமொழியிலோ,

கண்ணனிடமே முழு அன்பையும் செலுத்தியுள்ள அவர் தம் ஆடைகளைக் கவர்ந்து அவர்களை அலக்கழிக்கின்றான். இவ்வலக்கழிப்பும் அன்பைப் பற்றியதேயாகும். மங்கையர் உலகிலுள்ள மற்றப் பொருள்களிடம் பற்றுவிடினும், தம் ஆடையில் உள்ள பற்றை விடுதல் அருமையன்றோ? அவற்றைக் கவர்ந்து அவரை அபிமானமற்றவராகச் செய்கிறான் கண்ணன். அப்பற்று நீங்கிய உடனே அம் மங்கையர் அவன் இனிய சொற்களைக் கேட்கவும், அவனைக் காணவும், அவனுக்கு மங்களாசாஸனம் செய்ய வும், எண்டிசையுள்ளாரோடு சேர்ந்து பல்லாண்டு பாடவும் விரும்புகின்றனர்.

"குண்டலம் தாழக் குழல்தாழ நாண்தாழ
எண்டிசை யோரும் இறைஞ்சித் தொழுதேத்த"

— பெரியாழ்வார் திருமொழி, 2-10-2.

எனத் தம் மங்களாசாஸன இயல்பை அம்மங்கையர் மேலேற்றி இத்திருமொழியைப் பல்லாண்டு பாடுவதாக முடிக்கிறார் உலகப் பற்றற்ற பெரியாழ்வார்.

இத்திருமொழியில் கண்ணனுடைய தெய்வச் செயல் களையும், வீரச் செயல்களையும் ஊன்றி நோக்குகிறாள் யசோதை. அவளுக்குக் கண்ணன் தன் குழந்தை என்னும் எண்ணம் சிறிது சிறிதாக நீங்குகிறது. அவளுக்குத் திகைப்பு உண்டாகிறது. தாய்நிலையிலிருந்து விலகுகிறாள். இதற்குக் காரணம், அவன் செய்யும் செயல்களே அல்லவா? அச்செயல்களின் உண்மைப் போக்கை உணர்ந்தவரும், பல்லாண்டிற்குத் தோற்றுவாயான வில்லி புத்தூரில் பிறந்தவருமான பெரியாழ்வார் மங்களா சாஸனம் செய்யாமலிருத்தற்கு இயலுமோ? ஆகவே, ஆழ்வார் இங்குத் தம்மை மறந்து கண்ணன் சேஷ்டி தங்களுக்கும் பல்லாண்டு பாடி நிற்கிறார்.

யசோதை, தனக்குப் பாலூட்ட அஞ்சி நிற்பதைக் கண்ட கண்ணன், இளங்கன்றுகளை மேய்த்துக் காக்கக் கானகம் சென்றான் என்னும் இஃது, ஆன்ம இலக்கணத்தை அறிந்து தம்மைக் காத்துக்கொள்ள வன்மையற்ற சமுசாரிகளைக் காத்தற்பொருட்டுக் கண்ணன் இவ்வுலகில் அவதரித்ததலைக் காட்டாநிற்கும். இவண் வந்துதித்த அவன் படாதன படுகின்றான். அவை ஆழ்வார் மனத்தைப் புண்படுத்துகின்றன. அவற்றால் அவனுக்கு என்ன தீங்கு நேருமோ என்பது இவர் கவலை. ஆதலால், அவற்றைப் போக்க இத்திருமொழியில் கண்ணனுக்குப் பல்லாண்டு பாடுகிறார்.

தான் கானகம் கொண்டு போன கன்றுகள், ஞானக் கலையும் பத்தியும் நிரம்பப்பெற்ற ஆன்மாக்கள் போன்று, பசும்புல் மேய்ந்து, தூய நீரைக் குடித்த இயல்பினால் முகத்தில் உவகை துளும்ப வீடு போதருகின்றன. அவற்றின் பின் கண்ணன் அக்காட்டிலுள்ள மலர் முதலியவற்றால் தன்னை அலங்கரித்துக்கொண்டு, தான் கருதிய காரியத்தைக் குறைவற முடித்த முயற்சியாளன் போன்று, குதுகுலத்துடனும் மிக்க ஆடம்பரத்துடனும் தன்னைத் தான் மறந்தவனாய் அசைந்து அசைந்து வருகிறான். அவன் திவ்வியாத்தும சொரூபத்தின் ஒளி திவ்வியமங்கள விக்கிரகம்வரை பாய்ந்து வெளிப்படுகிறது. அவ்வழகை அக்காலத்தில் யசோதை அறிந்தனளோ, இல்லையோ, அறியோம். அவ்வியல்பைப் பெரியாழ்வார் மனக்கண், தெளியக் காண்கிறது. அவ்வழகிற்கு தம் மங்களா சாஸனம் மட்டும் போதியதாகாது எனக் கருதுகிறார். ஆதலின், அவனுக்கு யாதொரு கெடுதியும் உண்டாகாதவாறு பல்லாண்டு பாடச் சமதமாதிகளும் சீர்மையும் வாய்ந்தவரும், பகையற்றவருமாகிய பல பேரைத் தம்முடன் சேர்த்துக்கொண்டு மங்களாசாஸனம் செய்கிறார்.

ஜீவான்மாக்கள் யாவும் பெண் தன்மை வாய்ந்தவைகள். ஈஸ்வரன் ஒருவனே ஆண் தன்மை வாய்ந்தவன். இதனாலேயே புருஷர்களுள் உத்தமன் என்னும் பொருள் பட இறைவன் புருஷோத்தமன் என்னும் பெயர் பெறுகிறான். சேதனர்களுக்கு ஈசுவரனிடம் ஏற்படும் உண்மைப் பத்தி விஞ்சின், அது காதலாக மாறும். அவ்வமயம் அவர்கள் பெண்மையைப் பெறுகிறார்கள். இங்ஙனம் பக்குவநிலை அடைந்த ஜீவான்மாக்களுக்கு இறைவன் மாட்டுக் காதல் ஏற்படுதல் இயல்பு. இதை நம் ஆழ்வார்களிடம் காணலாம். ஆசை என்பது அழியக்கூடியதும் துன்பந் தருவதுமாயிருப்பினும், இறைவனிடம் ஏற்படும் வேட்கை அழியாத பேரின்பத்தைத் தருவதொன்றாகும்.

கன்றுகளின்பின் கானகம் சென்ற கண்ணன் பலவித அலங்காரத்துடன் பல ஆயர்களின் இடையே போதருகின்றான். அவன் சாயலும், அழகும், கம்பீரமும், அலங்காரமும் இவன் கண்ணன் என்பதை யாவருக்கும் குறித்துக் காட்டுகின்றன. நட்சத்திரங்களின் இடையிலுள்ள சந்திரனையும், மலர்களின் இடையிலுள்ள தாமரையையும் பிரித்தறியாதார் உண்டோ? கண்ணன் தெய்வச் செயலாலும், மற்றவற்றாலும் அவன் உண்மை நிலையை உணர்ந்த பெண்டிர் பலர் உண்டு அவ்வாயர் பாடியில். அவர்கள் கண்ணனிடம் பரமபத்தியைக் கொண்டிருந்தார்கள். அவன் செல்லும் இடமெல்லாம் அவர்கள் மனம் அவனைத் தொடராநிற்கும். உடலைத் தடைபடுத்தலாம். மனத்தைத் தடைபடுத்த முடியுமோ? மத்தள ஓசையுடனும், இன்னும் பல வாத்திய அரவத்துடனும் பெருங்கூட்டம் வருவதை அறிந்த பெண்கள், அது கண்ணன் வரவெனத் தீர்மானித்தார்கள். ஒவ்வொருவராக அவரவர் வாயிற்படியிலும், முற்றத்திலும் வந்து நிரம்பினர். அவன் அழகும் கம்பீரமும் அவர்கள்

கண்ணையும் மனத்தையும் கவர்ந்தன. தம்மைத் தாம் மறந்தவராய், தம் ஆடை வளைகள் நெகிழ்வதையும் அறிந்திலர். அவனையன்றி வேறொருவரையும் பார்த்தல் கூடாது என்பதும், அவனை எடுத்து அங்ஙனமே விழுங்கிவிட வேண்டுமென்பதும் அவர்கள் அவா. அவர்கள் இறைவன் மாட்டுக் கொண்டுள்ள முதிர்ந்த அன்பு நிலை காதலாக மாறியுள்ளது. இந்நிலை யாவருக்கும் அமைவதொன்றோ? ஜீவான்மாவும், பரமான்மாவும் கலக்கும் கலப்பன்றோ இது! தவசிகளுக்கும் ஞானிகளுக்குங்கூடக் கைவரப்படுவதொன்றன்றே! இவ்வுண்மைத் தத்துவத்தை உணராதவர் கேவலம் உடல் போக்கைக் கருதி, 'கண்ணன் ஆயர்பாடிக் கன்னியரோடு வைத்துக்கொண்ட பரிமாற்றம் (கலப்பு) பரிகசிக்கத்தக்கது; அவன் இறை நிலைக்கும் ஏற்றதன்று; உலகப்போக்கிற்கும் பொருத்தமுடையதாக இல்லை. ஆதலின், கண்ணனைக் கடவுள் எனப் போற்றல் அறியாமை,' எனப் பலவாறு பகருவர். இத்தகையார், கண்ணன் தெய்வத்தன்மைதோன்றக் காரியம் செய்த இடங்களையும், பெண்கள் பெருந்தகைமை தோன்ற நம்பிக்கையோடு நடந்து ஆன்ம உய்வை அடைந்த சந்தர்ப்பங்களையும் ஊன்றி நோக்கி உண்மை உணர்வாராக!

இஃதெங்ஙனமாயினும், இங்ஙனம் ஜீவான்மாவும் பரமான்மாவும் ஒன்றுபடக் கலந்து இன்பந் துய்த்த ஓர் உயரிய நிலையைச் சொல்ல வந்த ஆழ்வார், பல்லாண்டு பாடாமலிருப்பரோ? இக்கலப்பு என்றும் அழிவில்லாமல் நீடித்து இருக்கவேண்டுமென்பதன்றோ இவர் பேரவா? அதற்கேற்ப, 'இத்திருமொழியைப் பண்ணோடு பாடுவார் மேலான வைகுந்தம் நண்ணி எம்பெருமானுக்குப் பல்லாண்டு பாடிக்கொண்டிருப்பார்,' எனப் பல்லாண்டை ஒரு சிரிய இடத்தில் நிறுத்தி மங்களாசாஸனம் செய்கிறார்.

இத்திருமொழியில் பெண்மை வாய்ந்த ஜீவான்மாக்க ளோடு ஒன்றி நின்ற பரமாத்துமாவாகிய கண்ணன், இத்திருமொழியில் தன் பரத்துவத்தை நிலைநாட்டக் கோவர்த்தனம் என்னும் மலையைத் தூக்கிப்பிடித்து உயிர்க களுக்கு ஊறு நேராமல் காத்து நிற்கின்றான். தன்னை நம்பி அடுத்த உயிர்களுக்குச் சிறு துன்பமும் அணுகுதல் கூடாது என்னும் அருட்டன்மையன்றோ அவனை இவ்வரிய காரியத்தைச்செய்யத் தூண்டிற்று. ஈதன்றோ உண்மை அருளென்பது! மேற்கொண்ட காரியம் எளிமையுடை யதோ? பெரிய யானைகளும் மற்றும் துஷ்டமிருகங்களும் தங்கள் இல்லமெனவாழும் பெரிய மலையைத் தன் இளஞ் சிறுகையைக் காம்பாகக் கொண்டு ஏழு நாட்கள் தாங்கி நிற்கிறான். அஃதொன்றுமோ, கன்றுகளுக்கும், கறவைக ளுக்கும் புல்லும் தண்ணீரும், இடையருக்கு உணவும் ஊட்டுகிறான். மழை ஒரு துளியும் அவர்கள்மேல் விழுந் திலது. யாவரும் பெரிய அரண்மனையென யாதொரு கவலையுமின்றி மகிழ்ந்திருக்கின்றனர். பெரியாழ்வார் அச்செயலை அங்ஙனமே படமெடுத்துக் காட்டுகிறார். அஃது எதைக் காட்டுகிறது? மக்கள் மற்றத் தேவதை களின் காலில் விழுந்து தமக்கு நன்மையைத்தேடக் கருதும் எண்ணத்தைவிட்டு எம்பெருமானையே தஞ்சமென்று பற்றினால், கண்ணன் அத்தேவதைகளால் உண்டாகும் ஊறுகளையும் ஒழித்து, அவர்கள் விருப்பத்தையும் தலைக் கட்டித் தருவன் என்பதையேயன்றோ? இத்தகையவர் எந்நிலையில் நிற்பர்? அவனுக்குப் பல்லாண்டு பாடும் நிலை யிலேயே அல்லவா? இங்கு ஆழ்வார், ஒருவராலும் இயற்ற முடியாத இக்காரியத்தைச் செய்த கண்ணனுக் கும், அவனிடம் சரணமடைந்து நின்ற இடையருக்கும் சேர்த்துப் பல்லாண்டு பாட விரும்புகிறார். 'இப்பத்தை யும் அநுசந்திப்போர் பரமபதத்தை அடைவர்,' என்றும்,

'அடைந்தவர் அப்பெருமானுக்குப் பல்லாண்டு பாடிக் கொண்டே தம் காலத்தைக் கழிப்பர்' என்றும் இருசாராரையும் மங்களாசாஸனம் செய்கிறார்.

கண்ணன் இனிய ஓசை வாய்ந்த குழலைத் திருவாயிலமைத்து ஊதுகிறான். அவ்வின்ப ஓசை, அன்பு நிறைந்த இடைமங்கையரைக் கண்ணனிடம் கொண்டு சேர்க்கிறது. மற்றெப்போதும் கண்ணனிடம் இத்துணைத் திரள்குவிதல் இல்லை. அவ்வழகிய ஓசையின் வழியே எறும்புச் சாரை என இளமங்கையர் செல்கின்றனர்; இன்பம் துய்க்கின்றனர். பறவைகளும் மிருகங்களும் சூழ்ந்து இன்பமடைகின்றன. கற்களும் மரங்களும் உருகுகின்றன. உயர்திணை அஃறிணை என்னும் வேறுபாடின்றி, யாவும் இன்பமயமாக மாறுகின்றன.

இது காட்டும் நுட்பப்பொருள் மிக அழகியது! எல்லார் உயிரும் ஆசாரியன் மூலமாக இறைவனை அடைதல் வேண்டும். இம்முறையே நற்பயனை அளிப்பதாகும். நேராக இறைவனைப் பற்றி அவனிடம் மிக்க நட்புப் பாராட்டி அவனுக்குத் தொண்டுபூண்டொழுகினும், அத்துணைப் பயனளித்தல் இல்லை. இதற்குத் திருக்கச்சிநம்பிகளே சான்றாவார். இறுதியில் அவருக்கு நலமளித்தது ஆசாரியாபிமானமே அன்றோ? இந்த ஆசாரியன் இடத்திலேதான் இக்குழல் நிற்கிறது. ஆசாரியனாகிய குழல், திருமந்திரம், துவயம், சரமஸ்லோகங்களாகிற இம்மந்திரங்களின் இனிய ஓசையைச் சிஷ்யன் காதில் நுழைக்கிறது. அவற்றைக் கேட்டறிந்த அவன் ஆன்மா, பண்படுகிறது; ஈஸ்வரனை அடைந்து இன்பந்துய்க்கின்றது. இந்நுட்பப் பொருளையே காட்டுவதாகும் இத்திருமொழி. இதற்குப் பல்லாண்டு பாடாமல் இருக்க ஆழ்வாரால் இயலுமோ? கண்ணனையும், குழலையும், ஓசையையும் அவண் திரண்ட

அஃறிணை உயர்திணைப் பொருள்களையும் தீட்டித் தீட்டிக் காட்டிப் பல்லாண்டு பாடுகின்றார் ஆழ்வார்.

இப்பகுதியினால், பெரியாழ்வார் திருமொழியில் பிள்ளைத் தமிழாக அமைந்திருக்கும் சில திருமொழிகள், மங்களாஸாசனமாகிய வாழ்த்து நூல் (பல்லாண்டு) எனக் கூறுதற்கும் இடந்தந்து நிற்கின்றன என்பதை அறிந்தோம்.

இத்துடன் ஆழ்வார் கண்ணனுக்குப் பாடத் தொடங்கிய பிள்ளைத்தமிழை ஒருமுறையில் முடித்துக்கொண்டோம். இனி அதையே வேறு முறையில் உருப்படுத்திக் காட்டுவோமாக.

# II

## 1. கண்ணன் தோற்றம்

இப்பெரியாழ்வாராகிய தாயாருக்கு, முதலில் கொடிய காவலர் சூழ்ந்த மதுரைச் சிறைக்கூடத்தில் தளையிடப் பட்ட பெற்ரோர் மடியில் கிடந்த கண்ணழகும் வீரமும் வாய்ந்த நீலநிறக் குழந்தை ஒன்று காட்சி அளித்தது. அஃது ஓரிமைப் போதில் ஆயர்பாடியில் திருக்கோட்டியூரில் நந்தகோபனது உயரிய இல்லில் சேவை சாதித்தது. சுவர் முற்றும் தங்கமயம்! இரத்தினம் பதித்த வாயில்கள்! அழ கோவியங்கள் அமைந்த வண்ண மாடங்கள்! எங்கும் அசைந்தாடும் தோரணங்கள்! சித்திரப்பதுமையன்ன ஆயர் மகளிர் கூட்டம். நெய், பால், தயிர் சிந்தப்படுகின் றன. யசோதை இல்லத்தின் முற்றம் சேருக்கப்படு கிறது. சிலர் விரைந்து செல்கின்றனர்; சிலர் ஓடுகின்ற னர்; சிலர் பாடுகின்றனர்; சிலர் ஆடுகின்றனர்; சிலர் விழுகின்றனர். இத்தனைக் கோலாகலம் நடைபெறுகின் றனவேயல்லாமல், இவற்றிதற்குக் காரணப் பொருளை உடனேகாணும் பாக்கியத்தை எவரும் பெற்றிலர். "மகவு எங்கே? யசோதை இளஞ்சிங்கம் எங்கே? குழவி எவ ணுள்ளது?" என்றே யாவரும் விரைந்து கேட்டுக்கொண் டிருக்கின்றனர்: அக்குழவியைக் கண்ட பெரியாரோ, "இவனை ஒப்பார் ஒருவருமிலர். இவன் உலகத்தையே ஆளுவான்," எனப்பகர்கின்றனர். குளிப்பாட்டுகின்ற வள் அவன் வயிற்றுள் ஏழு உலகங்களையும் காண்கின் ருள்; மற்றவர், 'இவன் ஆயர்புத்திரனல்லன்; அருந்தெய் வம்!' எனக் கொண்டாடுகின்றனர்.

"வாயுள் வையகம் கண்ட மடநல்லார்,
'ஆயர் புத்திர னல்லன் ; அருந்தெய்வம் ;
பாய சீருடைப் பண்புடைப் பாலகன்
மாயன்' என்று மகிழ்ந்தனர் மாதரே."

— பெரியாழ்வார் திருமொழி, 1-1-7.

## 2. கண்ணன் அவயவங்களின் அழகு

இளங்குழவி தன் காற்பெருவிரலை வாயில் வைத்துச் சுவைத்துக்கொண்டிருக்கிறது. பத்து விரல்களும் ஒன்றிற் கொன்று பொருத்தமாய் அமைந்திருக்கின்றன. இரணியனை இருத்திப் பிளந்த தொடைகள் உருண்டு திரண்டிருக்கின்றன. மருங்குல், உந்தி, வயிறு, மணிப்பூண் திகழும் திருமார்பு, வீரத்தோள்கள், சங்க சக்கரங்களை மறைத்துக்கொண்டிருக்கும் கரங்கள், உருட்டிய வெண்ணெய் உருண்டை என உலகம் முற்றையும் விழுங்கிய வாய், அழகிய நாசி, கருணை நிறைந்த கண்கள், புருவம், பரமன் என்பதைக் காட்டும் நெற்றி, கறுத்த குழல் முதலியன உலகச் சிறுவர்களைக்காட்டிலும் மிக அழகுபட அமைந்துள்ளன. இவற்றைக் காணுமாறு பெரியாழ்வாராகிய தாயார் மற்றப் பெண்களைக் கூவிக்கூவி அழைக்கின்றார். குழவியின் அவயவச் சீர்மைகள் இவர் ஒருவராகவே இருந்து இன்பந்துய்க்க இடந்தந்தில. தமக்குக் கிடைத்த சுவையுள்ள நற்பொருளைத் தன்னலங் கருதாத் தகைமையர், தாமே தனித்திருந்து உண்ண விரும்புவரோ? தாமின்புறுவதை உலகும் இன்புற விழைவதன்றோ அறிஞர் கொள்கை! அங்ஙனமே ஆழ்வாராகிய அன்னையார் தம்மொத்த ஆயர் பெண்களை வந்து காணுமாறு கூவுகிறார். இவண் ஆண்மக்கள் அழைக்கப்படவில்லை. இறைவன் இயற்கை வனப்புகளை உள்ளபடி கண்டு உவத்தற்கும் பெண்மகளிரே உரியவர் போலும்!

" மைத்தடங் கண்ணி யசோதை வளர்க்கின்ற
செய்த்தலை நீல நிறத்துச் சிறுபிள்ளை
நெய்த்தலை நேமியும் சங்கும் நிலாவிய
கைத்தலங் கள்வந்து காணீரே! கனங்குழை யீர்வந்து காணீரே!"

— பெரியாழ்வார் திருமொழி, 1-2-12.

## 3. கண்ணனைத் தொட்டிலிடுதல்

இத்துணைச் சிறப்புகள் அமைந்த குழந்தை வீற்றிருக்கும் இடத்தை விட்டு நீங்க ஆழ்வார் மனம் எழுமா? இவர் தம் கண்ணும் மனமும் அவ்விடத்திலேயே ஆழ்ந்து விட்டன. இன்னும் என்னென்ன சிறப்புகள் நடைபெறுகின்றன என்பதைக் காண இவர் நெஞ்சம் விழைந்தது. கண் கொட்டாமல் நோக்குகின்றார் ஆழ்வார்.

ஒவ்வொரு வீட்டிலும் உள்ள ஆயர் மகளிரிடை ஒப்பற்ற குதுகுலம் பரவியுள்ளது; அளவற்ற ஆனந்தம் பொங்கி வழிகிறது. பெட்டியில் மறைந்து கிடக்கும் அணிகளும் ஆடைகளும் அவர்களை அலங்கரிக்கின்றன. ஆடவர்களிடமும் ஓர் ஆரவாரம் தோன்றுகிறது. விடியற்காலையிலேயே ஆற்றங்கரையில் பெருங்கூட்டம் திரள்கிறது! யாவரும் ஆற்றில் மூழ்கி மூழ்கி நீரைக் கலக்குகின்றனர்; அவர்கள் இடையில் மடி வேஷ்டிகள் அமைகின்றன. விடியற்காலையிலேயே ஒவ்வொரு வீட்டிலும் பெருமான் திருவாராதனம் கண்டருளுகிறான்; பட்சணத்தோடுங் கூடிய அன்னத்தை அமிசை செய்கிறான். தட்டுத் தட்டாகப் பொருள்களை ஏந்திக்கொண்டு மங்கையர் வீதியில் செல்ல, ஆண் மக்கள் பின் செல்லுகின்றார்கள். சிறு குழந்தைகள் முதல் தடியூன்றிய முதியவர் வரை, யாவரும் திரள் திரளாக நடக்கின்றனர். 'எங்குப் போகின்றனர்? ஊரில் என்ன கொண்டாட்டம்? யார் வீட்டில்

விசேஷம்?' என்பதை அறிய ஒருவரும் ஆர்வங்கொள்ள வில்லை. ஏன்? கண்ணன் பிறந்தது தொடங்கி நந்த கோபன் இல்லத்தில் நிகழும் சிறப்புகளையும் இன்று நிகழ இருக்கும் தொட்டிலிடும் விழாவையும் யாவரும் அறிவர். ஒவ்வொருவருக்கும் தத்தம் வீட்டில் புதிய மகன் பிறந்த தாகவே களிப்புக் கரை கடந்து சென்றது.

இப்பெருங்கூட்டத்திற்கு நந்தகோபன் பெரிய அரண்மனையும் இடஞ்சாலாதென்பது அவர்கட்குத் தெரியும். ஆதலின், வெளியிடத்தில் அழகான பந்தர் ஒன்று இடப்பட்டுள்ளது. அப்பந்தரில் அனைவரும் போய் இருக்கின்றனர். பந்தரின் நடுவில் வயிரமும் மாணிக்கமும் இடையிடையே இழைத்த தொட்டில் ஒன்று தொங்கவிடப்பட்டிருக்கிறது. சங்கிலிகளும் பொன் மயமாகவே காணப்பட்டன. அதனுடன் மலரினுலாகிய அலங்காரமும் அமைந்தது. கண்ணன், மன்னன் மகனல்லனே! பன்னாட்கள் மகவு இல்லாதிருந்த குறையைத் தீர்க்கத் தோன்றியவனல்லவா? அத்தொட்டிலில் சித்திரப்பாடமைந்த பஞ்சணை உள்ளது. அவ்வணையில் கறுத்த நிறம், உருண்டு திரண்ட உருவம், புன்சிரிப்புத் தவழும் பவளவாய், அருளொழுகும் கண்கள், யாவர் மனத்தையும் கவரும் முகம் ஆகிய இவை வாய்க்கப்பெற்ற ஓர் அழகிய குழந்தை, கையையும் காலையும் ஆட்டி ஆட்டி விளையாடிக்கொண்டிருக்கிறது. வருபவர் அனைவரும் தொட்டிலிடம் சென்று குழந்தையைப் பார்த்துவிட்டு முகமலரப் புன்சிரிப்புடன் தத்தம் இடங்களில் அமருகின் றனர். ஆடவரை ஆடவரும், பெண்டிரைப் பெண்டிரும் வரவேற்கின்றனர்.

அவ்வமயம் தன் நன்றியைக் காட்ட நான்முகன் அனுப்பிய மணிகள் தொங்கவிடப்பட்ட தங்கத் தொட் டில் ஒன்று அவண் வந்திறங்கிற்று. அவ்வீடு முழுதும்

சோதி மயமாகியது. உடனே அக்கருங்குழவியைப் பழந் தொட்டிலிலிருந்து எடுத்து அதில் வளர்த்தினர் ஆயர் மகளிர். குழவியின் கருநிறமும் பொன்னிறமாய் மாறி ஒளி வீசிற்று. அவ்வொளியை இமை கொட்டாமல் நோக்க ஆழ்வாரால் இயலவில்லை. இவர் கண்களை மூடி மூடித் திறந்தார். அந்நாளில் மற்றத் தேவர்கள் கண்ணன் அன்பைப் பெறுதற்பொருட்டும், தங்கள் மகிழ்வைத் தெரிவிக்கக் கருதியும் சில பொருள்களைப் பரிசாக அவனுக்கு அனுப்புகிறார்கள் என்கிறார் பெரியாழ்வார். அப்பொருள்கள் அவரவர் தகுதியையும், போக்கையும், பணிவையும் காட்டுகின்றன. ஒவ்வொருவர் பொருளையும் குறித்துக் கூறிக்கூறிக் குழவியைத் தாலாட்டுகிறார் விஷ்ணு சித்தர்.

திருமகளார், திருத்துளவத்தையும், கற்பகத்தின் மணம் நிறைந்த மலரையும் சேர்த்துத் தம் திருக்கையினாலேயே மாலை தொடுத்துச் செல்லவிடுகிறார்; மண்மகளார், கச்சு, நாந்தகம் (கத்தி,) பொன் வளைகள், சுட்டி, திருவடிகளில் சார்த்தும் பொன்னாலாகிய பூக்கள் முதலியன அனுப்புகிறார். திருமகளாரோ, எம்பெருமானுக்கு மிக்க விருப்பந் தருவனயாவை? மணியா, பொன்னா, அணிகளா? அன்றன்று. யாவற்றிலும் உயர்ந்ததாக அவன் விரும்புவது திருத்துளவமே! அதைச் சூட்டிக்கொள்ளுங்கால் அவன் மிக்க அழகுடன் ஒளிருவான். சேதனர் தனக்குச் சேஷபூதர் என்னும் உண்மையை உறுதிப்படுத்த அவன் அணிந்து புறப்படுவது திருத்துளவ மாலையே! அன்றியும், நந்தகோபன் மனையில் கற்பகமலர் கிடையாதன்றோ? ஆதலின், இவ்விரண்டு மலர்களையுமே யான் விடுத்து அவனை உவக்கச் செய்வேன்," எனக் கருதினர். அன்னையாரின் ஆராய்வும் அன்பும் என்னே! நில மகளாரோ, பகைவருடன் எதிர்த்துப் போர் புரியுங்கால்

இடுப்பில் வரிந்து கட்டும் கச்சும், பகைவரை ஓரே வீச்சில் வீழ்த்தும் கத்தியும், அழகிய தோள்களை விளக்கும் பொன் வளையும் அனுப்பினர். இவ்வம்மையார் இப் பொருள்களைத் தேர்ந்தெடுத்தனுப்பியதன் கருத் தென்னை? ஆண் மக்களுட்சிறந்த அந்நம்பியை வீரச் செயலுள் நுழைவித்தற்கன்றோ? மண்மகள் வீரமகளல் லளா? வீரமகள் தன் நாயகனுக்கு எதை ஊட்டுவாள்? எவற்றைப் பரிசாக அளிப்பாள்? வீரத்தையும், வீரப் பொருள்களையுமே அல்லவா? இந்நுட்பத்தை நன் குணர்ந்து இயம்பிய பெரியாழ்வாரின் நுட்பமதியே மதி! வந்த பரிசுகள் யாவரும் காண அவண் வைக்கப்பட்டன. கீத வாத்தியங்கள் முழங்கப்பட்டன. சிறுமியர் கும்மி அடித்தனர். பெரியார் பிள்ளைக்குப் பல்லாண்டு பாடி மங்களாசாஸனம் செய்தனர். சுமங்கலிகள் மங்களம் பாடினார்கள். விருந்தினர் விருந்துண்டு வீடு திரும்பினர். கண்ணனைத் தொட்டிலிடும் விழா மிக்க விமரிசையுடன் நிறைவேறிற்று.

"மாணிக்கங் கட்டி வயிர மிடைக்கட்டி
ஆணிப்பொன் னால்செய்த வண்ணச் சிறுதொட்டில்
பேணி யுனக்குப் பிரமன் விடுதந்தான்
மாணிக் குறளனே! தாலேலோ!
வையம் அளந்தானே! தாலேலோ!"

"கானார் நறுந்துழாய் கைசெய்த கண்ணியும்
வானார் செழுஞ்சோலைக் கற்பகத்தின் வாசிகையும்
தேனார் மலர்மேல் திருமங்கை போத்தந்தாள்
கோனே! அழேலழேல் தாலேலோ!
குடந்தைக் கிடந்தானே! தாலேலோ!"

"கச்சொடு பொற்சுரிகை காம்பு கனகவளை
உச்சி மணிச்சுட்டி ஒண்டாள் நிரைப்பொற்பூ
அச்சுத னுக்கென் றவனியாள் போத்தந்தாள்

கச்சு முலையுண்டாய் ! தாலேலோ !
நாராயணா அழேல் தாலேலோ !''

— பெரியாழ்வார் திருமொழி, 1-3-1,7,8.

## 4. அம்புலியை அழைத்தல்

முழுச்சந்திரன் தன் பதினாறு கலைகளுடன் வான வீதியில் தவழ்கிறான். பால் போன்ற நிலவு வீதி முற்றும் ஒளி வீசுகிறது; நிலா முற்றங்கள் மிக அழகாய்த் திகழ்கின்றன; அரண்மனைகளிலுள்ள சந்திரகாந்தக் கற்கள் குளிர்ந்த நீரைக் காலுகின்றன. மரங்களின் கீழெல்லாம் மதி, விட்டுவிட்டு ஒளிர்கின்றது. சில சிறுமிகள் நிலாப் பாட்டுப் பாடுகின்றார்கள். சிலர் ஒரு புறம் சிறு வீடுகளைக் கட்டிப் பதுமைக்கு மணஞ் செய்கின்றனர்; சிலர் கருங்கல் ஆட்டம் ஆடுகின்றனர். ஒரு புறம் சிறுவரின் குடுகுடு ஆட்டம். ஒரு புறம் காலை நீட்டி உட்கார்ந்து ஏதோ பழைய கதைகளைப் பேசிக்கொண்டிருக்கும் பாட்டிமார் கூட்டம் இருக்கிறது. ஒரு தாய் சிறு குழவியை ஒக்கலையில் வைத்துக்கொண்டு சந்திரனைக் காட்டிக் காட்டி உணவு ஊட்டுகிறாள். ஒரு புறம் மணமான பெண்களின் வம்பளப்பு! ஒரு புறம் ஆடவரின் சீட்டாட்டம்! ஓரிடம் வாலிபரின் வாதங்கள்! ஒருபக்கம் கற்றோர் கலை ஆராய்ச்சி! சில வீடுகளின் வாயிலில் சிறு பிள்ளைகள் உணவு உண்கின்றார்கள். சிலர் முழுச் சந்திரனுக்குப் பொங்கலிட்டு, பழம், தேங்காய் வைத்துத் தூப தீபங்கள் காட்டி வணங்குகின்றனர். இங்ஙனம் ஆயர் பாடியில் அப்பௌர்ணமி நாள் மிக ஆனந்தமாகக் கழிந்துகொண்டிருக்கிறது.

இதற்கிடையில், ஒரு நீலநிறக் குழந்தையின் உடல் முழுதும் அணிகலன்களால் மறைக்கப்பட்டிருக்கிறது.

குழவி தவழுந்தோறும் அதன் நெற்றியில் சுட்டி அசைகிறது. இடையிலுள்ள சதங்கைகள் ஒலிக்கின்றன. அம்மகவு மண்ணைத் துழாவித் துழாவி வருகிறது. அது சின்னஞ்சிறு கரங்களைக் காட்டிக் காட்டித் தன் மழலைச் சொற்களால் சந்திரனை அழைக்கின்றது. ஆனால், சந்திரன் இச்சிறுவனிடம் வந்தானில்லை. ஆகாயத்திலேயே அவன் இறுமாந்து உலாவிக்கொண்டிருக்கிறான். தம் இளஞ்சிறுன் பெருமை இன்னதென உண்மையாக உணர்ந்த பெரியாழ்வாராகிய தாயார், 'அந்தோ! உன்னை அழைத்து அழைத்து என் மகன் கை வலிக்கிறதே! நீ குழந்தையின் அருமை தெரியாதவனு, அன்றிச் செவிடனு? என்மகன் முகத்தைப் போன்று உனக்கு அழகு அமையாமையின், நாணத்தினுல் மேகத்தில் மறைகின்றனையோ? அங்ஙனம் செய்தல் உனக்குத் தகுதியன்று! இவனைச் சிறு குழவி என நினையாதே! பண்டு ஆலிலையில் கண் வளர்ந்த கண்ணியன் இவனே. தன் தண்டு, சக்கரம், சங்குகளை மறைத்துக்கொண்டுள்ளான்; இவன் மேலெழுந்து உன்னை பிடித்துக்கொள்ளினும் கொள்வான். ஆதலின், மாவலியிடம் மூவடி மண் இரந்துபெற்ற இவன் சொற்படி நட," எனச் சந்திரனுக்கு அறிவு புகட்டுகிறார்.

* "பாலக னென்றுபரி பவம்செய்யேல், பண்டொருநாள்
ஆலி னிலைவளர்ந்த சிறுக்கன் அவனிவன்
மேலெழப் பாய்ந்து பிடித்துக்கொள்ளும் வெகுளுமேல்
மாலை மதியாதே மாமதீ! மகிழ்ந்தோடிவா."

—பெரியாழ்வார் திருமொழி, 1-4-7.

# 5. செங்கீரை ஆடுதல்

தாய்மார் முதலானுர், பிள்ளைகளை அசைந்தாடச் செய்வதைச் 'செங்கீரை ஆடுதல்' என்பர். சிறுவன் அப்போதுதான் எழுந்து நிற்கிருன். அவனுல் உறுதியாக நிற்க முடியவில்லை. அவன் உடல் அசைகின்றது; கரங்கள் நடுங்குகின்றன; முன்னும் பின்னும் ஊசலாடுகின்ருன் பிள்ளை; தன்னைச் சரியானபடி நிறுத்திக் கொள்ள முயல்கின்ருன்; அவனுல் ஆகவில்லை. உடனே முத்தன்ன பற்கள் வெளிக்காணச் சிரிக்கின்ருன். இதைக் கண்ட இள மங்கையரும் நகைப்புக் கொள்ளுகின்றனர். அத்தோற்றம், யமுனை நீரையும், சுற்றுப்புறத்தையும் நஞ்சாக்கி உயிர்களை அழித்த காளியன் முடியில் தன் திருவடிகளை வைத்து ஆடுவது போலக் காணப்பட்டது. அதை நோக்கிய பெரியாழ்வாராகிய தாயார் கண்ணனைக் கையிற் பற்றி முன்னும் பின்னும் ஆட்டுவிப்பதாகப் பாவிக்கிருர்.

"காயா மலர்நிறவா! கருமுகில் போலுருவா!
கானக மாமடுவில் காளிய னுச்சியிலே
தூய நடம்பயிலும் சுந்தர என்சிறுவா!
துங்க மதக்கரியின் கொம்பு பறித்தவனே!
ஆய! மறிந்துபொரு வான்எதிர் வந்தமல்லை!
அந்தர மின்றியழித் தாடிய தாளிணையாய்!
ஆய எனக்கொருகா லாடுக செங்கீரை!
ஆயர்கள் போரேறே! ஆடுக ஆடுகவே!"

—பெரியாழ்வார் திருமொழி, 1-5-6.

## 6. சப்பாணி கொட்டுதல்

அழகிய பருத்த குழந்தை கூடத்தில் அமர்ந்துள்ளது. பவழமன்ன வாயில் முத்துப்போன்ற பற்கள் ஒளிர்கின்றன. அரையில் பொன் அரைஞாணும், கால்களில் மாணிக்கம் இழைத்த கிண்கிணியும் அமைந்துள்ளன.

அக்குழவியின் ஒரு கை மாவலி இடத்து மூன்றடி மண்ணுக்காக நீரேற்றது; ஒரு கை அன்பர்க்காகக் கோலும், பரிமாவின் கடிவாளக் கயிறும் தாங்கியது; ஒரு கை கடலைக் கலக்கச் சரந்தொட்டது; ஒரு கை இலங்கை அரக்கர் அழிய அம்பெய்தது; ஒரு கை இரணியன் மார்பைப் பிளந்தது; ஒரு கை பாற்கடலைக் கடைந்து அமுதம் கொணர்ந்தது; இத்துணைக் கைகளால் தாய் தந்தையர் மடியின்மேல் மாறிமாறி இருந்து சப்பாணி கொட்டுகிறான் கண்ணன்.

"தாரித்து நூற்றுவர் தந்தைசொற் கொள்ளாது
போருய்த்து வந்து புகுந்தவர் மண்ணுளைப்
பாரித்த மன்னர் படப்பஞ் சவர்க்கு, அன்று
தேருய்த்த கைகளால் சப்பாணி; தேவகி சிங்கமே! சப்பாணி."

—பெரியாழ்வார் திருமொழி, 1–6–6.

## 7. தளர்நடை நடத்தல்

குழவிகள், ஓர் அடி வைத்துச் சிறிது சோர்தல், இன்னுமோர் அடிவைத்துச் சிறிது சோர்தல், இங்ஙனம் ஓர் அடிக்கும், இன்னோர் அடிக்கும் சில விநாடிகள் கழிய அரிதாகத் தம் கால்களைத் தூக்கி வைத்தலைத்தான் தளர்நடைப் பருவம் எனப் பகர்வர். இப்போது, நம்மை அறியாமலே ஓடுதல், விரைந்து நடத்தல் முதலியவற்றைச்

செய்யும் நாம் ஒவ்வொருவரும் முன் குறித்தவாறு நடந்து பழகியவரே ஆவோம்!

ஆயர்பாடியில் தோன்றிய கண்ணனையும் அப்பருவம் அணுகியது. கண்ணன் மதங்கொண்ட களிறு போன்று, தன் அழகிய சிறிய பாதங்களை மெல்லெனத் தூக்கித் தூக்கி வைக்கிருன். அந்நந்தகோபன் அரண்மனையில் புதிதாக நடை பழகும் மத்த கஜம், கண்ணன் ஒருவன் மட்டுமல்லன்; அவன் முன்தோன்றிய பலராமன் ஒருவனும் உண்டு. வெள்ளிமலை கால்கொண்டு நடத்தல் போன்று, வெண்ணிறம் வாய்ந்த அப்பலராமன் முன் சிறிது விரைந்து செல்ல, கருமலை போன்ற கண்ணன் ஒவ்வோர் அடியாக எடுத்து எடுத்து வைத்து, அவனைப் பின் தொடர்கின்ருன்.

இடையில் கட்டிய கிண்கிணியும், சங்கிலியும் கறவையின் கழுத்தில் கட்டிய மணியொலிபோல ஒலிக்கின்றன. கார்முகிலில் மின்னல் ஒளிர்வது போன்று அவன் கறுத்த கண்டத்தில் காறை துலங்குகிறது. கடலில் எழும் சந்திரனென அவன் நெற்றியில் சுட்டி தொங்குகிறது. மலர்ந்த தாமரையில் காணப்படும் தேன் துளியென்ன அவன் சிவந்த வாயினிடமிருந்து அமுத ஊறல் துளித் துளியாகச் சொட்டுகின்றது. அவன் இரு பாதங்களிலும் அமைந்திருப்பன யாவை? சங்க சக்கர ரேகைகளாகும். இச்சீர்மையை அக்கால மக்கள் உணர்ந்தார்கள் இல்லை. அவன்றன் திருவடி ஊன்றிய இடமெங்கும் அவ்விலச்சினைகள் அமையப்பெற்றன. நகைப்புடன் சிறிது சிறிது விரைந்து வந்து பெற்ருேருக்கு முத்தமளிக்கிருன். இச்செய்கை பத்தனை மகிழ்விக்கின்றது. இந்நடை எதைக் காட்டுகிறது? தம் அன்பருக்குத் தீமை புரியும் பகைவர் தலைகளின்மீது அடியிட்டு மிதிப்பதையேயாகும்.

" கன்னற்குடம் திறந்தாலொத் தூறிக்
கணகண சிரித்து வந்து
முன்வந்து நின்று முத்தந்தருமென்
முகில்வண்ண னன்திரு மார்வன்.
தன்னைப் பெற்றேற்குத் தன்வாயமுதம்
தந்தென்னைத் தளிர்ப்பிக் கின்றான்
தன்னெற்று மாற்றலர் தலைகள் மீதே
தளர்நடை நடவானோ!"

—பெரியாழ்வார் திருமொழி, 1-7-4.

## 8. தாயார் தம்மைத் தழுவிக்கொள்ள அழைத்தல்

(அச்சோப் பருவம்)

சிறு குழவிகள் தத்தித்தத்தி நடக்கும் நடையில் சின்னாள் பழகியதும் சிறிது செம்மையாக நடக்கத் தொடங்குகின்றன. அந்நடையைக் கண்ட தாயார், தம் மகன் இன்னும் சிறிது விரைவாக நடை பயில வேண்டுமென விரும்புதல் வழக்கம். பெரும்பான்மையும் கண்ணனை உலகக் குழவியாகவே கருதிய யசோதையின் நிலையில் நின்று, கண்ணன் இளமை விளையாட்டுகளைத் தம் மனக்கண்முன் நிறுத்தி உவந்த பெரியாழ்வார், தளர் நடை கொண்ட கண்ணனை விரைவாகச் செல்ல வைக்கிறார். 'அச்சோ' என்பது சிறு பிள்ளைகளைத் தழுவிக் கொள்ள வேண்டுமென விரும்புவார் மகிழ்வினால் செய்யும் ஒலிக்குறிப்பு. இச்சொல், 'என்னை வந்து தழுவிக் கொள்,' எனக் கைகாட்டி அழைப்பதைக் குறியாநிற்கும்.

குறுநடை நடக்கும் குழவி ஒன்று ஆழ்வார் எதிரில் நிற்கிறது. உருண்டு திரண்ட அதன் உருவத்தில்

இடையிலும், காலிலும் பொன்னிறம் பொலிவுறுகிறது. 'இது மின்னோடுங்கூடிய மேகமோ!' என மயங்குகிறார் பெரியாழ்வார்; இவர் கண்ணனை நோக்கி, 'ஓடி வந்து என்னை அணைத்துக்கொள்,' என அழைக்கிறார்.

"பொன்னியற் கிண்கிணி சுட்டி புறங்கட்டி
தன்னிய லோசை சலன்சல னென்றிட
மின்னியல் மேகம் விரைந்தெதிர் வந்தாற்போல்
என்னிடைக் கோட்டரா அச்சோ அச்சோ !
எம்பெரு மான்வாராய் அச்சோ அச்சோ !"

— **பெரியாழ்வார் திருமொழி, 1-8-1.**

கண்ணன் சிறு குழந்தை. அவன் கேசம் சிறிது வளர்ந்திருக்கிறது. அஃது இன்னும் முடிகூடிற்றிலது. அச்சுருண்ட கேசம் கண்ணன் செவ்வாயின் இனிமையை நுகரக் குச்சுக்குச்சாய் வாயினிடம் வந்து சூழ்ந்து கொள்ளுகிறது; இக்காட்சி ஆழ்வாருக்குப் பெருவிருந்தளிக்கிறது.

"தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்."

என்பதற்கேற்ப, இக்கோலத்தை ஓர் உவமானத்தால் நம் கண்முன் நிறுத்தக் கருதும் ஆழ்வாரின் அன்பே அன்பு! அழகிய செந்தாமரை மலர் இதழ்களை விரித்துள்ளது. தேன் நிறைந்துளது. அதில் வண்டுகள் பலவும் வந்து மொய்க்கின்றன. இங்ஙனம் ஓர் ஓவியம் வரைந்து காட்டுகிறார் ஆழ்வார். என்ன உவமை! என்ன உவமை!

இன்னும் இம்மகவைக் கேவலம் உலக மகவாகவே விட்டுச்செல்ல ஆழ்வார் விரும்பிற்றிலர். தாயை வந்து தழுவிக்கொள்ளும் கரங்கள் வெறுங்கரங்களா? அல்ல

அல்ல. சங்கு, வில், தண்டு, சக்கரங்களைத் தாங்கினவை களல்லவா? அக்கைகளினுல் தம்மைத் தழுவிக்கொள்ளு மாறு குழந்தையை விளிக்கிருர்.

“ செங்கமலப் பூவில் தேனுண்ணும் வண்டேபோல்
பங்கிகள் வந்துன் பவளவாய் மொய்ப்ப
சங்குவில் வாள்தண்டு சக்கர மேந்திய
அங்கைக ளாலேவந் தச்சோ அச்சோ !
ஆரத் தழுவாய்வந் தச்சோ அச்சோ !”

— பெரியாழ்வார் திருமொழி, 1-8-2.

மூன்று காலத்தையும் உணர்ந்த முனிவர் இக்குழ வியைக் காணுங்கால் மனத்தை எங்குச் செலுத்துவர்? இம்மகவின் பெருமையிலும் வீரத்திலுமே அல்லவா? ஆ! என்ன ஆச்சரியம்! சின்னஞ்சிறுவனுய்க் காணப்படு கிருன்; ஒன்றுந் தெரியாதவன் போன்று நடிக்கிருன். இவன் உண்மையை உணர யாரால் இயலும்! மாயச் சிறுவன் இவன்.

“ போரொக்கப் பண்ணியிப் பூமிப் பொறைதீர்ப்பான்
தேரொக்க வூர்ந்தாய் செழுந்தார் விசயற்காய்க்
காரொக்கு மேனிக் கரும்பெருங் கண்ணனே !
ஆரத் தழுவாய்வந் தச்சோவச்சோ !
ஆயர்கள் போரேறே யச்சோ வச்சோ !”

— பெரியாழ்வார் திருமொழி, 1-8-6.

# 9 முதுகைத்தழுவல்

## (புறம்புல்கல்)

முன் பகுதியில் தன் சிறு குழவியைப் பார்த்து மலர்ந்த முகத்துடன் தன் கையைக் காட்டி, 'என்னைத் தழுவிக்கொள்,' எனக் கூறிய தாய்க்கு இங்கு ஓர் எண்ணம் தோன்றுகிறது. "குழந்தை குட்டையாய் இருக்கிறான் ; நாம் நிற்பின், நம் இரண்டு கால்களைத்தாம் வந்து கட்டிக்கொள்ளுவான். அவ்வின்பத்தை நெடுநேரம் துய்த்தற்கியலாது. ஆதலின், நாம் தரையில் உட்கார்ந்து நம் முதுகைத் தழுவிக்கொள்ளுமாறு இவனை அழைப்போம்," எனக் குழந்தையை விளிக்கிறாள். இக்குறிப்புத்தான் 'புறம் புல்கல்' என்பது. (புறம்-முதுகு, புல்கல்-தழுவல்).

குழந்தைகளுக்குப் பிறர் கால்களையும், முதுகையும் கட்டிக்கொள்ளுவதில் மிக்க மகிழ்ச்சி. அவ்வாறு தழுவிக் கொள்ளச் சமயம் நேர்ந்துழிக் குழவிகள் தம் கையை வீசிக் கொண்டு காலைக் குறுகுறுவென்று தூக்கி வைத்துப் புதியவாக முளைத்தெழுந்த இரண்டொரு பற்கள் தோன்றச் சிரித்துக்கொண்டே வருவார்கள். இதைக் காணுங்கால் பெற்றார் அடையும் மகிழ்ச்சி அளவிடற்பாலதோ! குழவி ஓடிவரும்போதே தாய் தன்னை மறந்து மயங்கி மகிழ்ச்சியில் ஆழ்ந்து நிற்கிறாள். அம்மகவு தன்னைத் தழுவி நிற்குங்கால் அவள் கொள்ளும் உவகைக்கு எதை உவமிப்பது! அதற்கு ஒப்புப்பொருள் வேறொன்று இருந்தாலன்றோ சான்று காட்டலாம்! தன் குழந்தையின் உடல் தன்மீது பொருந்துவதைப் பேரின்பமாகவன்றோ தாய் கருதுகிறாள்! 'மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம்,' எனத் தெய்வப் புலவரும் சான்று பகர்கின்றனரே! இது முன் கூறிய அச்சோப்பருவத்தின் தொடர்பாகும்.

ஆலவிதை மிகச்சிறிது. அதன் உண்மையைக் காணும் விரிந்த அறிவற்றார், அஃது ஓர் அற்பப்

பொருளென்றே கருதுவர். தாவர ஞானம் வாய்ந்தவரோ, அதைக்கண்டு வியக்கின்றார்; அதில். தழைத்து வளர்ந் தோங்கிய ஆலமரத்திலுள்ள வேரும், தண்டும் அடங்கி இருத்தலை அவர் அறிகின்றார்; இயற்கைத் தத்துவத்தைப் பேச முற்படுகிறார். அங்ஙனமே, யாவருக்கும் சின்னஞ் சிறுவனாய்க் காணப்படும் கண்ணன், ஆழ்வாருக்குப் பெரும் பொருளாய்த் தோன்றுகிறான். இதனினும் உயர் பொருள் ஒன்றிருப்பதாக இவர் நினைந்திலர். "இப்பொருளே உலக உயிர்களை உய்விப்பது! ஆன்மாக்களுக்கு அரணாய் நிற்பது! அவற்றை உயர் பதவியில் ஏற்றுவது! சரண ளிப்பது!" எனக் கருதுகிறார் பெரியாழ்வார். இங்கு இவருக்கு, பார்த்தன் கண்ணனிடம் அடைக்கலம் புகுந்த செய்தி நினைவிற்கு வருகிறது. அருச்சுனனைக் காப்பதாக உறுதிமொழி தந்த கண்ணன், தன் அன்பன் வெற்றியுற எதைமேற்கொள்ளுகிறான்? கீழ்ப்பட்டவன், பணியாளன், பரந்த ஞானமற்றவன் இயற்றும் தேரோட்டும் இழி தொழிலையன்றோ? இத்துணைப் பரந்த எண்ணம் யாருக்கு உண்டாகும்? உயிர்களைக் காக்கும் கடமையைக் கைக்கொண்ட திருமால் அவதாரமாகிய கண்ணனுக்கன்றி மற்றையவருக்கு இஃது அமையுமோ? முக்காலத்தையும் அறியும் ஞானியராகும் பெரியாழ்வாருக்குக் கண்ணன் பருவமட்டுமா இனிமையைத் தருவதாய் உள்ளது! அன்றன்று. அவன் பிற்காலச் செயல்களும் இன்பத்தை ஊட்டாநிற்கின்றன. அந்த இன்பத்தை உடலளவும் துய்க்கக் கருதிய பெரியாழ்வார், அவனை முதுகோடு அணைத்துக்கொள்ள அழைக்கிறார்.

"நாந்தக மேந்திய நம்பி! சரணென்று
தாழ்ந்த தனஞ்சயற் காகித் தரணியில்
வேந்தர்க ளுட்க விசயன் மணித்திண்டேர்

ஊர்ந்தவ னென்னைப் புறம்புல்குவான்
உம்பர்கோன் என்னைப் புறம்புல்குவான்."
— பெரியாழ்வார் திருமொழி, 1-9-4.

நீல வட்டிலில் முத்துகள் நிறைத்தது போன்று வாயில் பற்கள் காணப்படுகின்றன. அவ்வாயிலிருந்து வெளிப்படும் புல்லாங்குழலோசையின் இனிமை, மறையவரையும், இமையவரையும் வசப்படுத்துகின்றது. காதலி சத்திய பாமை விரும்பிய கற்பகத்தரு அவள் முற்றத்துள் காணப்படுகிறது. இளமை, காதல், வீரம் யாவற்றையும் ஒருங்கே கலந்து இன்பந் துய்க்கிறார் ஆழ்வார். இப்புறம் புல்குதலைச் சிறிது ஆழ்ந்து நோக்கின், ஆழ்வார் இதில் எத்துணை இன்பத்தைத் துய்க்கின்றார் என்பது புலனாகும்! தம் சரீரத்தோடு கண்ணன் அவயவங்கள் முற்றும் பதிய வேண்டுமென்னும் ஆர்வம் இவருக்கு உண்டாகிறது! இதற்கு வழி யாது எனச் சிந்திக்கின்றார். குழந்தைகள், பெற்றோர் முதுகைத் தழுவிக்கொள்ளும் இயற்கைச் செயல் இவர் முன் காணப்படுகிறது. இதில் இவர் மனம் செல்லுகிறது; அங்ஙனமே கண்ணனைத் தழுவிக்கொள்ள இவர் நெஞ்சம் தூண்டுகிறது; கருநிறக்குட்டனைக் காதலுடன் தாம்புறம் புல்க அழைக்கின்றார். இத்திருமொழியை எங்ஙனம் முடிக்கிறார்? காதலி சத்தியபாமையின் கருத்து, கற்பகத் தருவினிடம் செல்லுகிறது. அது தனக்கு வேண்டுமென விரும்புகிறாள் நாயகி. தன் அன்பர் ஆர்வத்தை முடிக்காமலிருக்க அவனுக்கு முடியுமா? உடனே இந்திர லோகம் புகுகிறான். இமைப்பொழுதில் கற்பகத்தரு சத்தியபாமையின் புறக்கடையில் காட்சி அளிக்கிறது. சத்தியபாமையின் நகையும், மகிழ்வும், இன்பமும் அளவிலடங்குவனவோ? பத்தரின் இந்நிலையை அன்றோ பரமர் நாடி நிற்கிறார்? நங்கை எங்ஙனம் தன் ஆர்வத்தில் வெற்றி பெற்றனளோ, அங்ஙனமே தாமும்,

கண்ணன் தம்மைப் புறம் புல்குதலாகிய செயலில் வெற்றி அடைந்தார் என்பதைக் குறித்தற்பொருட்டே ஆழ்வார் இறுதிப் பாசுரத்தில் இச்சரிதையைப் பேசுகிருர். சத்திய பாமைக்கோ புறக்காட்சியில் நிகழ்ந்தது; இவருக்கோ, அகக்காட்சியில் நடைபெற்றது. புறம் புல்கல் என்னும் இதனை இதற்குப்பின் தோன்றிய பிள்ளைத் தமிழ் இலக் கணமோ, இலக்கியமோ கூறவில்லை. இஃதொரு தனி இன்பம். இதனுலேயே இது பெரியாழ்வார் ஒருவருக்கே உரிமையாய் உள்ளது போலும்! இவர் அன்பும் அனுபவ மும் மற்றவருக்கு உண்டாகுமோ?

"கற்பகக் காவு கருதிய காதலிக்கு
இப்பொழு தீவனென் றிந்திரன் காவினில்
நிற்பன செய்து நிலாத்திகழ் முற்றத்துள்
உய்த்தவ னென்னைப் புறம்புல்குவான்;
உம்பர்கோ னென்னைப் புறம்புல்குவான்."

— பெரியாழ்வார் திருமொழி, 1-9-9.

## 10. பூச்சி காட்டுதல்

உலக நன்மையின்பொருட்டுக் கண்ணன் உலகில் தோன்றுகிருன். நாடகத்தில் யார் எந்த வேடம் பூணு கின்றனரோ, அவர் அவ்வேடத்திற்கேற்ப நடிக்கவில்லை யேல், அந்நாடகம் சுவை தாராதன்ரே? அங்ஙனமே, திரு மால் இவ்வுலகில் அவதரித்த காலத்திலும் உலகப்போக் கிற்கேற்பச் செயல் நிகழவில்லையேல், அஃது இன்பந்தாரா தொழியும். ஆதலின், கண்ணன் தன் பிள்ளைப்பருவத்திற் கேற்ற மெய்ப்பாடு தோன்றக் காட்டிய விளையாட்டுகளைப் பெரியாழ்வார் நவின்று நவின்று ஆனந்தமுறுகிருர். அவற்றுள் பூச்சி காட்டுதலும் ஒன்று. இது சிறு குழந்தை கள் இளந்தளிர் போன்ற தம் சிறு கைகளால் இரு கண்

களையும் மூடிக்கொண்டு நடப்பதையும், கைகளை எடுத்து எடுத்துக் கண்களைத் திறந்து திறந்து காட்டுவதையும் குறியாநிற்கும். இதற்கு எம்பார் என்னும் பெரியார், 'திருமால் அமிசமாகிய கண்ணன், தன் தோள்களில் உள்ள சக்கரத்தாழ்வான் சங்காழ்வான்களைத் தன் இரு கைகளாலும் மறைத்து மறைத்து, திறந்து திறந்து யாவருக்கும் வேடிக்கை காட்டுகிறான்,' எனப் பொருள் கூறுகிறார்.

அறநெறியை அறவே விட்டுத் தீவழியில் செல்லும் துரியோதனுதியராகிய நூற்றுவர் உலகில் வாழும்வரையும் மற்ற உயிர்களைத் துன்பம் தொடராதிருக்குமோ? இதைப் பொறுத்திருக்க இறைவன் இசைவனோ? அவர்கள் விரைவில் இவ்வுலகை விட்டு நீங்குவரேல், அவர்க்கும் மற்றவர்க்கும் நலம் ஏற்படுமன்றோ? அறமே தமக்கு ஆதரவெனக் கொண்ட பாண்டவர் வாழ வேண்டாவா? நூற்றுவர் முடிந்து பிழைத்தற்கும், பாண்டவர் இருந்து பிழைத்தற்கும் கண்ணன் அருச்சுனனுடைய தேரை நடாத்த அமைகிறான். இரு திறத்தினர் போக்குகளும் அவனுக்கு வேறுபாட்டை உண்டாக்குகின்றன. துரியோதனுதியரோ, வீணே அம்பு கோத்து நிற்கின்றனர். அருச்சுனனோ, அறியாமையினால் தேரிலிருந்து குதித்தோடக் கருதுகிறான். இவ்விரு செயல்களும் கண்ணனுக்குச் சினத்தீமூட்ட அவன் கண்கள் சிவக்கின்றன. இஃதொன்றாலேயே, பிரபன்னையாகிய திரௌபதையின் சூளுரையை முடித்துத் தருதலும் அருச்சுனனுக்கு ஞானத்தை ஊட்டுதலும் கண்ணன் கடமையாயின. அவன் விஜயன்மாட்டு வாத்ஸல்யம் (அளவு கடந்த அன்பு) கொண்டு, ஞானத்தை உபதேசிக்கிறான். அவ்வாத்ஸல்யமும் அவன் கண்களைச் சிவக்கச் செய்கிறது. இது நிற்க.

சிறு குட்டனாகும் கண்ணன், தன் சிறு கைகளினால்

மூடி மூடித்திறக்கும் கண்கள், ஆழ்வார் மனத்தைக் கவர்கின்றன. "இக்கண்களின் வாத்ஸல்யம் அளவுபட்டதோ! இஃது இயற்றிய செயல்கள் சிலவோ! இவ்வாத்ஸல்யத்தினால் உண்டான செந்நிறம் இன்னும் இவன் கண்களில் காணப்படுகின்றதே!" என ஆழ்வார் அதில் ஈடுபட்டு நிற்கிறார்.

"மலைபுரைதோள் மன்னவரும் மாரதரும் மற்றும்
பலர்குலைய நூற்றுவரும் பட்டழியப் பார்த்தன்
சிலைவளையத் திண்டேர்மேல் முன்னின்ற செங்கண்
அலவலைவந் தப்பூச்சி காட்டுகின்றான் ;
அம்மனே அப்பூச்சி காட்டுகின்றான்."

—பெரியாழ்வார் திருமொழி, 2—1—2

## 11. பாலுண்ணல்

ஒருவன் வளர்ந்த பின்பு சில அரிய காரியங்களைச் செய்வானேல், அவன் இளமைப் போக்கைக்காட்டி, 'அச்சிறுவனல்லனோ இப்பெருங்காரியத்தைச் செய்தவன்!' எனக் கொண்டாடுதல் உலக வழக்கு. இங்கு ஆழ்வாரோ, கண்ணன் இனிச் செய்யப்போகும், கஞ்சனையும் காளிங்கனையும் அழித்தல் முதலிய வீரச்செயல்களையும்,யசோதையால் உரலில் யாப்புண்டு நிற்கும் எளிய நிலைமையையும், புல்லாங்குழலூதி உண்மைப் பத்திவாய்ந்த மங்கையருக்கு இன்பமூட்டும் இனிமையையும் செப்பிச் செப்பி, 'அத்துணை மேலோன் அல்லவா இப்போது சிறு குழந்தை போன்று பூச்சி காட்டுகிறான்! என்ன சீர்மை! என்ன சீர்மை!' எனத் தம்மை மறந்து நிற்கிறார்.

இங்ஙனம் கண்ணன், ஆயர்பாடியிலுள்ள பெண்டிர் அனைவருக்கும் பூச்சி காட்டி அவர்களை மயக்கி நெடுநேரம் திரிந்தான்; உறக்கம் அவனை ஆட்கொண்டது. தன்னை

அறியாமல் துயின்றான். குழந்தை தானே விழிப்பான் விழிப்பான் என யசோதை நெடுநேரம் காத்துக்கொண்டிருந்தாள். சோர்வினால் அவன் எழவில்லை. அங்ஙனமே விட்டுவிடத் தாய் மனம் பொறுதன்றோ! தாயன்பினால் குழந்தையை எழுப்பிப் பாலூட்ட முயல்கிறாள் யசோதை. இத்தாயுள்ளம் பெரியாழ்வார் உள்ளத்துடன் கலக்கிறது. ஆயினும், பால் சுரந்த தாயின் பரிவிலும், ஆழ்வார் பரிவு தலை தூக்கி நிற்கிறது. குழவியிடம் உள்ள அன்பன்றோ தாய்க்குப் பால் சுரப்பதற்குக் காரணம்! யசோதையினிடமோ, குழந்தையின் நாவிற்குச் சுவை ஊட்டி வயிற்றை நிரப்பும் இனிய பால் பெருகிற்று. ஆழ்வாருக்கோ, கண்ணன் மனத்திற்கு இன்பமூட்டி, ஆன்ம சொரூபத்தை நிரப்பும் அழகும் பொருளும் நிறைந்த சொற்களாகிற பால் இடைவிடாமல் சுரந்துகொண்டே இருந்தது.

ஆயர்பாடியிலுள்ள முதிய பெண்கள் கண்ணனைக் காண்கின்றார்கள். அவர்கள், "ஆ! என்ன அழகு! என்ன அழகு! என்ன திறமை! என்ன சுறுசுறுப்பு! என்ன கண்ணொளி! என்ன தெய்வத்தன்மை! இவனைப் பெற்ற யசோதை என்ன தவம் செய்தனளோ!" என வியப்புத் தோன்றநின்றார்கள். இளம்பெண்டிர், தேனுண்ணும் தேனீக்கள் போன்று அவன் அமுத வாய்ச்சுவை உண்ண விரும்பி வந்து நிற்கின்றனர். யசோதை காண்கின்றாள்; 'குழந்தை பாலுண்ணாமல் அவர்களுடன் சென்றுவிடுவனோ!' என்னும் ஐயப்பாடு அவளுக்குத் தோன்றுகிறது. தன் மகனை விளிக்கிறாள். "கண்ணே, நீ பசியுடன் செல்லாதே; பாலை உண்டு செல்; தாய் வார்த்தையைத் தள்ளி நடவாதே," எனக் கண்ணனைக் கெஞ்சுகிறாள். உடனே கண்ணன் கிண்கிணி ஒலிக்க அசைந்து அசைந்து கூத்தாடிக்கொண்டே வந்து, தாய்

இடுப்பில் தாவி ஏறுகிறுன். அழகிய தாமரை போன்ற முகத்தில் வியர்வை துளிக்க, தாய் வதனத்தைப் பார்த்துப் புன்னகை செய்துகொண்டே பாலுண்கிறுன் கண்ணன். ஒருகால் பாற்கடலைக் கடைந்து தேவர்களுக்கெல்லாம் அமுதம் ஈந்தவன், தன் வயிற்றை நிரப்ப முயல்பவன் போன்று நடித்து, யசோதையினிடம் பாலுண்பது எத்துணை வியப்பு! இஃது இறையின் மாயமாகும்.

" அங்கமலப் போதகத்தில் அணிகொள்முத்தம் சிந்தினுற்போல்
செங்கமல முகம்வியர்ப்பத் தீமைசெய்திம் முற்றத்தூடே
அங்கமெல்லாம் புழுதியாக அளையவேண்டா அம்ம! விம்ம!
அங்கமரர்க் கமுதளித்த அமரர்கோவே! முலையுணுயே."

—பெரியாழ்வார் திருமொழி, 2-2-9.

என்னும் தெய்வப் புலவர் வாக்கை நோக்குக!

## 12. காது குத்துதல்

இங்ஙனம் தன் பசியையும் அறியாது உறங்கிய சிறுவனிடம் அடுத்த விநாடியே ஒரு வேறுபட்ட செயல் காணப்படுகின்றது. என்னை? அக்கால வழக்கின்படி அன்னை யசோதை மற்றக் குழந்தைகளைப் போன்றே தன் மகனுக்கும் காது வளர்த்து அணி இட்டு அழகு பார்க்க நினைக்கின்றுள்; அதற்குமுன் செய்ய வேண்டுவது காது குத்தும் கொண்டாட்டமன்றே! அவ்விசேஷத்தை அச் சேரியில் உள்ள யாவருக்கும் தெரிவித்துப் பலரையும் இனிய முகத்துடன் வரவேற்கிறுள் யசோதை. அதற்கு வேண்டிய பொருள்கள் பலவும் அவண் நிரப்பப் படுகின்றன.

மக்கள் அவயவங்களுள் சிறந்தது தலை. ஆதலினுற்றான், 'எண்சாண் உடம்பிற்குச் சிரசே பிரதானம்,' என்னும் பழமொழியும் வழங்கி வருகிறது. தலையிற்

கண்ணும் செவியும் இன்றியமையாதன. இவை இரண்டனுள்ளும் செவியே தலைசிறந்தது! ஏன்? மக்களுக்கு இப்புறக்கண் இன்றேனும் அவர்கள், அறிஞர் அறிவுரைகளினால் ஞானக் கண் பெற்று, பிறந்ததன் பயனை எய்தலாம். இதற்கு அந்தகக் கவி வீரராகவர் தக்க சான்றாவார். அவ்வறிவுரைகளை ஏற்பதற்குக் கருவியான காதுகள் இன்றேல், யாங்ஙனம் ஆன்மா உய்ய முடியும்! ஆகவே, ஆன்மா உய்வதற்குச் செவி வேண்டற்பாலதாகும். இதனாற்றான் இச்செவி பிரணவாகாரமாய் அமைந்துள்ளது போலும்! இச்செவியைப் புறத்தில் தொளை செய்தலும், அணிகளை அணிவித்தலும் எவற்றைக் காட்டுகின்றன? அதை நற்கேள்விகளால் தொளைத்து, அரிய பொருள்களை உட்செலுத்துதலையேயாகும்.

"கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியால்
தோட்கப் படாத செவி."

என்னும் தெய்வப் புலவர் வாக்கை நோக்குக! இச்சீரிய கருத்தைத்தான் பெரியாழ்வார், கண்ணனுக்குக் காது குத்துதல் என்னும் முறையில் உலகிற்குத் தெரிவிக்கிறார். கண்ணன் காகுத்தனே ஆயினும், அவன் உலகக் குழந்தையாய் நடிக்குங்கால் மகவிற்கு ஆற்றும் செயல்கள் யாவும் அவனுக்கும் வேண்டற்பாலனவே அல்லவா? இங்ஙனமே நம் நாட்டில் நடைபெறும் சீமந்தம் முதல் ஈமத்தேற்றுதல் ஈறாக உள்ள ஒவ்வொரு செயலுக்கும் உட்கருத்துகள் உள்ளன. ஆயினும், இவற்றின் காரணங்களை அறிபவர் மிகச் சிலரே. ஆனால், நம் விழாக்களில் பொருளற்ற கொள்கைகள் சிலவும் இடம் பெற்றுள்ளன; இவை இடைச்செருகலாகும். இவை மற்றவற்றையும் கெடுத்து நம்பிக்கையையும் மதிப்பையும் ஒழித்துவிடுகின்றன. அறிஞர் தக்கவற்றை உய்த்துணர்வாராக!

'காலம் நோக்காது, சரண் புகும் சேதனரை அங்கீகரிக்கச் செய்தற்கு மார்பை விட்டு என்றும் அகலாமல் அமைந்திருக்கும் திருமகளோடு கூடியிருப்பவனே,' என்று சிறுகுட்டனை அழைக்கிறாள் யசோதை. ஒருகால் அவன் திறந்த வாயினூடு பதினான்கு உலகங்களையும் கண்டவளல்லளோ அவள்! கோதையார் எங்ஙனம் கண்ணனை நோக்கி, "யான் அன்புடன் தரும் அக்காரவடிசில், வெண்ணெய் முதலியவற்றை நீ ஏற்றுக்கொள்ளுவாயாகில், அதன்பொருட்டு உனக்குத் தொண்டும் புரிவேன்," எனக் கூறினரோ, அங்ஙனமே யசோதையும் மகனை நோக்கி, 'இவ்வழகிய மகரக் குழையைக் காதில் இட்டுக்கொள்வையேல், பலாப்பழம் நாவற்பழங்களையும், வேறு பண்டங்களையும் உனக்குக் கொடுத்து, என் பாலையும் உண்ணத் தருவேன்,' என்கிறாள். காதலிக்கும் அன்னைக்கும் கைங்கரியத்தில் வேறுபாடு இல்லை போலும்!

சின்னஞ்சிறுவனுக்கு இன்பம் ஊட்டும் காட்சிகள் பல அவண் காணப்படுகின்றன. எங்கும் அழகு செய்யப்பட்டுள்ளது. மங்கள கீதங்கள் ஒலிக்கின்றன. யசோதை மகனுக்குக் காது குத்த அவனைப் பன்முறையும் அழைக்கின்றாள். அவன் ஓடி ஓடிச் செல்கின்றான். தாயின் நய உரையோ, பய உரையோ அவனைக் கட்டுப்படுத்தில. மகனைப் பற்றி அழைத்து வருகிறாள் அன்னை. அப்பற்று தலையும் திமிறிக்கொண்டு போகிறான் பிள்ளை. தாயின் மனம் பிள்ளையை அழகுபடுத்த நாடுகிறது. பிள்ளை நெஞ்சமோ, காது குத்துங்கால் ஏற்படும் வலியைக் கருதுகிறது. அப்பாலகன் காது குத்தும் கொண்டாட்டத்தை எங்கேயோ பார்த்திருக்க வேண்டும். அதுதான் அவனுக்கு அத்துணை அச்சத்தை விளைவித்திருக்கும். அவதாரத்திலும் என்ன உரிமைப்பாடு! ஒருகால் பசியை உணரும் தன்மையும் வாய்த்திராத பாலகன், இதுகாலைக்

காது குத்துதலினால் ஏற்படும் துன்பத்திற்கு அஞ்சி நிற்றல் எங்ஙிலேயோ, அறியோம்!

"அந்தோ! நீ பல இளைஞரோடு கலந்து செல்லினும் உன் நிறமே உன்னை இன்னானெனக் காட்டிக் கொடுத்து விடுமே! பூண்டுகளுங்கூட உனக்கு வஞ்சனையாக முளைக்கின்றனவே! உன்னைக் காத்தற்கு ஒருவருமில்லையே! ஆயர் மங்கையரை மயக்க வல்லவனே! கண்ணனே! கார் முகிலனையாய்! துன்பங்களைப் போக்கும் பிரானே! உன் காதிற்கு அணியிட்டுக்கொண்டு செல்," என்கிறாள் யசோதை.

"வணநன் றுடைய வயிரக் கடிப்பிட்டு
வார்காது தாழப் பெருக்கிக்
குணநன் றுடையரிக் கோபாலப் பிள்ளைகள்
கோவிந்தா நீசொல்லுக் கொள்ளாய்
இணைநன் றழகிய விக்கடிப் பிட்டால்
இனிய பலாப்பழம் தந்து
சுணநன் றணிமுலை யுண்ணத் தருவன்நான்
சோத்தம் பிரான்இங்கே வாராய்."

— பெரியாழ்வார் திருமொழி, 2-3-4.

"சோத்தம் பிரான்என் றிரந்தாலும் கொள்ளாய்
சுரிகுழ லாரொடு நீபோய்
கோத்துக் குரவை பிணைந்திங்கு வந்தால்
குணங்கொண் டிடுவனோ நம்பி!
பேர்த்தும் பெரியன அப்பம் தருவன்
பிரானே! திரியிட வொட்டில்
வேய்த்தடந் தோளார் விரும்பு கருங்குழல்
விட்டுவே! நீயிங்கே வாராய்."

— பெரியாழ்வார் திருமொழி, 2-3-5.

# 13. நீராட்டல்

குழவிகளுக்குக் காது குத்தியவுடன் முழுக்காட்டல் வழக்கமன்றோ? அதன்படியே யசோதை, தன் மகனுக்குக் காது குத்தும் சடங்கு முடிந்தவுடன் அவனுக்கு நீராட்டக் கருதுகிறாள் எனக் கொள்ளினும் கொள்ளலாம். அன்றியும், கண்ணன் வெண்ணெயை அள்ளி அள்ளி உண்கிறான்; அக்கையினாலேயே உடலின் மற்றப் பகுதிகளைத் தொடுகிறான்; அத்துடன் அவன் புழுதியில் சென்று விளையாடுகிறான்; மண்ணை வாரி வாரி இறைக்கிறான். சிறுவர்க்கு மண் சந்தனந்தானே! அவன் விளையாடும் சிறுவர் ஒருவர்மேல் ஒருவர் மண்ணை எடுத்து எறிந்துகொள்ளுகின்றனர். அம்மண் அவன்மேலும் வந்துவிழுகிறது. அங்குப் படுத்துப் புரளுகின்றான். வெண்ணெய் பூசப் பட்ட உடலில் மண் நன்றாகப் பதிகிறது. கண்ணன் உருவம் முழுவதும் மண்ணால் மறைக்கப்பட்டுள்ளது. இதைக் காணத் தாயின் உள்ளம் பொறுக்குமோ? ஆதலின், யசோதை இனிய குரலுடன் மகனைக் கூவுகின்றாள். இவனோ, இனிமைக்கு இசையவில்லை. விளையாட்டை விட்டுவர இளைஞன் மனம் முற்படுமோ? இளைஞர் எளிதில் நீராட ஒருப்படுவரோ?

கண்ணன் செய்யும் குறும்புகளோ, அளவிறந்தன: அச்சேரியிலுள்ள சிறுவர்களுடன் விளையாடுதலோடு அவன் திருப்தி அடைதல் இல்லை. பசுக்கன்றுகள் நடந்து கொண்டிருக்கின்றன. கட்டை எறும்பைப் பிடித்து அவற்றின் காதுகளில் விட்டுவிடுகிறான். அத்துன்பத்தால் அவை திசை கெட்டு ஓடுகின்றன. பின்னும் அவற்றை ஒருங்கு திரட்டப் பல திக்குகளுக்கும் செல்கிறான். அவன் கன்றுகளை இங்ஙனம் அலக்கழிப்பது யசோதைக்கு மிக்க வருத்தம் தருகிறது. ஏன்? கன்றுகள் இன்றேல், கறவை

கள் பால் கறவா. பால் இன்றேல், வெண்ணெய் இல்லை, வெண்ணெய் இன்றேல், கண்ணன் இல்லையே! கண்ணன் உணவு வெண்ணெயே அன்ரு? இன்னும் திடீரென்று எண்ணெய்க் குடத்தை உருட்டித் தள்ளுகிருன்; அதை எடுப்பாரும் துடைப்பாருமாய் இருக்குங்கால், துயிலும் இளங்குழந்தைகளைக் கிள்ளி எழுப்பிவிடுகிருன்; அருகில் உள்ளவர் சினத்துடன் அவனை நோக்குங்கால், அவர்கள் அஞ்சுமாறு கண்ணை உருட்டிப் பார்க்கிருன். அவன் கை ஒருபோது சில கன்றுகளின் வாலில் ஓலைகளைக் கட்டித் துரத்துகிறது; மற்ருருபோது கன்றைச் சுழற்றி மரத்தின்மேல் எறிகிறது. அவன் திருவடிகளோ, பாம்பின் படத்தின்மேலேறி நடிக்கின்றன.

இன்னணமாக அவன் செய்யும் தீம்புகள் யசோதையைத் துன்புறுத்துகின்றன. "என் அருமருந்தன்ன கண்ணே" பிறர் பழி தூற்றுவரே என்று உன் குற்றங்களை வெளியில் கூற அஞ்சுகின்றேன்! ஆயினும், உன்னைக் கண்டார். 'இந்த யசோதை, பிள்ளையை வளர்க்கும் அழகு என்னே!' என என்னையன்ரு பழிப்பர்! இன்று நீ பிறந்த திருவோண நட்சத்திரம். ஆதலால், நீ அவசியம் நீராட வேண்டும். எத்தகை இழிவுடையவனும் தன் பிறந்தநாளில் நீராடாமல் இரான்! இவ்வழுக்குடம்போடு படுக்கையில் படுத்துறங்க யான் உன்னை விடமாட்டேன். எண்ணெய், புளியம் பழம், மஞ்சள், செங்கழுநீர் மாலை, நறுஞ்சாந்து, அஞ்சனம், கடாரத்தில் நீர், கனிகள் யாவும் கொணர்ந்து வைத்துள்ளேன்.

"நீ அழுக்குடன் இருப்பினும், உன் புழுதி படிந்த திருமேனியையும் காண எனக்கு விருப்பமே! ஆயினும், உன்னை விரும்பி நிற்கும் இளம்பெண்டிர் சிரிப்பரே! அவர்களைப் பற்றி நீ கவலை கொள்ளாவிடினும், உன்னை வந்தடைந்தாருக்கு அருள் புரிய உன்னை என்றும் விடாது

பற்றி இருக்கும் நப்பின்னை கண்டால் பெரிதும் நகைப்பளே! என் செய்வாய்? அதற்கேனும் நீ நாணவேண்டாவா? என் மாணிக்கமே, மரகதமே, நற்குயும், செவிலித்தாயுமாய் இருக்கும் என் வார்த்தையைத் தள்ளிச் செல்வது உனக்கு அறமும் தருமமுமன்று. விரைவில் வந்து நீராடி, உன் அழகை யான் கண்களாரக் கண்டு களிக்குமாறு செய்வாய். என் அரிய பிரானே," என இறைஞ்சுகின்றாள் யசோதை. இது யசோதையின் இறைஞ்சலா, பெரியாழ்வாரின் இறைஞ்சலா என்பதைக் கற்பார் தீர்மானிப்பாராக!

" நின்ற மராமரம் சாய்த்தாய் நீபிறந் ததிருவோணம்
இன்றுநீ நீராட வேண்டும் எம்பிரான் ஓடாதே வாராய்."

—பெரியாழ்வார் திருமொழி, 2-4-2.

" உண்ணக் கனிகள் தருவன்; ஒலிகட லோதநீர் போலே
வண்ண மழகிய நம்பீ! மஞ்சன மாடநீ வாராய்."

—பெரியாழ்வார் திருமொழி, 2-4-6.

" நாணித்த லையுமி லாதாய்! நப்பின்னை காணிற் சிரிக்கும்.
மாணிக்க.மே !என் மணியே! மஞ்சன மாடநீ வாராய்."

—பெரியாழ்வார் திருமொழி, 2-4-9.

## 14. கண்ணன் குழலை அழகுபடுத்தக் காக்கையை அழைத்தல்

யசோதை கண்ணனைப் பல நயவுரைகளால் அழைத்துத் திருமஞ்சனமாட்டினாள் என முன் திருமொழியில் கூறியுள்ளோம். தலை முழுக்காட்டிய பின்பு கூந்தலை உலர்த்திப் பின்னிவிட வேண்டுமன்றோ! அக்காரியமும் குழந்தைகளுக்கு அத்துணைப் பிடிப்பது இல்லை. அதினும், ஓரிமைப்போதும் ஓரிடத்திலும் நில்லாது ஓடியாடும்

கண்ணன், திருமஞ்சனத்திற்குப் பிறகும் சிறிது நேரம் தாமதித்துத் தலையைச் சீவிக்கொள்ள இசைவனோ? கூந்தலின் ஈரமும் சிக்கும் நீங்கவேண்டும். அவன் விருப்பப்படி விட்டுவிடின், அவன் உடலிற்குப் பிணியும், அழுகின்மையும் ஏற்படும். அவனை அந்நிலையில் காண்பார், யசோதையையே பழிப்பர். அவன் இயல்பை மற்றோர் அறிவரோ! இரு பக்கங்களிலும் உள்ள துன்பங்களைக் கண்ட யசோதை என் செய்வாள் பாவம்! எங்ஙனமேனும் மகனைப் பண்படுத்தியே அனுப்பத் தீர்மானித்தாள். அதற்கோர் உபாயம் அவளுக்குத் தோன்றிற்று.

காகம் எங்கும் உள்ள பறவை. அருமருந்தன்ன குழவிகளுக்குக் காகத்தை அறிமுகப்படுத்துதல் தாய்மார் வழக்கு. 'காக்கா கண்ணுக்கு மை கொண்டுவா' என்னும் சொற்றொடரை ஒவ்வொரு வீட்டிலும் கேட்கலாம். குழந்தைகள் தாம் உண்ணும் உணவில் சிறு பகுதியைக் காக்கைக்கு இடுமாறு தாயை வற்புறுத்துதலும், அவை உண்ணும்போது தாமும் உண்ணலும் அவர்களுக்கு இயல்பு. சில போது காகம் குழந்தைகளின் கையிலுள்ள அப்பத்தை நட்பினனைப் போன்று பிடுங்கிச் செல்லும். அழுங்குழந்தையும் காகத்தைக் கண்டதும் அடங்கி இருத்தலைக் காணலாம். மகவுகள் தளர்நடைக்காலத்தில் துரத்திச் செல்லுவதும் காகங்களையே. இம்முறையில் குழந்தைகளுக்கும் காகங்களுக்கும் நெருங்கிய உறவு உள்ளதன்றோ!

இதை நன்கு உணர்ந்த யசோதை, தன் மாய மகன் குழலைச் சீவி முடிக்கவும், கறவைகளைச் செலுத்தக்கோல் கொணரவும் காகத்தை அழைக்கிறாள். பொதுவாக இளைஞர்களுக்கும் காகத்திற்கும் உள்ள தொடர்பைக் காட்டிலும் கண்ணனுக்கும் காகத்திற்கும் மிக்க தொடர்பு உண்டென்பதை யசோதை நன்குணர்ந்தாள் போலும்!

இன்றேல், இரண்டு திருமொழிகளில் காகத்தைக் கண்ணனுக்கு உறவுபடுத்துவளோ? முதலில் கறுத்த காக்கையைக் கறுத்த கூந்தலை முடிக்க அழைக்கிருள்; பின்பு கறவையையும் கன்றுகளையும் மேய்க்கக் கோல் கொணருமாறு அதற்குக் கட்டளையிடுகின்ருள். சிறு குச்சுகளால் கூடமைக்கும் காக்கைக்குக் கோல் கொணர்தல் எளிதன்ருே? இச்சீரிய கைங்கரியத்தை இச்சிறு காகம் பெறுதற்குக் காரணம் யாது? முன்ெருகால் இதன் இனத்தைச் சார்ந்த ஒரு காகம் சக்கரவர்த்தி திருமகனிடம் சரணுகதியடைந்த மேன்மையேயாகும்! சரணுகதித் தத்துவத்தை நிலைநிறுத்தற்கே தோன்றிய அப்பெருமானைத் துணையாகப் பற்றிய பண்பு பழுதுறுமோ? அது பல பிறவிகளுக்குந் தொடராதோ? அச்சீர்மையினுற்ருன் இதற்கு இக்கண்ணிய கைங்கரியம் கிடைத்தது போலும்!

பிள்ளை இயல்பைப் பெரிதும் பெற்றவன், பிறர் மனத்தைக் கவரும் குவளை மலரன்ன நிறத்தையுடையவன், நப்பின்னைப் பிராட்டியாரால் மகிழ்ந்தேற்றுக் கொள்ளப்படும் மணுளன், எங்கள் குடிமுழுதும் ஆண்டவன், உயரமான உறியில் வைத்த வெண்ணெய்த் தாழிகள் இருந்தவாறே இருக்க, எங்ஙனமோ அதில் உள்ள வெண்ணெயை உண்டு களித்தவன், தன்னை ஆஸ்ரித்த இந்திரன் முதலானேரைத் துன்புறுத்திய அரக்கனை அழித்தவன், நான்முகனைத் தன் உந்தி மலரில் தோற்றுவித்தவன், மாவலியின் இல்லக்கிழத்திகள் மகிழுமாறு தன் கரத்தில் நீர் விழுந்ததும் நீண்டு உலகை அளந்தவன், கஞ்சனுல் அனுப்பப்பட்ட அரக்கப் பறவை, மற்றப் பறவைகளுடன் உலவி இரைதேடிக்கொண்டிருப்பினும், அதைப் பிரித்தறிபவன். இவன் தெய்வத் தன்மையை என்னென்பது! தான் நுழைந்து மாயவேண்டிய

அப்புள்ளின் வாயில் தன் கையை நுழைக்கிறான். அந்நுழைவு அப்புள்ளை இரு பிளவாகச் செய்கிறது.

யசோதை இவை யாவற்றையும் காணினும், தன் மகனை உலகச் சிறுவனெனவே நினைக்கின்றாள். அவளுக்கு இம்மயக்கை உண்டாக்கியவனும் கண்ணனே. ஆதலின், மற்றவரைப் போன்றே அவளும் தன் மகன் குழலை அழகு படுத்தக் காகத்தை அழைத்தல் பொருத்தந்தானே!

"ஓ காகமே, நீ வைதிகர் பிதிர்க்களைக் கருதியிட்ட பிண்டத்திரளையும் ஒருவர் உண்டு கழித்த பண்டங்களையும் புசித்து வாழ்வாய்! இட்டாருக்குச் சிறு நன்றியைச் செலுத்தவும் அறியாய்! 'பறக்கும் காக்கை இருக்கும் கொம்பறியாது,' என்றும், 'காக்கை வாயிலும் கட்டுரை கொள்வர்' என்றும் கூறுதற்கேற்ப, முன் இருந்த இடம் இஃதென அறியாத நீ, சிலருக்கு ஏதோ சில நற்சொற்களைச் சொல்லிக்கொண்டு அலைந்து திரியாதே! ஒருபோது உன் குலத்தான் ஒருவனுக்கு அபயம் தந்து காத்த கண்ணன், இன்று திருமஞ்சனம் ஆடி நிற்கின்றான். அவனுக்கு உன் நன்றியைச் சிறிதேனும் காட்டக் கருது வையேல், வண்டு போன்று கறுத்து அழகு நிரம்பிய இவன் கூந்தலைக் கோதி அலங்கரிக்கும் கைங்கரியத்தை மேற்கொள்வாயாக!" என்கிறாள் யசோதை. இச்செய்தியைப் பெரியாழ்வார் வாக்கால் நன்கு அறிகிறோம்.

"திண்ணக் கலத்தில் திரையுறி மேல்வைத்த,
வெண்ணெய் விழுங்கி விரைய உறங்கிடும்
அண்ணலமரர் பெருமானை, ஆயர்தம்
கண்ணனை வந்து குழல்வாராய் அக்காக்காய்!
கார்முகில் வண்ணன் குழல்வாரா யக்காக்காய்!"

— பெரியாழ்வார் திருமொழி, 2-5-3.

"பிண்டத் திரளையும் பேய்க்கிட்ட நீர்ச்சோறும்,
உண்டற்கு வேண்டிநீ யோடித் திரியாதே,
அண்டத் தமரர் பெருமான் அழகமர்!
வண்டொத் திருண்ட குழல்வாராய் அக்காக்காய்!
மாயவன்றன் குழல் வாராய்நீ யக்காக்காய்!"
— பெரியாழ்வார் திருமொழி, 2-5-7.

## 15. கோல் கொணரக் காக்கைக்குக் கட்டளை இடல்

யசோதை தன் மகனை நீராட்டினாள்; அவன் குழலைச் சீவி முடித்தாள். ஆயினும், ஒரு தாய் அவ்வளவில் திருப்தியடைந்துவிடுவாளோ? அக்கூந்தலில், அழகையும் மணத்தையும் ஊட்டும் மலர்களைச் சூட்டவேண்டுமென்று அவள் கருதுவளல்லளோ? பல நிறங்களும், பல வகை மணமும் உள்ள மலர்கள் பலவற்றைக் கொணர்ந்து தொடுக்கத் தொடங்கினாள் யசோதை. சிறிது நேரம் காத்திருந்து தொடுக்கும் மலர்களை அணிந்து செல்வதற்கேற்ற பொறுமை கண்ணனுக்கேது? கானகஞ் சென்று காலிகள் மேய்ப்பதிலும், தன்னொத்த சிறாருடன் விளையாடுதலிலுமே அவன் மனம் சென்றுகொண்டிருக்கிறது. ஆதலின், அவன் ஆனிரை மேய்க்கக் கோல் தருமாறு தாயை இறைஞ்சுகிறான். தாய் என் செய்வாள் பாவம்! அவள் எண்ணம் வேறு! அவன் போக்கு வேறு! ஆனாலும், இப்பொருளில் தாயாகிய யசோதையே வெற்றியடைகிறாள்!

முன் குழலைச் சிக்கெடுத்தற்குக் காகத்தை அழைத்துக்கொண்டே காரியத்தை முடித்தாள். இச்செயலை முற்றுப்பெறச் செய்தற்கும் அதுவே கருவியெனக் கருதிய யசோதை கோலை அவனிடம் உடனே கொடுத்துவிடாமல்,

"காகத்தினிடம் உனக்குக் கோல் வாங்கித் தருகிறேன்" என அவனை மயக்கி, கோல் கொண்டு வருமாறு காகத்தை விளிப்பதாக இத்திருமொழியைப் பெரியாழ்வார் உபசரிக்கிறார்.

கண்ணன் காலிகளை மேய்க்கச் செல்லுங்கால் இடைப் பையனைப் போன்றே தன்னைப் பலவிதமாக அலங்கரித்துக் கொள்கிறான். இந்த அலங்கரிப்பு மற்ற இடைப்பிள்ளைகளிடமிருந்து அவனைப் பிரித்தறிய இயலவில்லை. அவர்களுள் ஒருவனாகவே காணப்படுகிறான்; மயிற்பீலிகளைக் கற்றையாகக் கட்டி முதுகின்மேல் தொங்கவிட்டுக் கொண்டு, முகத்தில் வந்து விழும் குழல் இரண்டாகப் பிரியக் கன்றின்முன் ஓடுகிறான்.

"ஓ காகமே, இவன் ஆஸ்ரிதரான பாண்டவர்க்காகத் தேர் நடத்த ஒருப்பட்டவன்; ஆலந்தளிர், பெரிய அரவு இரண்டையும் தெப்பமாகக் கொண்டு கடலில் பள்ளி கொள்ளுபவன்; சீதையின்பொருட்டு இராவணன் தலைகள் பத்தும் ஒரே அம்பில் இற்று விழுமாறு வில்லை வளைத்த வீரன்; தன் பெயர் உலகில் நிலைத்திருக்குமட்டும் விபீஷணனை அரசிருக்குமாறு செய்தவன். ஆதலால், பாஞ்சசன்னியத்தைப் பிடித்த கைகளுக்குத் தகுதியானதும் இவன் நிறத்திற்கு ஏற்றதுமான அழகிய உருவத்தையும், அரக்கு நிறத்தையும் உடைய ஒரு கோல் கொண்டுவா. காகமே, இதை உடனே செய். இன்றேல், முன்னொருகால் இவனுக்கு விரோதமாய் நடந்து ஒரு கண்ணை இழந்த நீ, இப்போது இன்னொரு கண்ணையும் இழக்க நேரிடும்," என்று காகத்தைப் பயமுறுத்திக் கொண்டே தன்மகனை அழகுபடுத்தும் காரியத்தை முடித்துக்கொள்ளுகிறாள் யசோதை.

"தென்னிலங்கை மன்னன் சிரந்தோள் துணிசெய்து,
மின்னிலங் கும்பூண் விபீடண நம்பிக்கு

*என்னிலங்கு நாமத் தளவு மரசென்ற*
*மின்னலங் காரற்கோர் கோல் கொண்டுவா,*
*வேங்கட வாணற்கோர் கோல்கொண்டுவா."*

**— பெரியாழ்வார் திருமொழி, 2-6-9.**

*"சங்கம்பிடிக்கும் தடக்கைக்குத் தக்கநல்*
*அங்க முடையதோர் கோல்கொண்டுவா*
*அரக்கு வழித்ததோர் கோல்கொண்டுவா"*

**— பெரியாழ்வார் திருமொழி, 2-6-2.**

*"கற்றைக் குழலன் கடியன் விரைந்துஉன்னை*
*மற்றைக்கண் கொள்ளாமே கோல்கொண்டுவா*
*மணிவண்ண நம்பிக்கோர் கோல்கொண்டுவா"*

**— பெரியாழ்வார் திருமொழி, 2-6-7.**

# 16. பூச்சூட்டல்

நந்தகோபன் புறக்கடையில் பெரிய பரந்த தோட்டம். அதில்பல கனி மரங்களும், நிழல்தரும் தருக்களும், குற்றுச் செடிகளும், மலர் நிறை மரங்களும் உள்ளன. அவை கண்டாரைப் பிணிக்கும் தகைமையுடையன. கண்ணன் தோன்றுதற்கு முன்பு அவை பலருக்கும் பயன் படாநின்றன. அவன் பிறந்த பிறகோ, யசோதைகூட அவற்றுள் ஒன்றையும் விரும்புதல் இல்லை. எல்லாம் தன் மகனுக்கே என்பது அவள் எண்ணம். அவன் வெறுத் தொதுக்கிய சிலவே பிறர்க்காகும். முன்பு அச்சோலையி லிருந்து பலவகைமலர்களையும் கொண்டுவைத்த யசோதை இங்கு அம்மலர்களின் பெயர்களைத் தனித்தனியே குறிப் பிட்டு, 'இவற்றை வந்து சூட்டிக்கொள்,' எனக் கண் ணனை அழைக்கின்றாள்.

"தேனினும் இனிய ஆராவமுதே, கடல்படா அமுதே, மேக நிறத்தோனே, திருவின் மணாளனே, உன்னிடம் அன்பு மிகுந்த, மதியன்னமுகப் பெண்களிடம் குறும்புகள் புரிபவனே! ஒருகால், என்றைக்கு நீயே வெண்ணெயை அள்ளி அள்ளி உண்பாய் என ஆர்வத்துடன் எதிர்நோக்கி இருந்த யான், இன்று அச்செயலைச் செய்ய முற்பட்ட உன்னை அஞ்சாமல் அடிக்கப் புகுந்தேன்! ஏன்? பிறர் வீட்டிலும் இங்ஙனம் செய்யின் பழிச்சொல் பரவுமே என்னும் கருத்தைக்கொண்டே ஆகும்.

"நப்பின்னைமாட்டுள்ள அன்பின் பெருக்கால் உடலையும் உயிரையும் நோக்காது கஞ்சனைக் காலால் மிதித்தும், மல்லரைத்தோளால் நெருக்கியும் அழித்தவனே, சிமாலியைச் சக்கரத்தால் ஒழித்தவனே, ஆலந்தளிரிலும் தொண்டர் நெஞ்சிலும் துயில்பவனே, குடக்கூத்தாடுபவனே, நீ குடக்கூத்தாடும் திறமையை யான் என்னென்றியம்புவேன்! மேலெறிந்த குடங்கள் உன் கைகளை வந்தடைவதற்குள் பல வகை நடனங்களைச் செய்கின்றனை. ஆகாயத்திற்சென்ற குடத்தைக் காணினும் காணலாம், உன் நடனத்தின் வகைகளைத் தெரிந்துகொள்ளுதலோ அரிது! அகங்கார மமகாரங்களினால் நிரம்பப்பட்ட இரணியன் நெஞ்சைப் பிளந்தவனே, உன்னைப் பிரிந்த எனக்கு ஏற்படும் ஆற்றாமையையும் நோக்காது, உன் கரிய திருமேனி வாடக் கானகஞ் செல்லுகின்றனை; யான் தடுப்பினும் நிற்ககில்லாய்; ஆயினும், யான் விரும்பிச் சூட்டும் செண்பகம், மல்லிகை, பாதிரி, செங்கழுநீர், புன்னை, குருக்கத்தி, இருவாட்சி, கருமுகை முதலிய மலர்களை சூடிச் செல்வாயாக!" எனத் தாய் கண்ணனைப் பரிவுடன் கேட்டுக்கொள்ளுகிருள். இங்குப் பெரியாழ்வார் பேரன்பை நோக்குதல் வேண்டும்.

"குடங்க ளெடுத்தேற விட்டுக் கூத்தாட வல்லவெங் கோவே!
மடங்கொள் மதிமுகத் தாரை மால்செய்ய வல்லவென் மைந்தா!
இடந்திட்டி ரணியன் நெஞ்சை இருபிள வாகமுன் கீண்டாய்!
குடந்தைக் கிடந்தவெங் கோவே! குருக்கத்திப் பூச்சூட்ட வாராய்."

— பெரியாழ்வார் திருமொழி, 2-7-7.

"சீமாலி கனவனோடு தோழமை கொள்ளவும் வல்லாய்,
சாமா றவனைநீ யெண்ணிச் சக்கரத் தால்தலை கொண்டாய்,
ஆமா றறியும் பிரானே! அணியரங் கத்தே கிடந்தாய்,
ஏமாற்ற மென்னைத் தவிர்த்தாய் இருவாட்சிப் பூச்சூட்ட வாராய்."

— பெரியாழ்வார் திருமொழி, 2-7-8.

குறிப்பு: குடக்கூத்து என்பது, தலையில் பல குடங்களை அடுக்கிக்கொண்டு, இரு தோளிலும் குடங்களை இருத்திக் கொண்டு, இரு கரங்களிலும் இரு குடங்களை ஏந்தி, அவற்றை ஆகாயத்கில் வீசி எறிந்து, நடனமாடிக் கொண்டே பிடித்தல்.

## 17. காப்பிடல்

கீழே கூறியவாறு யசோதை கண்ணனுக்குத் திருமஞ்சனம் (நீராட்டுதல்) செய்தாள்; குழலைச் சீவிமுடித்தாள்; பல நிற மலர்களையும் சூட்டினாள்; தானே ஒரு முறை அவனை நோக்கினாள். அவனது அஞ்சனமொத்த உடலும், தாமரையன்ன அருள்சொரியும் கண்களும், நிலவன்ன புன்முறுவலும், மற்ற ஒப்பனைகளும் அவள் கண்களைக் கவர்ந்தன. இயற்கை வனப்பு வாய்ந்த அவனுக்கு, அவள் செய்த ஒப்பனை அவனைப் பின்னும் அதிகமாக ஒளிரச்செய்தது. மாசு படிந்த மாணிக்கம், மலினம் துடைத்தவுடன் ஒளி விட்டு ஒளிர்வது போன்று, முன் மண்ணால் மறைப்பட்ட கண்ணன் இப்போது சோதி

மயமாய் விளங்குகிறான். இத்தேஜஸைக் கண்டாள் யசோதை. "அந்தோ! என் கண் திருஷ்டியே இவனுக்குக் கெடுதி விளைக்கும்போலிருக்கிறதே! யான் இவனை உற்று நோக்க மாட்டேன்! என்மகன் கோவிந்தன் யாதொரு கெடுதியும் இன்றிவாழட்டும்! இவன் ஒப்பனைகள் யாவும் முடிந்தன அல்லவா? இனி இவன் இல்லத்தில் தங்குவனோ? இப்போதே வெளியே ஓடிவிடுவான்; கன்றுகளைக்கட்டி ஆள்வான்; புல்லாங்குழலையூதிப் பெண்களைத் திரட்டுவான்; குரவைக் கூத்தாடுவான். யார் இவனைப் பார்த்துத் திருஷ்டி வைப்பரோ! யார் கண்ணெச்சில் இவன்மேல் பதியுமோ! அஃது இவனுக்கு என்ன தீங்கை விளைவிக்குமோ அறியேன்!" எனத் தனக்குள்ளே சொல்லிக் கொண்டு, கண்ணனை விளிக்கின்றாள்.

"கண்ணனே, இளமங்கையர் சிற்றில்லங்களையும் மணற்சோற்றையும் அழித்து அவர்களோடு கைகோத்து விளையாடுதலை ஒழி என யான் கோபித்து அழைக்க, பயந்து எங்கோ ஒளிந்துகொண்டாய். பொழுதும் சாய்ந்துவிட்டது. இன்னும் நீ உணவு கொண்டாயில்லை. என்னை ஆளப் பிறந்த கண்ணு, இப்படியோ என்னை ஆள்வது! யான் அன்புடன் தருவதை நீ உண்டாலல்லவா என்னை ஆள்வது உண்மையாகும்? இப்போது யான் உன்னை ஒன்றும் செய்யமாட்டேன். நீ அஞ்சாமல் வருவாயாக!

"இவ்வூரில் பஞ்ச லட்சம் குடிகள் உள்ளார்கள். அவர்களுக்கெல்லாம் மக்கள் இருக்கின்றார்கள். அவர்கள் செய்யும் குற்றங்கள் யாவும் உன் மேலேயே சுமத்தப் படுகின்றன. அங்ஙனம் உன்மேல் பழி சாற்றுவாரிடம் நீ செல்லாதே; அப்பழியைப் பொருது துயருறும் என் பால் வந்து சேருவாய். பூதனை முதலிய கொடிய பேய்களை விட்டு உன்னைத் துன்புறுத்துவார் பலருளர்.

இப்போதோ, அந்திப்பொழுதாய்விட்டது. நீ நாற் சந்தியிலே நில்லாதே அங்குக் கொடிய தேவதைகள் சஞ்சரியா நிற்கும். அவைகள் உனக்குக் கெடுதி செய்யினும் செய்யலாம். ஆதலின், அவைகள் உன்னைத் துன்பம் செய்யாதவாறும், பிறர் திருஷ்டி தோஷம் உன்மேல் தாக்காதவாறும் உனக்கு அந்திக் காப்பிடுகிறேன் என்னிடம் வா," என்கிருள் பெரியாழ்வாராகிய யசோதை.

"செப்போது மென்முலை யார்கள்
சிறுசோறும் இல்லும் சிதைத்திட்டு."

— பெரியாழ்வார் திருமொழி, 2-8-3.

"பல்லாயி ரவரிவ் வூரில் பிள்ளைகள் தீமைகள் செய்வார்,
எல்லாமுன் மேலன்றிப் போகா;
எம்பிரான் நீஇங்கே வாராய்."

— பெரியாழ்வார் திருமொழி, 2-8-5.

"மன்றினில் லேல்அந்திப் போது
மதிள்திரு வெள்ளறை நின்ருய்,
நன்றுகண் டாய்என்றன் சொல்லு
நானுன்னைக்காப்பிட வாராய்."

— பெரியாழ்வார் திருமொழி, 2-8-2.

## 18. இளமைத் தீம்புகள்

கண்ணன் பகற்போது பலர் வீடுகளிலும் சென்று குறும்பு செய்கிருன். இச்செய்தியை அயல் வீட்டுப் பெண்களாலும், அவன் நடக்கையாலும் யசோதை ஒருவாறு அறிந்திருக்கின்ருள்; ஆனால், இரவில் உறங்கின பின்பு அவன் செய்யும் தீச்செயல்களை அவள் சிறிதும் அறியாள். முன் திருவாய்மொழிகளில் குறிப்பிட்டவாறு தாய் கண்ணனுக்கு நீராட்டி, பூச்சூட்டி, திருஷ்டி

கழித்து, வயிறு நிரம்ப உணவையும் பாலையும் ஊட்டி, உறங்கவைத்தாள்; அவளும் அவனைத் தழுவிக் கொண்டே படுத்துத் துயின்றாள். ஆதித்தன் கீழ்த் திசையில் தோன்றும் காலம் அணுகியது. யசோதை துயி லெழுந்து, தன் இல்லக் காரியங்களில் நுழைந்தாள். பொழுது புலர்ந்ததும் புலராததுமாய் இருக்கும்போதே பல பெண்கள் நந்தகோபன் வீட்டில் புகுந்தார்கள். அது, 'மன்னன் மனையில் ஏதோ விசேஷம் நடைபெறுகிறதோ!' எனக் கண்டார் கருதுமாறு இருந்தது. ஆனால், வந்த பெண்களிடம் அலங்காரமோ, அன்றி மகிழ்வோ காணப் படவில்லை. யாவரும் இரவு உடுத்த உடையுடனும், கலங்கிய மனத்துடனும் வந்துகொண்டிருந்தனர். இப் போக்குப் பார்த்தாருக்கு இன்னும் சிறிது ஐயப்பாட்டை விளைவித்தது. உள்ளே நுழைகின்றவர் என்ன செய்கின் றனர்? அங்கும் இங்கும் விரைந்து செல்கின்றனர்; தெருவாயிற்படியில் உள்ள காவலரை நோக்கி, "யசோதை எங்கே? யசோதை எங்கே?" என வினவுகின்றனர். அவர்கள் பதைபதைப்பும், கோபக்குறியும் காவலரையும் மற்றவரையும் திடுக்கிடச் செய்தன. வந்தவர் ஒருவர் இருவரல்லரே! ஒருவர்பின் ஒருவராகப் பல பெண்டிர் வந்துகொண்டே இருக்கின்றனர். அங்குள்ளார், 'ஆயர் பாடியில் உள்ள இளம்பெண்டிர் யாவரும் இவண் வந்து விட்டனரோ!' என நினைத்தனர். அக்காவலர் யசோதைக்கு அறிவிக்கும் வரையுங்கூட அம்மங்கையர் தாமதிப் பதாகத் தெரியவில்லை. அவ்வளவு ஆற்றாமை! அளவு கடந்த சினம்! இன்னும் சிறிதுபோது தங்கள் குறையை யசோதையிடம் இயம்பவில்லையேல், அவர்கள் இருதயம் வெடித்துவிடும்போல இருக்கிறது! இரவெல்லாம் கண்ணன் அவர்களுக்கு இழைத்த குறும்புகள் அவர்களை இந்நிலைக்குக் கொண்டுவந்து விட்டன. யாது செய்வார்

கள் பாவம்! இடமோ, நந்தகோபன் அரண்மனை! யசோதையோ, மன்னன் மனைவி! முற்றம் எங்கே, அந்தப்புரம் எங்கே! அவ்வந்தப்புரத்தில் அரசி இருப்பிடம் எங்கே! அவ்விடியற்காலையில் யசோதை எந்த இடத்தில் என்ன செயலில் பங்கெடுத்துக்கொண்டிருக்கின்றனளோ, அவர்களுக்குத் தெரியாது! இதன் இடையில் எத்தனை ஏவலாளர்கள்! ஒவ்வொருவரையும் கடந்து செல்லவேண்டும்! ஒவ்வொருவருக்கும் தாங்கள் வந்த காரியத்தைக் குறிப்பாகவேனும் தெரிவிக்க வேண்டும்! இதற்குள் அம்மங்கையர் நிலை சிறிது மாறுகிறது. யாங்ஙனம்? அவர்களுக்குக் கண்ணன்மேல் ஏற்பட்ட சினம் சிறிது சிறிதாகத் தணிகிறது. அக்காவலர் வினவும் வினாக்களில் வெறுப்பும் சலிப்பும் தோன்றுகின்றன. ஆயினும், மற்றையார் உள் நுழையுங்கால் ஏற்படும் துன்பம் அவர்கட்கு ஏற்படவில்லை. ஏன்? எப்போது இளம்பெண்டிர் ஒருவர்பின் ஒருவராக வரத் தொடங்கினரோ, அப்போதே காவலருக்குப் பொருள் விளங்கி விட்டது. "இது கண்ணன் குறும்புகளினால் மனங் குலைந்த கூட்டம். இதைத் தடுத்தல் கூடாது. யசோதையிடம் ஒன்றுமறியாப் பாலகன் போன்றிருக்கும் கண்ணனுடைய புன்சிரிப்பாகிய இன்பமழை, இவர்கள் மனப் பயிரில் விரைவில் பெய்தல் வேண்டும். இன்றேல், இவர்கள் சினவெம்மை நீங்காது. ஆதலின், தடையின்றி இவர்களை விட்டுவிடுதலே நாம் செய்யவேண்டிய உதவி," எனக் கருதி, அவருள் பலர் அவர்கள் செல்லுதற்கு உடன்படும் தலையசைவோடு நின்றுவிட்டனர். இதனாலேயே அவர்கள் விரைவில் யசோதையை அடைய முடிந்தது.

அந்தப்புரத்தின் முன்றிலில் பெரிய இளமங்கையர் கூட்டம். மெல்லிய குரலுடன் ஒருவரோடொருவர் பேசும் சிறு ஒலி. அவ்வொலி யசோதையின் செவியில்

படுகிறது; அவனை வெளியே கொணர்கிறது. அத்திரளைக் கண்டனள் யசோதை; சிறிதுபோழ்து மயங்கி நின்றனள். அவள் அதிகாலையில் அவ்வளவு பெரிய கூட்டத்தைக் கண்டது அதுவே முதல் முறையாகும். அவரவர் வந்த செய்தியை வினவினள் யசோதை. தன் மகன் புரிந்த தீம்புகள் ஒவ்வொன்ருக வெளிவருகின்றன. முன்னமே முறைப்படுத்திக்கொண்டு வந்தவர்கள்போன்று ஒவ்வொருவராகத் தத்தமக்குக் கண்ணனால் நேர்ந்த துன்பங்களை அடுக்கடுக்காகச் சொல்லத் தொடங்கினர்:

"விடிவதற்கு முன்பே கட்டித் தயிரைக் கடைந்து திரட்டி வைத்திருந்த அவ்வளவு வெண்ணெயையும் சிறிதும் இல்லாமல் உன் மகன் உண்டான். அத்துடன் நின்ருனு? அக்கலத்தையும் ஒரு பெரிய கல்லில் ஓங்கி அறைந்தான். அஃதுடையும்போது உண்டாகும் ஓசையைக் கேட்டுச் சிரித்து நிற்கிருன்!" என்ருள் ஒருத்தி.

"திருவோணமாகிய இன்று சுவாமிக்கு அமிசை செய்தற்பொருட்டு, அரிசி, சிறுபருப்பு, கருப்பஞ்சாறு, பால், நெய் இவற்றைக் கலந்து அக்காரவடிசில் செய்து வைத்தேன். இதை முன்னமே அறிந்திருந்த அவன் சிறிதும் மிகுதி வையாமல் எல்லாவற்றையும் உண்டு, 'இன்னும் இருந்தால் உண்பேன்' எனச் சொல்லிக் கொண்டே தொலைவில் போய் நிற்கிருன்," என்ருள் ஒருத்தி.

"இலட்டு, சீடை, எள்ளுருண்டை இவைகளைச் செய்து என் வீட்டின் உள்ளே வைத்துவிட்டு, யான் வெளியே சென்றேன்; என் வீட்டில் நுழைபவர் ஒருவரும் இலர் என நினைத்திருந்தேன். இவனே, வீட்டிற்கு உரியவன் போன்று உள்ளே புகுந்து, ஒன்றுகூட எனக்கு மிகுதி வையாமல், எல்லாம் உண்டு, அங்குள்ள வெண்ணெய்க்

கலத்தையும் எடுக்கச் சொல்லுகிருன்," என்றனள் ஒருத்தி.

"உள்ளே இருந்த என் மகளை வெளியே அழைத்துச் சென்று, அவள் கையிலிருந்த வளையைக் கழற்றி நாவற் பழக்காரிக்குக் கொடுத்துப் பழங்கள் வாங்குகிறவன், 'யான் கொடுத்த வளைக்கு நீ கொடுத்த பழம் மிகக் குறைவு' என அவளோடு வழக்கிட்டுக்கொண்டிருந்தான். அவ்வமயம் அங்குச் சென்ற யான், 'இவ்வளை உனக்கேது?' எனப் பழக்காரியை வினவ, அவள் கண்ணனைக் காட்டு கிருள். இவனே, 'யான் கொடுக்கவில்லை. உன் மகள் வளை என்னிடம் எப்படி வரும்?' என வாதிடுகிருன்," என்ருள் ஒருத்தி.

"இவன் இங்ஙனம் செய்தற்குக் காரணம் இவனுக்கு இத்தின்பண்டங்கள் கிடையாமையால் அல்ல. இவனே, மன்னன் மகன்; பல நாட்கள் மகவின்றிப் பிறந்த ஒரே புதல்வன். இவனுக்கு இல்லாததும் உண்டோ? செல்வச் செருக்கிஞலன்ரே புண்ணிற்புளிப்பெய்ததுபோல இத்துணைத் தீம்புகளைச் செய்து எங்களை அலக் கழிக்கிருன்!" என்றனள் ஒருத்தி.

"உன் மக்கள்போன்று உன் அண்டையிலே வாழ்ந்து வரும் எங்களை உன் பிள்ளையைக்கொண்டு இங்ஙனம் துன்புறுத்தல் உனக்கு நீதியாகுமோ?" என வினவிஞள் ஒருத்தி, இங்ஙனம் பலபேர் பலவாறு முறையிட்டனர். அவற்றை மன எரிவோடு கேட்டுக்கொண்டிருந்தாள் யசோதை. அவளுக்குத் தன் மகன் இங்ஙனம் தீமைகளைப் புரிகின்றனனே என்னும் கவலை ஒருபுறம். "இந்த இடைச் சிகள் நம் மகனை இவ்வாறு தூற்றுகின்றனரே" என்னும் சினம் ஒருபுறம். இங்ஙனம் இவ்விருபுறத்திலும் கவரப் பட்ட யசோதை தன் மகனை அயலார் அகத்திற்குச்

செல்ல வேண்டாவென்று நயத்துடனும் பயத்துடனும் அழைக்கின்றாள்.

"ஏ வாமன நம்பீ, கரிய குழலையும் செவ்வாயையும் உடைய காகுத்தா, கொண்டல் வண்ணா, திருப்பேரைக் கிடந்த நாரணா, வேங்கடவா, கேசவா, முன்பு உன்னிடம் மிக்க அன்பு பாராட்டிய அயலகத்தாரே இப்போது உன்னைப் பரிபவம் செய்கின்றனரே! இஃது என்றால் பொறுக்க இயலவில்லை. அன்பில்லார் அகத்தில் அடியெடுத்து வையாதே! ஆயர் மகளிரின் வேலையாட்களும் உன்னை இழிவாகப் பேசுகின்றனர். அவர் அருகில் நிற்பதும் உனக்குத் தகுதியுடையதன்று. ஆதலால், தாய் சொல் மறுக்காமல் வந்துவிடு. தாய் கட்டிப்போடினும் தாய்க்கு அடங்கி இருப்பவனல்லனோ நீ?" என்கிறார் யசோதை நிலையில் நிற்கும் பெரியாழ்வார்.

"வெண்ணெய் விழுங்கி வெறுங்கலத்தை
வெற்பிடை யிட்டதன் ஓசைகேட்கும்
கண்ணபி ரான்கற்ற கல்விதன்னைக்
காக்ககில் லோமுன் மகனைக் காவாய்"

— பெரியாழ்வார் திருமொழி, 2-9-1.

"கன்னல் இலட்டுவத் தோடு சீடை
காரெள்ளி னுண்டை கலத்தி லிட்டு
என்னக மென்றுநான் வைத்துப் போந்தேன்
இவன்புக் கவற்றைப் பெறுத்திப் போந்தான்
பின்னு மகம்புக் குறியை நோக்கிப்
பிறங்கொளி வெண்ணெயும் சோதிக் கின்றான்,
உன்மகன் தன்னை யசோதை நங்காய்
கூவிக்கொள் ளாய்இவை யும்சிலவே"

— பெரியாழ்வார் திருமொழி, 2-9-9.

"இல்லம் புகுந்தென் மகளைக் கூவிக்
கையில் வளையைக் கழற்றிக் கொண்டு

கொல்லையில் நின்றும் கொணர்ந்து விற்ற
அங்கொருத் திக்கவ் வளைகொடுத்து,
நல்லன நாவற் பழங்கள் கொண்டு
னல்லேன் என்று சிரிக்கின் றனே!"
— பெரியாழ்வார் திருமொழி, 2-9-10.

# 19. ஆற்று விளையாட்டு

முன் திருமொழியில் கண்ணன் தங்கள் வீடுகளில் நுழைந்து செய்யும் குறும்புகளை ஆயர் மகளிர் யசோதையிடம் வந்து முறையிட, அம்மகனைத் தாய் நயமாக அழைத்து வீட்டிலேயே இருக்குமாறு புத்தி புகட்டினள். அன்று முற்றும் அங்ஙனமே இருந்தான் கண்ணன்; மறுநாள் அவர்கள் வீடுகளுக்குச் செல்லின் மிக்க அல்லல் விளைகிறதெனக் கருதி, அவர்கள் கூட்டமாகச் சென்று விளையாடும் ஆற்றங்கரைக்குச் சென்றான்.

ஆயர் மகளிர் ஆற்றங்கரைக்குச் சென்று சிற்றில் செய்து சிறுசோறு அட்டு விளையாடிக்கொண்டிருந்தனர். அவர்களைத் தேடி அங்குச் சென்ற கண்ணன், "உங்கள் விளையாட்டுப் பொருள்களுள் யானும் ஒருவனல்லனோ? ஆதலின், என்னையும் சேர்த்துக்கொள்ளுங்கள்," என அவர்களை இறைஞ்சுகிறான். அவன் தீம்புகளால் பன்னாளும் துன்பப்பட்டு மனந்தளர்ந்த அவர்கள், அவனையும் தம்மோடு சேர்த்துக்கொண்டு விளையாட ஒருப்பட்டார்களில்லை. தங்கள் விருப்பத்தை நேராக அவனுக்குத் தெரிவிக்கும் தைரியம் அவர்களுக்கில்லை. ஆதலின், அவர்கள் விளையாட்டுப் பொருள்களை எடுத்துக்கொண்டு அவ்விடத்தை விட்டுச் செல்ல முற்பட்டார்கள். அவர்கள் எண்ணத்தைக் கண்ணன் நன்கு அறிந்துகொண்டான். அவர்களை அத்துணை எளிதில் விட்டுவிட அவன் மனம்

இடந்தருமா? எண்டிசையிலுள்ளாராலும் போற்றப் படுபவனும், மழைமேகம் போன்ற நிறமுடையவனுமான கண்ணன், அவ்வாற்றங்கரையிலுள்ள சேற்றை அவர்கள் மேல் எறிந்து, அவர்கள் வளைகளையும் ஆடைகளையும் கவர்ந்துகொண்டு, காற்றினும் விரைந்து சென்று, அவன் அகத்துள் நுழைந்துகொண்டான். அவர்கள் பன்முறையும் கண்ணு கண்ணு என அழைக்கினும், 'தருகிறேன், தந்திலேன்' என்னும் ஒரு வார்த்தையும் பகரான். 'இத்துன்பத்தைப் பொருமல் இன்று நாங்கள் முடியவேண்டுவதே!' என அரற்றுகின்றனர் ஆயர் மகளிர்.

> "ஆற்றி லிருந்து விளையாடு வோங்களைச்
> சேற்ருலெறிந்து வளைதுகில் கைக்கொண்டு,
> காற்றில் கடியனுய் ஓடி யகம்புக்கு,
> மாற்றமும் தாரானல் இன்று முற்றும்
> வளைத்திறம் பேசானல் இன்று முற்றும்."
>
> — பெரியாழ்வார் திருமொழி, 2-10-1.

## 20. யசோதை கண்ணனுக்குத் தன் பாலையூட்ட அஞ்சுதல்

அன்பிற்கனிந்த ஆயர் மகளிர் பலர் ஆயர்பாடியில் உளர். இளமங்கையர் கண்ணனுக்கு இனியரல்லரோ? அம்மங்கையரின் உண்மை அன்பே அவன் மனத்தைக் கவர்ந்தது. அவ்வன்பில் ஈடுபட்ட அவன், அவர்களுக்குத் தெரிந்தோ தெரியாமலோ, அவர்கள் இல்லங்களைச் சூழ்ந்து நிற்கிருன். சிலர், இளங்குழவிகளிடம் தமக்குள்ள அன்பின் காரணமாக, அவற்றைக் கிள்ளியும், அச்சுறுத்தியும், மெல்லென அடித்தும், அவைகளை அழ வைத்து மகிழ்தல் போன்று, அக்கண்ணனும் இளம்பெண்

களிடம் தனக்குள்ள அன்பைப் பலவகைக் குறும்புகளால் வெளிப்படுத்தி மகிழ்கிருன். அதன் உண்மையை அறிந்து கொள்ள வன்மையற்ற இளஞ்சிறுமியர், அவன் செய்யும் தீம்புகளுக்கு ஆற்ருது வருந்துகின்றனர்; தம் வருத்தத்தை யசோதையிடம் தெரிவிக்கின்றனர். ஆயினும், அம்மங்கையருக்கு அவன் மாட்டுள்ள அன்பு குறைந்திலது. அவனை நோக்கிக்கொண்டும் புன்னகை புரிந்துகொண்டுமே பேசுகின்றனர். இது நிற்க.

கண்ணன் இரவு முற்றும் இளங்குழவி போன்று யசோதையின் பக்கத்தில் படுத்துறங்கினுன். அவன் ஓரிமையும் தன்னைவிட்டு நீங்கியதாக அவள் அறியவில்லை. ஆயினும், விடிவதற்குள் அவன் இரவு இயற்றிய தீம்புகளைப் பொருத ஆயர்மகளிரின் அருளப்பாடுகள் பல, யசோதையின் செவியில் நுழைகின்றன. பூதனை, சகடாசுரன், பகாசுரன் முதலியோரை யாதொரு முயற்சியுமின்றி விண்ணுலகிற்கனுப்பிய வீரச்செயல்கள் அவள் கண்ணிற்படுகின்றன. இவற்றை நோக்கிய யசோதைக்கு அவன் உலகக் குழந்தைகளுள் ஒருவன் என நினைக்க இடந்தந்தில. இதுகாறும் சிறு மகன் எனக்கருதித் தன் பாலை ஊட்டி வளர்த்த அவள் இப்போது தன் பாலை அவனுக்கு ஊட்ட அஞ்சுகின்ருள்.

கண்ணன் திருவாய்ப்பாடியில் தோன்றிய காலத்தில் அவனோடு ஆயிரம் குழந்தைகள் பிறந்தார்கள் என்னும் ஒரு வழக்குண்டு. அவர்கள், ஸ்ரீராமபிரானை விட்டுப் பிரியாத இளையபெருமாளைப் போன்று அவனைச் சேர்ந்தே என்றும், எங்கும் உலவி வருவார்கள். அங்ஙனமிருப்பினும், அத்தனை பேருக்குள்ளும் அவன், மிக்க வேறுபாடு தோன்றவே கம்பீரமாக உலவி வருவான்.

கஞ்சனுல் வஞ்சனையாக அனுப்பப்பட்டு, கன்ருயும் விளவாயும் நின்ற அரக்கர்களை மாய்த்ததுமட்டுமோ?

நற்குண நற்பிறப்பையுடைய பெண்களைத் தன் வசப் படுத்தி, அவர்கள் ஆடையணிகளைக் கவர்ந்து, அவர்களை அலக்கழிக்கிறான்; புல்லாங்குழல் ஓசையால் இள மகளிரை ஒருங்கு திரட்டிக் காண்கிறான். அவர்தம் பெற்றோர் மோர் விற்கவும், கறவைகள் மேய்க்கவும் சென்றிருக்கும் காலம் நோக்கி, தன்னுடைய இனிய சொற்களால் அம்மங்கையரை மயக்கி, தான் விரும்பிய இடத்திற்குக் கொண்டுபோய், அவர்கள் அன்பினால் இன்பந்துய்க்கிறான். இவற்றைக் கண்ட யசோதை, "என் அருமை மகனே, உன்மீது பழி சுமத்துபவர் பல்லாயிரம் பேர். இந்த இடைக்குலப் பெண்களோ, பழி கூறப் பின் வாங்கார். பிறர் சொல்லும் தீச்சொற்களைப் பொறுத்துக் கொண்டு இவ்வூரில் வாழ என்னால் முடியவில்லை. பசும் புல் அழியவும் மிதியாத அருள் நிறைந்த நந்தகோபர் மகனா இவ்வாறு குற்றமிழைப்பது! ஒன்றிலும் பற்றாத சிசுபாலன் முதலியோரும் வசைகூற இடமேற்பட்டதே! இங்ஙனமிருப்பினும், உன் முகத்தை நோக்கியதும் எனக்கு எல்லாம் மறந்துவிடுகின்றன. உன்னைத் தண்டிக்கவும் எனக்கு மனம் செல்லவில்லை. யான்மட்டுமா? ஆயர் உன் மாட்டு மிக்க சினம் கொண்ட பிறகும் உன்னைக் கண்டதும் மயங்கி நின்றுவிடுகின்றனர். உன் வீரச் செயல்களையும், அன்புக் காரியங்களையும், சாதுரியத்தையும் சூழ்ந்து நோக்கின், உன்னை இவ்வுலகப் பிள்ளைகளோடு ஒப்பக் கூறுதல் யாங்ஙனம்? தெய்வத்தன்மை வாய்ந்த உன்னைக் கடவுள் என இப்போது நன்கு அறிந்து கொண்டேன்; இந்நிலையில் உன்னை எப்படி என் மகன் எனக் கருதுவேன்! இவ்வெண்ணந் தோன்றுதற்கு முன்பு, உன்னைப் பாராட்டிச் சீராட்டிப் பாலூட்டி வளர்த்தேன்; இனி என்பாலை உனக்கு ஊட்ட யான் மிகவும்

அஞ்சுகின்றேன்!" என்கிருள். இதை ஆழ்வார் கூறும் முறையை நோக்குக.

"கேளா ராயர் குலத்தவர் இப்பழி கெட்டேன் வாழ்வில்லை
நந்தன் காளாய்!"
— பெரியாழ்வார் திருமொழி, 3-1-8.

"அன்னே யுன்னை அறிந்துகொண்
டேன் உனக்கு அஞ்சுவன் அம்மந்தரவே."
— பெரியாழ்வார் திருமொழி, 3-1-1.

## 21. கண்ணனைக் கன்று மேய்க்க அனுப்பியதைக் குறித்து யசோதை வருந்துதல்

முன்பு கண்ணன் உலகக் குழந்தைகள் போலல்லாமல் பல மாயச்செயல்களையும் குறும்புகளையும் புரிந்தான். அவற்றைக் கண்ட யசோதை, மனம் நொந்து துன்புறுகிருள்; 'குடிக்குப் பழியையும் விளைவித்துப் பிறரால் வசையும் பெறுகின்ருனே!' என நெஞ்சம் கலங்கினுள்; 'இப்படியும் ஒரு பிள்ளை தோன்றுமா!' என வெறுத்தாள். இப்போதோ, யசோதையின் மனம் முற்றும் மாறுபாட்டை அடைகிறது. 'இதற்குக் காரணம், தாய் மனத்தன்மையா, உலகப் போக்கா? யசோதையின் புண்ணியப் பெருக்கா, இளமங்கையரின் இன்னலமா?' என நோக்கின், இவற்றுள் ஒன்றும் இதற்குக் காரணமன்று எனத் தோன்றும். பின் யாதோ எனின், இவ்விளவலின் மாயையே இதற்கு முதன்மையாகும்! இன்றேல், மாயனையே மகனுக அடைய நோற்ற யசோதையின் தவம் முற்றுப் பெறுதல் யாங்ஙனம்? கோவிந்தன் லீலைகளை உலகம் உணர்தல் எவ்வாறு? பெரியாழ்வாரின் வாழ்க்கை பெட்புடன் கழிவது எப்படி?

கண்ணனின் பல விதச் செயல்களைக் கண்டு அவனுக்குப் பாலூட்ட அச்சமுற்று நின்ற யசோதை, இங்கு முன் கூறியவாறு வேறுபட்ட நிலையை அடைகிருள். அது யாது? அஃது அவள் முன் எண்ணத்திற்கு முற்றும் முரணுனது! முன் அவனுடைய எச்செயல்கள் தொல்லை யெனக் கருதினளோ, அச்செயல்களையே, அவன் செய்ய வேண்டுமென்று இப்போது விரும்புகிருள்; 'அச்செயல் களில் அவனைப் புகவிடுதற்கில்லையே!' என இப்போது வருந்துகிருள். ஈதன்றே வியப்பினும் வியப்பு!

இடையர்களுள் பெரியார் கறவைகளையும், சிறி யார் கன்றுகளையும் கானங்கொண்டு போய் மேய்த்து வரல் அவ்வாயர் பாடியின் பழக்கம். அதன்படியே கண்ணன் கன்றுகளைக் கொண்டு புல் நிறைந்த வெளி யிடங்களுக்குச் சென்முன். பசு மேய்ப்பவர் செல்வது காலையும், வீடு திரும்புவது மாலையுமல்லவா? இதில் எத்தனை மணி நேரம் இடைப்பொழுது உள்ளது? இவ்வளவு நேரத்தையும் தன் மகனைக் காணுமலும், அவன் சிறு விளையாடல்களைப் பாராமலும் இருக்க யசோதைக்கு இயலவில்லை. இதுவே அவள் துயரத்திற்குக் காரணமாய் நின்றது. அவள் பெரிதும் வருந்தத் தொடங்கினுள்.

"கண்ணுக்கினிய கண்ணனை, ஆயர்களுக்குக் கொழுந்துபோன்ற கோவலனை, சிறுமிகளின் சிற்றில் சிதைத்து வள்ளிக்கொடி போன்ற குலமகளிரோடு விளை யாடுமாறு யான் விட்டேனில்லை! கொடிய மிருகங்கள் திரிவதும், கள்ளியும் உலர்வதும், ஒதுங்க நிழலற்றதும், வெப்ப மிகுதியினுல் உடைந்த கற்கள் காலில் குத்துவது மான பாலை நிலத்திற்குக் குடையும் செருப்புங்கூடக் கொடாமல் என் இளமகனை அனுப்பினேன். என் கொடுமை எத்தகையது! என்னைப்போன்ற கொடியா ளும், பாவியும் இவ்வுலகில் உண்டோ!" என யசோதை

தன்மகன் மாட்டு இரக்கங்கொண்டு, 'ஐயோ! ஐயோ!' என இரங்குகிருள் என்கிருர் பெரியாழ்வார்.

"மிடறுமெழு மெழுத்தோட வெண்ணெய் விழுங்கிப்போய்
படிறுபல செய்திப் பாடிஎங்கும் திரியாமே
கடிறு பலதிரிகா னதரிடைக் கன்றின்பின்
இடறவென் பிள்ளையைப் போக்கினேன் எல்லே பாவமே!"

— பெரியாழ்வார் திருமொழி, 3-2-6.

"குடையும் செருப்புங்கொடா தேதாமோ தரனைநான்
உடையும் கடியனஊன்றுவெம் பரற்களுடைக்
கடியவெங் கானிடைக் காலடிநோவக் கன்றின்பின்
கொடியே னென்பிள்ளையைப் போக்கினேன்எல்லேபாவமே"

— பெரியாழ்வார் திருமொழி, 3-2-9.

## 22. கண்ணன் வரவுகண்டு யசோதை மகிழ்தல்

இன்னணம் வருந்திக்கொண்டிருந்த யசோதைக்கு வீட்டுக் காரியங்களின் மேல் மனம் செல்லுமா? துயில் கொள்ள முடியுமா? பிறரோடு வார்த்தையாட நாவெழுமா? உணவு உள்ளிறங்குமா? இல்லத்தின் உள்ளேயே இருக்க மனமிசையுமா? அவனோடு பல பிள்ளைகள் காடுசென்றிருப்பினும், அவளுக்குத் தன் பிள்ளையைப் பற்றித்தானே கவலை! தன் பிள்ளையின் அருமை பெருமைகள்தாமே அவளுக்குத் தெரியும்! அவள் மனத்தைப் போன்றே அவள் உடலும் ஓரிடத்தில் நிலைபெறவில்லை, பன்முறை தெருவை அடைகிருள். அவள் கண் பார்வை அத்தெருக்கோடி வரையும் செல்லுகிறது; மகனைக் காணுமையின் திரும்பிவிடுகிறது. பின்பு உட்செல்கிருள்; ஆயினும், அவள் நெஞ்சம் மட்டும் தெருவை விட்டு

நீங்கவே இல்லை; பின்பு வெற்றுடல் மட்டும் உள்ளே போதருகிறது. இங்ஙனம் அவள் மனமும் உடலும் ஊசலாடிக்கொண்டிருந்தன.

இவ்வாறு துடித்துக்கொண்டிருக்கும் யசோதை, தொலைவில் வரும் கண்ணனைக் கண்டாள். ஒரு காதில் தான் இட்ட திரியும், மற்றொரு காதில் செங்காந்தள் மலரும் அமைந்துள்ளன. இடையில் பட்டாடையும் கச்சும், கழுத்தில் மூன்றும் பிறையென வளைந்து ஒளி வீசும் முத்தாரமும் விளங்குகின்றன. முடியில் கோடற் பூக்கள் பொருந்தியுள்ளன. அவ்வுருவம் யசோதைக்குப் படத்தில் எழுதிய சித்திரம் எனத் தோன்றிற்று. அவ் வழகு அவள் உள்ளத்தை அள்ளியது. அவளுக்கு உவப்பு உள்ளடங்கவில்லை. பக்கத்தில் உள்ளாரை விளித்தாள். "என்மகன் பேரழகை நோக்குங்கள்! இவனைப் போன்ற மகனைப் பெற்றார் ஞாலத்தில் வேறு யார்? யான் ஒருத்தியே அல்லவா?" என வியப்புடன் விளம்புகின்றாள் யசோதை.

"இத்துணை நலமடைந்த என் பிள்ளைக்குத் தீமை புரியச் சிலர் முற்படுகின்றனர். அவர், கஞ்சனால் அனுப்பப் பட்ட அரக்கர் போன்று அழிவது திண்ணம். இவன் வீரம் கொடியாரை வாழ்விக்குமோ? இவன் பாஞ்சசன் னியத்தை முழக்கிப் பகைவரை வாட்டும் ஆண் சிங்க மல்லனோ? இதுமட்டுமா? இவன் சீதையின் மணாளன்; இந்திரனுக்கிட்ட சோற்றுக் குவியலையும் கறித்திரளையும் உண்டு மகிழ்ந்தவன். இத்தகையானைத் திருவடியும் கண்ணும் சிவக்கக் காட்டிற்கு அனுப்பிய என்னினும் கொடியவள் உண்டோ!" என வருத்தமும் வியப்பும் தோன்றத் தன் மகனைக் காட்டிக் காட்டிப் பேசுகின்றாள் யசோதை. இதில் பெரியாழ்வார் துய்க்கும் இன்பமே இன்பம்!

"சீலைக் குதம்பை ஒருகா தொருகாது செந்நிறமேல் தோன்றிப்பூ
கோலப் பணைக்கச்சும் கூறை யுடையும் குளிர்முத்தின் கோடாலமும்
காலிப் பின்னே வருகின்ற கடல்வண்ணன் வேடத்தை வந்து காணீர்
ஞாலத்துப் புத்திரனைப் பெற்றார் நங்கைமீர் நானேமற் றாருமில்லை."

— பெரியாழ்வார் திருமொழி, 3-3-1.

## 23. காலிப் பின் வரும் கண்ணனைக் கண்டு கன்னியர் காதல் கொள்ளுதல்

"மென்மை வாய்ந்து வெண்ணெய் உண்டு வளரும் அக் கண்ணனை வெப்பம் மிகுந்த கற்பாங்கான காட்டிற்கு அனுப்பினேனே! பெற்று வளர்த்த தாயும் இங்ஙனம் செய்வேனோ! என் நெஞ்சுதான் யாறையோ!" என முன் ஆற்றொணாத் துயரைக் கொண்ட யசோதை, "இனி ஒரு போதும் அவனைக் கானகஞ் செல்ல விடேன்!" எனத் தீர்மானித்தாள்; அவ்வாறே பிள்ளையை எங்கும் போக வேண்டா எனத் திட்டம் செய்தாள். அவள் சொல்லிற்குக் கட்டுப்பட்ட கண்ணன் ஏழு நாட்கள் வரையும் எங்கும் சென்றிலன். ஆயினும், அவன் தீம்புகள் மட்டும் குறைந்தில. அறிவு மிகுந்த குழந்தை ஓரிடத்தில் அடங்கிக் கிடக்குமா? அதன் ஞானத்திற்கேற்பப் பல நாடகங்களை நடிக்குமன்றோ? இவை தாய்க்கு அத்துணை இன்னலைத் தந்தில. ஏழாம் நாள் அவன் பிறந்த நாளாகிய திருவோணம் கொண்டாடப்பட்டது. அதற்குப் பின்பு, கண்ணன் இல்லத்தில் அமைதியாய் இருக்க விரும்பிலன். அவனை அடக்கி வைக்க யசோதைக்கும் முடியவில்லை. என்ன செய்வாள் பாவம்! அவனைக் கன்று மேய்த்தற்கு அனுப்ப ஒருவாறு ஒருப்பட்டாள். அவன் தன்னொத்த இடைச் சிறாருடனும் காலிகளுடனும் காடு சென்றான்.

சென்ற இடத்தில் அவன் அப்பசுக்களுக்குப் புல்லும்

நீரும் நிறைய ஊட்டினுன்; அவற்றை நிழலில் உறங்க விட்டான்; பொழுதுபட்டதும் வீடு திரும்பினுன். ஆக்கள் வயிறு நிரம்பப் புல் மேய்ந்து திளைத்திருந்ததைக் கண்ட கண்ணனுக்கு ஆனந்தம் பொங்கிற்று. அவ்வானந்தப் பெருக்கால் மயிற்பீலியால் தன்னை அலங்கரித்துக்கொண்டான். உடைவாள், சுண்டுவில், செண்டுகோல் முதலியன அவனிடம் ஒளிருகின்றன. ஒரு கையால் தோழன் தோளையும், மற்ருெரு கையால் பசுநிரை மீள ஒலித்த சங்கையும் பிடித்துக்கொண்டான். வலக் காதின்மேல் தோன்றிப் பூவும் இடக் காதில் காட்டு மல்லிகையும் தொங்கிக்கொண்டிருக்கின்றன. நெற்றியில் அழகிய சிந்தூரம் விளங்கத் தோழர்கள் குடை பிடிக்கப் புல்லாங்குழலைத் தன் செந்தாமரையன்ன வாயில் வைத்து ஊதிக்கொண்டு வருகிருன்.

இங்ஙனம் முழக்கத்தோடும், பெருங்கூட்டமாகிய இடைப்பிள்ளைகளோடும் மேகக்கூட்டம் தரைமேல் நடந்து வருகிறதோ என்னுமாறு வந்துகொண்டிருந்தான் கண்ணன். இப்பெரிய ஓசை இளம்பெண்களை வெளியில் கொணர்ந்தது. அவனைக் கண்ட இளம்பெண்டிர் பலரும் பலவித நிலையை அடைந்தனர்.

சிலர், தத்தம் இல்லின் வாயிலில் நின்று, தம் நெஞ்சை மட்டும் கண்ணனோடு செல்ல விட்டு உணவையும் விரும்பாது நின்ற இடத்திலேயே நின்றனர்.

சிலர், "இவனை ஒப்பாரை என்றும் எங்கும் யாம் கண்டறியோம்! எங்கள் வளைகள் தாமாகக் கழல்கின்றனவே! ஈதென்ன புதுமை! இவன் எங்கள் நெஞ்சைக் கவர்ந்துவிட்டனன்! இனி யாங்கள் இவனுக்கன்றி மற்றெவர்க்கும் உரிமையுடையோமல்லோம்!" என்றனர்.

சிலர், "இவன் அழகு நம்மை ஈர்க்கிறது! இவனை மேல்செல்லாதவாறு தடுத்து, இவன் இயற்கையழகையும்

செயற்கை ஒப்பனையையும் கண்டாற்ருன் நம் நெஞ்சம் திருப்தி யடையும். அதற்கோர் உபாயம் உள்ளது. 'நீ எம்முடைய பந்தைக் கவர்ந்தாய்,' என்று ஒரு போக்குக் காட்டி இவனை மறித்து நிற்கலாம். அவ்வமயம் இவன் நம்மை விட்டுப் போகத் துணியாது புன்னகை புரிந்து நிற்பான். அதைக் கண்டு நாம் இன்பந் துய்க்கலாம்," என்றனர்.

இதன் இடையில், "அந்தோ! என் மகள் நிறை யழிந்து நிற்கின்றனளே! என் அரும்புதல்வியின் பெண்மை எங்கு ஓடி ஒளிந்தது! என் ஒரு குடிக்கொரு மகள் தன் துகிலும் வளையும் சரிவதையும் அறிகின்ருளில்லையே!" என மகளிரைப் பெற்ருர் கதறுகின்றனர். இந்நிலையில் கண்ணன் உல்லாசமாக வீதி வழியே போதருகின்ருன்.

"தழைகளும் தொங்கலும் ததும்பி எங்கும்
தண்ணுமை யெக்கம்மத் தளிதாழ் பீலி
குழல்களும் கீதமு மாகி யெங்கும்
கோவிந்தன் வருகின்ற கூட்டம் கண்டு
மழைகொலோ வருகின்ற தென்று சொல்லி
மங்கைமார் சாலக வாசல் பற்றி
நுழைவனர் நிற்பன ராகி எங்கும்
உள்ளம்விட் டுண்மறந் தொழிந்தனரே"

— பெரியாழ்வார் திருமொழி, 3-4-1.

"சுரிகையும் தெறிவில்லும் செண்டு கோலும்
மேலாடை யும்தோழன் மார்கொண் டோட
ஒருகையா லொருவன்றன் தோளை யூன்றி
ஆநிரை யினம்மீளக் குறித்த சங்கம்
வருகையில் வாடிய பிள்ளை கண்ணன்
மஞ்சளும் மேனியும் வடிவும் கண்டாள்

அருகேநின் ருளென்பெண் நோக்கிக் கண்டாள்
அதுகண்டிவ் வூரொன்று புணர்க்கின்றதே !"

— பெரியாழ்வார் திருமொழி, 3-4-3.

" அந்தமொன் றில்லாத ஆயப் பிள்ளை
அறிந்தறிந் திவ்வீதி போது மாகில்
பந்துகொண் டானென்று வளைத்து வைத்துப்
பவளவாய் முறுவலும் காண்போம் தோழீ! "

— பெரியாழ்வார் திருமொழி, 3-4-6.

" சாலப்பன் னிரைப்பின்னே தழைக்கா வின்கீழ்த்
தன்திரு மேனிநின் றொளிதிகழ
நீலநன் னறுங்குஞ்சி நேத்திரத்தா
லணிந்துபல் லாயர் குழாம் நடுவே
கோலச்செந் தாமரைக் கண்மிளிரக்
குழலூதி யிசைபாடிக் குனித்து ஆயரோடு
ஆலித்து வருகின்ற ஆயப்பிள்ளை
அழகுகண் டென்மகள் அயர்க்கின்றதே !"

— பெரியாழ்வார் திருமொழி, 3-4-7.

" வலங்காதின் மேல்தோன்றிப் பூவணிந்து
மல்லிகை வனமாலை மௌவல்மாலை
சிலிங்காரத் தால்குழல் தாழவிட்டுத்
தீங்குழல் வாய்மடுத் தூதியூதி
அலங்காரத் தால்வரு மாயப்பிள்ளை
அழகுகண் டென்மக ளாசைப்பட்டு
விலங்கிநில் லாதெதிர் நின்றுகண்டீர்
வெள்வளை கழன்றுமெய்ம் மெலிகின்றதே !"

— பெரியாழ்வார் திருமொழி, 3-4-9.

# 24. கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்தல்

கண்ணனையே உறுதுணை எனக் கருதியிருக்கும் ஆயர்கள் தங்கள் பசுக்களுக்கு நிறையப் புல்லும் நீரும் தந்து காத்த இந்திரனுக்குத் தங்கள் நன்றியைச் செலுத்தக் கருதினார்கள். அதன்பொருட்டு அவர்கள், பொங்கல் முதலிய அன்னங்களையும், பல பட்சணங்களையும் கொண்டு கோவர்த்தனம் என்னும் மலைக்குச் சென்று, இந்திரனை ஆராதிக்கத் தீர்மானித்து மலைமீதேறினார்கள். அவர்கள் இந்திரனைத் தொழுதலைக் கண்ணன் விரும்பவில்லை. ஏன்? தன்னையே நம்பி இருக்கும் அவர்கள், தன் கட்டளையைப் பின்பற்றித் தன் உதவியினாலே உயிர்களுக்கு நலம்புரியும் ஒரு சிறு தெய்வத்திற்குக் கட்டுப்பட்டிருத்தல் கண்ணனுக்குப் பிரியமில்லை. ஆதலின், அவன் ஆயரை நோக்கி, "நீங்கள் இன்று கொண்டுவந்த இவ்வுணவுப் பொருள்கள் இந்திரனுக்கன்றோ சமர்ப்பிக்கப் போகின்றீர்கள்? அவன் இவற்றை எல்லாம் உண்டுவிடுவானோ?" எனக் கேட்டான். ஆயர்கள், "இந்திரன் என்றைக்கும் உண்ணும் வழக்கமில்லை. வேறு எந்தத் தெய்வந்தான் உண்ணும்?" எனக் கேட்டார்கள். கண்ணன், "யான் கூறும் தெய்வம் நீங்கள் இடும் யாவற்றையும் உண்டுவிடும். அஃது உங்களுக்குச் சம்மதந்தானா?" என வினவினான். அஃது அவர்களை வியப்பிலாழ்த்திற்று. "அங்ஙனமாயின், அந்தத் தெய்வத்திற்கே நாங்கள் இடுகிறோம்," என யாவரும் ஒருங்கே கத்தினர். கண்ணன், "இம்மலை இவற்றை உண்ணவேண்டுமென நினைத்து உங்கள் கண்ணை மூடிக் கொண்டு தியானியுங்கள். யான் சொல்லும்வரை உங்கள் கண்ணைத் திறவாதேயுங்கள்," என்றான். அவர்கள் அவ்வாறே செய்தார்கள்.

சிறிது நேரம் கழித்துக் கண்ணன், அவர்களைக் கண்ணைத்திறக்குமாறு பணித்தான். அவர்கள் கண்ணைத் திறந்து சுற்றும் முற்றும் நோக்குகிறார்கள். உணவு நிறைந்திருந்த பாத்திரங்கள் யாவும் வெறுங்கலங்களாய் இருந்தன. ஒன்றிலும் ஒரு சோற்றுப் பருக்கையும் காணப்படவில்லை. குழந்தைகளோ பசியினால் கத்துகின்றார்கள். அவர்களுக்கும் உணவு இல்லை. என் செய்வார்கள் பாவம்! "கண்ணா, என்ன செய்வோம்! நீ கூறிய தெய்வம் எல்லாம் உண்டுவிட்டதே! இஃது எங்களுக்கு மிக்க மகிழ்வே ஆயினும், உணவில்லாமல் பட்டினி கிடக்க எங்களால் முடியவில்லையே! அத்தெய்வத்தை உண்ணுமாறு செய்த நீதான் எங்களுக்கு உணவைத் தரவேண்டும்," எனக் கத்தினர். "நீங்கள் இட்ட உணவை உண்ட தெய்வம் ஏன் உங்களுக்கு உணவைத் தாராது? நீங்கள் முன்போலக் கண்மூடித் தியானியுங்கள்," என்றான் கண்ணன். அவர்கள் அப்படியே செய்து கண் திறந்த போது வெறும் பாத்திரங்களிலெல்லாம் சோறு நிரம்பி இருந்தது. ஆயர்கள் மகிழ்விற்கு அளவே இல்லை. யாவரும் உண்டு மகிழ்ந்தனர். இது நிற்க.

வழக்கம்போலத் தனக்கு வரும் உணவு வாராமற் போகவே, இந்திரன் தன் ஆயிரங்கண்களும் சிவக்குமாறு சினங்கொண்டு, மேகங்களை ஏவினான். அவை பெரு மழையைப் பெய்யத்தொடங்கின. அவை நீரை மட்டுமா பொழிந்தன! கற்களையும், நெருப்பையும் வாரி வாரி இறைத்தன. ஆயர் அலறுகின்றனர். கறவைகளும் கன்றுகளும் தவிக்கின்றன. கண்ணன் பார்த்தான். தன்னை ஆஸ்ரியித்த அன்பர்கள் துன்புற அவன் பொறுப்பனோ! உடனே அம்மலையை மிக எளிதாக அடியோடு பெயர்த்து எடுத்தான்; அதைத் தலைகீழாகக் கவிழ்த்தான்; நீலரத்தினமன்ன நிறமுடைய நீண்ட தோளைக்

காம்பாகவும், சிவந்த தாமரைபோன்ற கைவிரல்கள் ஐந்தையும் அக்காம்பின் அடிப்பாகமாகவும் கொண்டு அம் மலையைக் குடையெனப் பிடித்து நின்றான். அவ்வமயம் அம்மலையில் இருந்த பருத்த மரங்கள், பெரிய மிருகங்கள் யாவும் தலைகீழாயின. ஆனால், அங்குள்ள தவசிகள் மேற்கூறிய மரம் முதலியன போன்று தலைகீழாக விழுந் தார்களோ, அன்றித் தங்கள் செவியையும் கண்ணையும் புதைத்துக்கொண்டு கிடந்தார்களோ, அறிகிலோம்! ஏனெனில், விழுந்திருப்பரேல், கண்ணன் திருக்குழ லோசையையும், அவன் அழகையும், அவன் நிற்கும் நிலை யையும் கண்டு, "நாம் தவஞ் செய்ததற்குத் தக்க பலத்தைப் பெற்றுவிட்டோம்!" என மகிழ்ந்து நிற்பர். இத்துணைப் பெருமழை ஏழு நாட்கள் பொழியினும் கண்ணன் சிறிதும் தளர்ந்தானில்லை.

இந்திரனுக்கோ தளர்ச்சி ஏற்பட்டுவிட்டது. இனி மேல் மேகங்களைத் தூண்டிப்பெய்விக்கமுடியாது என்னும் நிலையை அவன் அடைந்துவிட்டான்; "இவ்வளவு பெருமழைக்கும் ஆயர்கள் தளராதிருந்ததற்குக் காரணம் யாது?" என அவன் உற்று நோக்கினான்; இது கண்ணன் கைத்திறமென்பதை அப்போதுதான் தெரிந்து கொண்டான். அவனுக்கு அச்சம் ஏற்பட்டது. உடனே பெய்தலை நிறுத்தினான்; அவன் ஓடோடியும் வந்து, "யான் முன்பின் யோசியாமல் செய்த பிழையைப் பொறுக்க வேண்டும்!" எனக் கண்ணனை மன்றாடி, அவனடியில் வீழ்ந்தான். இந்திரனுக்கு மன்னிப்புக் கொடுக்கப்பட்டது. ஆயரும் கன்று காலிகளும் சுகமே இல்லஞ் சேர்ந்தார்கள். அக்காலத்தில் நம் பிள்ளையாகிய கண்ணன் அம்மலையைத் தூக்கி நின்று மழையைக் காத்ததைப் பெரியாழ்வார் தம் காலத்திலேதான் நடந்ததென அனுபவிக்கிறார்.

" செப்பா டுடைய திருமா லவன்றன்
செந்தா மரைக்கை விரலைந் தினையும்
கப்பாக மடுத்து மணிநெ டுந்தோள்
காம்பா கக்கொடுத் துக்கவித் தமலை "

— பெரியாழ்வார் திருமொழி, 3-5-6.

" இலைவேய் குரம்பைத் தவமா முனிவர்
இருந்தார் நடுவே சென்றணர் சொறியக்
கொலைவாய்ச் சினவேங் கைகள்நின் றுறங்கும்
கோவர்த் தனமென்னும் கொற்றக் குடையே !"

— பெரியாழ்வார் திருமொழி, 3-5-8.

## 25. குழலூதும் இனிமை

கண்ணனையே பெருந்துணையாகக் கருதி அவனிடமே அன்பு கொண்டிருக்கும் ஆயர் தம் விருப்பம் நிறைவேறப் பிற தெய்வங்களின் காலில் விழுவது கண்ணனுக்குப் பெருங் குறையாகக் காணப்பட்டது. அதனால், அவர்கள் கொணர்ந்த பண்டங்களை இந்திரனுக்கு இடாமல் மலைக்குச் சமர்ப்பிக்குமாறு செய்து, அதன் மூலமாக அவைகளைத் தான் ஏற்று, அவர்களுக்கு இந்திரனால் ஏற்பட்ட இன்னலைக் களைந்து இன்புற்றான் எனப் பெரியாழ்வார் முன் திருமொழியில் அனுபவித்தார்.

இவர் இத்திருமொழியில் கண்ணன் இனிமை வாய்ந்த குழலை ஊதி யாவரையும் தன் வசப்படுத்தும் சிறப்பைக் கூறி இன்பம் துய்க்கின்றார்.

இங்குக் கண்ணன் தன்னிடம் உண்மை அன்புடையார் யாவரையும் ஒருங்கே கண்டு ஆனந்திக்கக் கருதுகிறான்; அதன் காரணமாகத் தனிமையான விருந்தாவனம் சென்று குழலை மிக்க இனிமை தோன்ற இசைக்கின்றான். இவ்வினிய ஓசை ஆயர் மகளிர் செவியில் நுழைகின்றது.

அவர்கள் அடிக்கடிக் கண்ணனை நோக்கிச் செல்லுகின்றமையின், அங்ஙனம் செல்லாது அவர்களைத் தடுத்தற் பொருட்டுச் சுற்றத்தினர் வாயிலில் காவல் இருக்கின்றனர். ஆனால், கண்ணன் குழலோசையைக் கேட்டவுடன், அவர்கள் கண்கள் வேறொன்றையும் நோக்கில. அவர்கள் மனம் மற்றொன்றையும் நாடில. யார் தம்மை நோக்குகின்றனர்; யார் தம்மை மறுக்கின்றனர் என்பது அவர்கள் புத்தியில் புலப்பட்டில. எங்ஙனமோ அக்காவல்களையும் கடந்து சென்று கண்ணனைச் சூழ்ந்துகொண்டார்கள். அங்ஙனம் செல்லுங்கால், சிலர் அரை குலையத் தலை குலைய ஓடினர். அந்நிலையில் அவர்தம் ஆடைகளும் நெகிழ்ந்தன. ஆயினும், அவற்றை அங்ஙனமே நெகிழ விட அவர்கள் பெண்மை இடந்தந்திலது. அப்பெண் தன்மை அவர்களை விட்டு நீங்காமையின், அவர்கள் நெகிழ்ந்த உடைகளை ஒரு கையால் தாங்கிக்கொண்டு, கண்ணன் முன் நின்றார்கள். அவர்கள் நெஞ்சு உருகிற்று; கண்கள் நீர் பொழிந்தன.

கண்ணன் அங்குமிங்கும் உலாவி உலாவிக் குழலூதுகிறான். அவன் காலடிகளும், தலையசைவும் பண்ணுட்கள் பரத நாட்டியத்தில் பண்பட்டவரும் பின்னிடுமாறு காணப்பட்டன. அந்நடன இன்னலத்தையும், குழலோசையையும் துய்த்த மேனகை திலோத்தமை முதலிய தேவமாதரும், "இவன் முன்னம் நம் நடனமும் பாடலும் எம்மாத்திரம்! நம்முடைய கலையும் ஒரு கலையாமோ!" என நாணி நின்றனர்.

சிவந்த கண்களையும், திரண்டு உருண்ட தோள்களையுமுடைய கண்ணன், புல்லாங்குழலைத் தன் செவ்வாயில் இருத்தித் துளைகளில் தன் அழகிய கைவிரல்கள் மாறி மாறிச்செல்ல, கண்கள் அதன்மேல் பாய, வாய் கொப்பளிப்பக் குழலூதினபோது, கின்னரர், கிம்புருடர்,

தும்புருவர் முதலியவர் அவன் குழலோசையில் ஈடு பட்டுத் தத்தம் வாத்தியங்களை மறப்பாராயினர். மற்றும் தேவரும் கண்ணனையே பின் தொடர்ந்தனர். பறவைகள் கண்ணனைச் சுற்றிக்கொண்டு படுகாடு கிடந்தன. பசு நிரைகள் தம்மைத் தாம் மறந்து, செவியையும் அசைக் காமல் நின்றன. மான்களோ, இரை தேடிற்றில. மரங் களும் மயங்கிக் கிடந்தன.

"மடமயில்களொடு மான்பிணை போலே
மங்கைமார்கள் மலர்க்கூந்த லவிழ
உடைநெகிழவோர் கையாற்றுகில் பற்றி
ஒல்கியோடரிக் கணோட நின்றனரே."

— பெரியாழ்வார் திருமொழி, 3-6-2.

"மேனகையோடு திலோத்தமை யரம்பை
யுருப்பசியரவர் வெள்கி மயங்கி
வானகம்படியில் வாய்திறப் பின்றி
யாடல்பாடலவை மாறினர் தாமே."

— பெரியாழ்வார் திருமொழி, 3-6-4.

"சிறுவிரல்கள் தடவிப் பரிமாறச்
செங்கண் கோடச் செய்யவாய்க் கொப்பளிப்பக்
குறுவெயர்ப் புருவம் கூடலிப்பக்
கோவிந்தன் குழல்கொ டூதினபோது
பறவையின் கணங்கள் கூடுதுறந்து
வந்துசூழ்ந்து படுகாடு கிடப்பக்
கறவையின் கணங்கள் கால்பரப்பிட்டுக்
கவிழ்ந்திறங்கிச் செவியாட்டகில் லாவே."

— பெரியாழ்வார் திருமொழி, 3-6-8.

இறைவன் உயிர்கள் மாட்டுள்ள அருளினால் சின்னஞ் சிறு குழவியாய் உலகில் தோன்றி, மக்களைத் தன் வய மாக்குதற்கேற்ற பல செயல்களையும் புரிந்து, இறுதியில் தன் இனிய தன்மையினால் எல்லா உயிர்களும் ஒருங்கே திரளுமாறு செய்து, அவைகளுக்கு இன்பத்தையூட்டித் தானும் இன்பத்தை அனுபவிக்கிறான் என்பதே இப்பிள் ளைத் தமிழின் நுட்பப் பொருளாகும்.